
1.1.2019
ராணி முத்து
ரூ.10
இந்திரா சௌந்தர்ராஜன்
சாமி யார்?

# முன்னுரை

வணக்கம்!

'சாமியார்?' என்னும் இந்த நாவல், சாமியாரைப் பற்றியது மட்டுமல்ல... உண்மையில் 'சாமி... யார்?' என்று கேள்வி கேட்டு சிந்தித்து விடை காண முயற்சிக்கும் ஒன்றாகவும் விளங்கும். 'அஷ்டமாசித்து'களில் ஒரு சித்தை இதில் அலசி உள்ளேன்.

'மாத நாவல்கள் வெறுமனே பொழுது போக்க உதவும். அதற்கு மேல் அதில் எதுவும் எதிர்பார்க்க எதுவுமில்லை' என்னும் கருத்தை மாற்ற இப்படைப்பு உதவலாம். வாசியுங்கள்... தானாகவேத் யோசிக்கத் தொடங்கிவிடுவீர்கள்.

எப்போது, 'ராணி முத்து'வில் என் நாவல் வந்தாலும் பெங்களூர் சேகரிடம் இருந்து முதல் 'போன்' வந்துவிடும். மனதார பாராட்டுவார். அவரைப் போன்ற என் வாசகர்களுக்கு இந்நாவல் சமர்ப்பணம்!


அன்புடன்,

இந்திரா சௌந்தர்ராஜன்

# சாமி யார்?

இந்திரா சௌந்தர்ராஜன்

1



பஞ்ச பூதங்களின் கூட்டுக் கலவைதான் நமது உடம்பு. உண்ணும் உணவாலும், செய்யும் உடற்பயிற்சிகளாலும் இதற்கு வலு ஏற்படுகிறது.

அந்த வலுவால் அதிகபட்சம் ஒரு புலியை எதிர்க்கலாம். இல்லை பத்துப் பேரை அடித்து நொறுக்கலாம். பெரும் பாறைகளைத் தூக்கிப் போடலாம். மரங்களைப் பிளக்கலாம்.

ஆனால், ஈர்க்குச்சியைவிட மெலிதான - 'யோக கரிமா சித்தி'யைக் கற்றுவிட்டால் அவனது சுட்டு விரலைக்கூட இந்த பலசாலிகளால் அசைக்க முடியாது!

பரபரப்பான காலை வேளை...

நகைக்கடை பஜாரில் நல்ல கூட்டம். 'அட்சய திரிதியை' வேறு! 'இன்று தங்கம் வாங்கினால் அது தங்கிப் பெருகும்' என்கிற சாஸ்திர நம்பிக்கை, நகைக்கடைகளை நல்ல கூட்டத்தில் நிரப்பி இருந்தது.

இந்தியா ஒரு ஏழை நாடு என்று யாராவது சொன்னால் கைகொட்டிச் சிரிக்கலாம்.

அதனால்தானோ என்னவோ அய்யனாருக்கும் சிரிப்பு வந்தது!

சிரித்துக்கொண்டே ஒவ்வொரு நகைக்கடையாக 'சீட்டு'ப் பணத்துக்காக ஏறி இறங்கிக்கொண்டிருந்தான்.

வாழ்க 'அட்சய திரிதியை'!

ஒரு கடைக்காரர்கூட 'நாளைக்கு வா' என்றோ... 'அடுத்த வாரம் பார்க்கலாம்...' என்றோ சொல்லவில்லை.

அவனது தோல்பையும் ரூபாய் நோட்டுகளாலேயே நிரம்பிக்கொண்டிருந்தது.

ஒரு கட்டத்தில் தொகை ஐம்பதாயிரத்தைக் கடந்துவிட்டது.

'வரலாறு காணாத வசூல்!'

பிரபல சினிமா நடிகர்களின் படங்களுக்கு இப்படித்தான் விளம்பரம் செய்வார்கள்.

உண்மையில் அதெல்லாம் வசூலே இல்லை. இதுதான் வசூல் என்று தோன்றியது!

இன்னும் ஒரு கடைதான் பாக்கி. 'வள்ளிநாயகம் ஜூவல்லரி' என்கிற அந்த கடைக்குள் அக்குளில் தோல்பையை அடக்கிக்கொண்டு அவன் நுழைந்தபோது உள்ளே நிற்க இடம் இல்லை.

'டிஸ்ப்ளே ஷெல்ப்'புகளில் 'வெல்வெட்' பெட்டிகளில் அடங்கிக் கிடந்த மோதிரங்களையும், வளையல்களையும் நீண்ட கடை மேசை மேல் வைத்து... எடை எவ்வளவு-சேதாரம் எவ்வளவு போகும் என்று விசாரித்து கணக்கு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கடை முழுக்க குளிர்சாதன வசதி செய்யப்பட்டிருந்தும் கூட்டம் அதிகமாகி உஷ்ண மூச்சால் 'ஏ.சி.'யே சூடானது போல் தோன்றியது அய்யனாருக்கு!

கல்லாவில் அமர்ந்திருந்தார் வள்ளிநாயகம். அய்யனாரைப் பார்த்து சிரித்தபடியே முன்னால் வரச் சொன்னார்.

பலரை தள்ளிக்கொண்டும், முட்டி மோதிக்கொண்டுமே முன்னால் செல்ல முடிந்தது.

ஐம்பதாயிரத்தை 'ரப்பர் பேண்டு' போட்டு ஐநூறு ரூபாய் தாளாக கட்டி வைத்திருந்தார் வள்ளிநாயகம். எடுத்து நீட்டி "பெரிய அம்பது... 'என்ட்ரி' போட்டு ரசீதைக் கொடு" என்றார் சற்று கித்தாப்பாக! அவனும் அவர் முன் உள்ள மேசையில் தன் தோல் பையை வைத்தவனாக அதைத் திறந்து குட்டி 'லெட்ஜர்' நோட்டையும், ரசீது 'புக்'கையும் எடுத்து எழுத ஆரம்பித்தான்.

நடுவில் தொலைபேசியின் சிணுங்கல்.

வள்ளிநாயகம் தன் பவழ மோதிர விரல்களால் 'ரிசீவரை' எடுத்து காதில் வைத்தார்.

மறுமுனையில் யார் என்ன பேசினார்களோ தெரியாது. அவர் முகத்தில் திடீரென்ற மாறுதல்.

அவர் பார்வையும் அந்தக் கூட்டத்தில் பதற்றத்தோடு யாரையோ தேடியது.

மஞ்சள் 'டி-ஷர்ட்'டும், 'ஜீன்ஸ் பேண்ட்'டுமாய் ஒருவன் அவரைப் பார்த்து ஒரு தினுசாக சிரித்தான்.

வள்ளிநாயகம் அவன் சிரிப்பதைப் பார்த்து மிரள ஆரம்பித்தார். ரசீது போட்டுவிட்டு நிமிர்ந்த அய்யனாருக்கு அவரது மிரளல்...

மஞ்சள் 'டி-ஷர்ட்'காரன் சிரிப்பு எல்லாமே என்னவோ செய்தது.

'ஏதாவது விபரீதம் நடக்கப் போகிறதா?'

அவனது மனதுக்குள் எழும்பிய கேள்விக்கு பதில் போல வள்ளிநாயகம் அவனுக்கு தருவதற்காக நீட்டிய அந்த ஐம்பதாயிரம் ரூபாய் நோட்டுக் கட்டை, இப்போது 'டி-ஷர்ட்'காரனைப் பார்த்தபடியே நீட்டினார்.

அவனும் கூட்டத்தை இம்சித்துக்கொண்டு வந்து, நோட்டுக் கட்டை வாங்கிக்கொண்டான்.

வள்ளிநாயகம் காதோரமாய் வியர்வை பூத்து ஓடத் தொடங்கிவிட்டிருந்தது.

"பணத்தை மட்டும் தந்தா எப்படி... பத்து பவுன் நகையும் தரச் சொல்லி இருப்பாரே?"

–அவன் கேட்பது அய்யனாரின் காதிலும் விழுந்தது. வள்ளிநாயகம் ஆமோதிப்பாக தன் கழுத்தில் கிடந்த பருமனான சங்கிலியைக் கழற்றி எதிரில் நீட்டினார்.

"இது பத்து பவுன்தானா?"

வள்ளிநாயகம் தலை வேகமாக ஆடி ஆமோதித்தது.

அவன் அடுத்து அய்யனாரைப் பார்த்தான்.

"'டெய்லி' வசூல் 'பார்ட்டி'யா நீ?" –கேட்டான்.

"நீங்க யாரு... எதுக்கு கேக்கிறீங்க?"

"என்னையா கேள்விக் கேக்கறே வெண்ணெய். என் கேள்விக்கு நீ பதிலைச் சொல்லுடா!"

அவன் குரலில் ரவுத்திரம்.

வள்ளிநாயகம் உடனே இடையிட்டார்.

"தம்பி... அவன் 'டெய்லி கலெக்ஷன்' ஆள்தான். நீ கிளம்பு" –பதறினார்.

அவனும் முறைத்துக்கொண்டே அங்கிருந்து நகர்ந்தான். நகை வாங்கிக்கொண்டிருந்த சிலர்கூட அவனுடைய செயல்களைப்

பார்த்தனர்.

ஓர் இளம் பெண். 'ஏதோ விபரீதம்!' என்கிற மாதிரி அவனை வெறித்தாள். அது அவனுக்கு பிடிக்கவில்லையோ என்னவோ... உடனே அவளது கன்னத்தில் ஒரு 'கிள்ளு' கிள்ளினான்.

அவள் கொதித்துப் போய்விட்டாள். அவன் நிற்கவில்லை. கண்ணாடிக் கதவைத் திறந்துகொண்டு புயலாக வெளியேறினான்.

"அம்மாடி... சத்தம் போடாதே! போட்டா அவ்வளவுதான்!!"

வள்ளிநாயகம் கைகளைக் கூப்பியபடியே பேச்சைத் தடுத்தார். அவளும் அடங்கிப் போனாள்.

"அண்ணே... என்னண்ணே இதெல்லாம்?" – அய்யனாரிடம் ஆதங்கமாய் கேள்வி.

"எதுவும் பேசாதே... கிளம்பு. எல்லாம் தலையெழுத்து. ஒரு நாள்–கிழமை வந்துடக்கூடாது. இந்த முத்துலிங்கம் ஆளுங்களுக்கு மூக்குல வேர்த்துடும்!"

அந்தப் பெயர்... அய்யனாரையும் உலுக்கியது.

"தண்டல் முத்துலிங்கமா?" –திருப்பிக் கேட்டான்.

அவரிடம் ஆமோதிப்பு!.

"அவன் ஆயுள் தண்டனையில உள்ளேல்ல இருக்கான்?"

"அவனாவது... உள்ளே இருக்கறதாவது? யாரை எங்க எப்படி கவனிச்சானோ தெரியல.... இப்ப 'ஜாமீன்'ல வந்திருக்கான். வந்த உடனேயே வேலையை ஆரம்பிச்சுட்டான். உன் வசூல்லாம் என்ன வசூல்? ஹும்..."

வள்ளிநாயகம் மூச்சுக் காற்று, அய்யனாரை நெருங்கிச் சுட்டது. அப்போதுதான் கல்லா மேசையைப் பார்த்தான்.

அவனது தோல் பையைக் காணவில்லை!

"அண்ணே..." – பலமாக அலறிவிட்டான்.

**பு**கார் கடிதத்தை ஏதோ சினிமா 'நோட்டீஸை'ப் பார்க்கிற மாதிரி பார்த்தார் சப்–இன்ஸ்பெக்டர் சரவணசிவம்.

'க்ளுக்'கென்று ஒரு சிரிப்பு வேறு சிரித்தார்.

"என்ன சார் சிரிக்கிறீங்க? ஐம்பதாயிரத்தை இழந்திருக்கேன். என் வேலையே ஊசல் ஆடிக்கிட்டிருக்கு."

குமுறினான் அய்யனார்.

"கவனக்குறைவா இருந்தா வேலை மட்டுமா ஊசலாடும். எல்லாம்தான்!"

அவனுக்கு விலாவில் முள் குத்திய மாதிரி இருந்தது.

"அதெல்லாம் இல்ல சார். புகாரை நல்லா படியுங்க. இது அந்த முத்துலிங்கம் ஆளுங்களோட வேலை!"

கழுத்து நரம்பு புடைக்க கத்தவே செய்தான் அய்யனார்.

மீண்டும் சப்-இன்ஸ்பெக்டர் சரவணசிவத்திடம் சிரிப்பு.

"எதுக்கு சார் இப்படி சிரிக்கிறீங்க? என் வாழ்க்கையே இப்ப உங்க கையிலதான் இருக்கு!."

அவர் குரல் கமறியது.

"சரி! புகார் கொடுத்துட்டேல்ல... கிளம்பு. உன் பணம் திரும்ப கிடைச்சா தகவல் சொல்லிவிடுறேன்."

"இப்படிச் சொன்னா எப்படி சார்?"

"வேற எப்படிச் சொல்லணுங்கறே?"

"அந்தத் திருட்டு நாயை எனக்கு நல்லாவே தெரியும் சார். வள்ளிநாயகம் அண்ணன்கிட்டகூட அவன் மாமூல் வாங்குவான்."

"அப்படியா?"

"சத்தியமா சார்!"

"அப்ப அவர் ஏன் புகார் தரல?"

"அது... அது..."

"எது?"

"சார் அவர் லட்சம், கோடின்னு புரட்டுறவர். 'போய்த் தொலையுது!'ன்னு விட்டிருப்பார். நான் அப்படி கிடையாது. மூணு அக்கா, ஒரு தங்கச்சி, வயசான அம்மான்னு ஏழைக் குடும்பம் எனக்கு.



ரூபாய்க்கு ஒரு பைசா 'கமிஷன்'. நாளெல்லாம் சைக்கிள் மிதிச்சு கடை கடையா ஏறி இறங்கினாலும் நூறு ரூபாய் தேத்தறதே எனக்கு பெரும்பாடு."

"நான் உன் வாழ்க்கை வரலாறையா கேட்டேன்? 'வள்ளிநாயகம் ஏன் புகார் கொடுக்கலை?'ன்னுதானே கேட்டேன்?"

"அது எனக்குத் தெரியாது சார்."

"அப்பறம் எதுக்கு ''போய்த் தொலையுதுன்னு விட்டிருப்பாரு'ன்னு சொன்னே...?"

"இப்படிக் கேட்டா எப்படி சார்... அதான் உண்மை!"

"அப்ப... எனக்கு உண்மை-பொய் தெரியலைன்னு சொல்லு. இந்த வேலையை 'கவர்மெண்ட்' எனக்கு இனாமா கொடுத்துடிச்சுன்னும் சொல்லு."

சினிமா இன்ஸ்பெக்டர் மாதிரியே வசனம் பேசினார் சரவணசிவம். இவனது புகார் கொஞ்சம்கூட அவரைப் பாதித்த மாதிரியே தெரியவில்லை.

அய்யனாருக்கும் அது புரிந்துவிட்டது.

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்த மாதிரி அவரை வெறித்தவன், மேசை மேல் இருந்த புகார் கடிதத்தை வேகமாக எடுத்தான்.

'சரசர'வென்று கிழித்தான். பிறகு, பந்து போல உருட்டி தூக்கி எறிந்தவன்.... "வர்றேன் சார். உங்களை அந்தக் கடவுள் சும்மா விடமாட்டான்" என்று... சராசரி இந்தியனைப் போல புலம்பிக்கொண்டே 'ஸ்டேஷனை'விட்டுக் கிளம்பினான்.

சப்-இன்ஸ்பெக்டர் சரவணசிவம் முகத்தில் ஒருவித வெற்றிப் புன்னகை!

## 2

'**சி**த்து' புரிய... முதலில் 'சக்தி புரிதல்' வேண்டும். எது சக்தி? அது எப்படிப்பட்டது? கை-கால்களை அசைத்து, வீரமாக நடந்து,

ஆர்வமாக பாடிப் பேசி, குதித்து விளையாடத் தேவைப்படுகிறதே அதுதான் சக்தியா? அதுதான் சக்தி என்றால் 'சித்தி'யைப் பற்றி சிந்திக்கக்கூட முடியாது. 'சக்தியின் ரகசியம்' சாப்பிடும் சாப்பாட்டில் இல்லை. இழுத்து விடும் மூச்சுக் காற்றில் இருக்கிறது!

கன்னியம்மாள் தட்டில் சோற்றைப் போட்டு எடுத்து வந்து, சோர்வுடன் அமர்ந்திருந்த அய்யனார் அருகில் வைத்தாள்.

அவன் திரும்பக்கூட இல்லை!

இமைக்கக்கூட மறந்தவன் போல எங்கோ வெறித்தபடி இருந்தான்.

"அய்யா... சாப்பிடுடா!" – கன்னியம்மாள் குரலில் தாய்மையின் பரிபூரணக் கொப்பளிப்பு.

அவன் காதில் அது விழவே இல்லை.

"எல்லாத்தையும் அந்த ஆண்டவன் பார்த்துப்பான்ய்யா. நீ இப்ப ஒரு வாய் சாப்பிடு ராசா!"

அய்யனார் மெல்லத் திரும்பி தாயைப் பார்த்தான்.

அவளது கழுத்தில் பாசிமணி மாலை.

கழுத்துக்குக் கீழே 'தொளதொள'வென... சாயம் போன ரவிக்கை.

கழுத்து நரம்பெல்லாம் தெரியும் மெலிந்த தோற்றம். ஆனால், கண்களில் மட்டும் நல்ல தீட்சண்ணியம். அதைப் பார்த்த அவன் கண்ணில் 'மளுக்'கென கண்ணீர் துளிர்த்தது.

"அழுவாதய்யா... அப்புறம் நானும் அழுதுடுவேன். ஏழைங்கன்னாலே எல்லா காலத்துலேயும் எல்லாருக்கும் எளப்பம்தான்ய்யா. அதுக்காக நாம உடைஞ்சு போனா... உசுரே வாழ முடியாது."

"இப்படி கையாலாகாம வாழுறதுக்கு பதிலா செத்துடலாமேம்மா?" – அவனிடம் ஆத்திரப் பீறல்.

"சாவறதைப் பத்தி அப்பால யோசிப்போம். இப்ப ஒரு வாய் சாப்பிடு."

ஆர்வமாக பாடிப் பேசி, குதித்து விளையாடத் தேவைப்படுகிறதே அதுதான் சக்தியா? அதுதான் சக்தி என்றால் 'சித்தி'யைப் பற்றி சிந்திக்கக்கூட முடியாது. 'சக்தியின் ரகசியம்' சாப்பிடும் சாப்பாட்டில் இல்லை. இழுத்து விடும் மூச்சுக் காற்றில் இருக்கிறது!

கன்னியம்மாள் தட்டில் சோற்றைப் போட்டு எடுத்து வந்து, சோர்வுடன் அமர்ந்திருந்த அய்யனார் அருகில் வைத்தாள்.

அவன் திரும்பக்கூட இல்லை!

இமைக்கக்கூட மறந்தவன் போல எங்கோ வெறித்தபடி இருந்தான்.

"அய்யா... சாப்பிடுடா!" – கன்னியம்மாள் குரலில் தாய்மையின் பரிபூரணக் கொப்பளிப்பு.

அவன் காதில் அது விழவே இல்லை.

"எல்லாத்தையும் அந்த ஆண்டவன் பார்த்துப்பான்ய்யா. நீ இப்ப ஒரு வாய் சாப்பிடு ராசா!"

அய்யனார் மெல்லத் திரும்பி தாயைப் பார்த்தான்.

அவளது கழுத்தில் பாசிமணி மாலை.

கழுத்துக்குக் கீழே 'தொளதொள'வென... சாயம் போன ரவிக்கை.

கழுத்து நரம்பெல்லாம் தெரியும் மெலிந்த தோற்றம். ஆனால், கண்களில் மட்டும் நல்ல தீட்சண்ணியம். அதைப் பார்த்த அவன் கண்ணில் 'மளுக்'கென கண்ணீர் துளிர்த்தது.

"அழுவாதய்யா... அப்புறம் நானும் அழுதுடுவேன். ஏழைங்கன்னாலே எல்லா காலத்துலேயும் எல்லாருக்கும் எளப்பம்தான்ய்யா. அதுக்காக நாம உடைஞ்சு போனா... உசுரே வாழ முடியாது."

"இப்படி கையாலாகாம வாழுறதுக்கு பதிலா செத்துடலாமேம்மா?" – அவனிடம் ஆத்திரப் பீறல்.

"சாவறதைப் பத்தி அப்பால யோசிப்போம். இப்ப ஒரு வாய் சாப்பிடு."

"இல்லம்மா... எனக்குப் பிடிக்கல! நீ போ..."

"நீ இப்படி உடைஞ்சு நொறுங்கி உக்கார்ந்திருக்கறது எனக்கு மட்டும் பிடிச்சிருக்குதா கண்ணு?"

அந்தக் கேள்விக்கு இடையில் அவனது அக்கா சகுந்தலாவும், சுசிலாவும் எங்கோ போய் குடங்களில் நல்ல தண்ணீர் எடுத்து வந்தவர்களாக வீட்டினுள் நுழைந்துகொண்டிருந்தனர்.

மூன்றாமவளான விமலா, காயப் போட்டிருந்த துணிகளை தோளில் போட்டவளாக கொல்லையில் இருந்து உள்ளே நுழைய... மூவரையும் பார்த்தவனுக்கு மேலும் அழுகை கூடிப் போனது!

அவர்களும் கல்லைப் போல இறுகிப் போயிருந்தார்கள்.

"குழாயடியில் நின்னு தண்ணி புடிக்க முடியல! 'உன் தம்பி பணத்தைத் தொலைச்சிட்டானாமே?'ன்னு ஒரே பொரளி."

மூத்தவள் சகுந்தலா முதலில் அலுப்பை ஆரம்பித்தாள்.

"நம்ம ராமனய்யா அண்ணன் வீட்லகூட திருட்டு போயிருச்சாம். அதுவும் அதே முத்துலிங்கம் கோஷ்டி வேலைதான்னு பேசிக்கிறாங்க!"

அடுத்தவள் சுசீலா... அவள் விட்ட இடத்தைத் தொடர்ந்தாள். நல்ல வேளை... மூன்றாமவள் எதுவும் சொல்லாமல், இருண்ட அறை நோக்கி நடந்து காய்ந்த துணிகளை மடித்து அடுக்க ஆரம்பித்தாள்.

"நீங்க போங்கடி! யாரோ என்னவோ பேசிட்டுப் போகட்டும். இவன் ஏற்கெனவே நொந்து நூலாகிக் கிடக்கான். தம்பி சாப்பிடுப்பா... ஒருத்திக்கு நாலு பொட்டச்சிங்க உன்னை நம்பித்தான் இருக்கோம். நீ இப்படி மனசு ஒடிஞ்சா என்னடா பண்ண?"

பேச்சோடு சோற்றைப் பிசைந்து, மகனுக்கு ஊட்டவும் ஆரம்பித்துவிட்டாள்.

அவனும் மெதுவாக சாப்பிடலானான்.

"அய்யனார்" – வாசற்புரம் இருந்து குரல் ஒன்று வந்தது. திரும்பியபோது... சிநேகிதன் கணேசன் நின்றுகொண்டிருந்தான்.

"வாய்யா... வா சாப்பிடலாம்" – அவனையும் சாப்பிட அழைத்தாள் கன்னியம்மாள்.

"இருக்கட்டும்மா... என்ன பண்ணிக்கிட்டிருக்கான்? நடந்ததையே நினைச்சு அழுதுகிட்டிருக்கானா?"

கேள்வியோடு அருகில் கிடந்த கயிற்றுக் கட்டிலில் போய் உட்கார்ந்தான்.

நாலு முழ வேட்டி, மடித்துவிட்ட முழுக்கை சட்டை. கழுத்தில் மட்டும் அதிகமாக இளைஞன் கழுத்தில் காணப்படாத ஒரே ஒரு ருத்ராட்சம் பூட்டிய கருப்புக்கயிறு. நெற்றியிலும் திவ்வியமான விபூதிப்பட்டை.

அவனை சகோதரிகள் மூவருக்கும் மிகப் பிடிக்கும்.

"என்ன கணேசன்... இன்னிக்குப் வேலைக்கு போகலையா?"

மூன்றாமவள் விமலா கேட்டபடி வந்து அவன் எதிரில் உட்கார்ந்தாள்.

"போக்லைக்கா! நம்ம கற்பூர விநாயகர் கோவிலுக்கு வாழைக்கா சாமியார்னு ஒருத்தர் வந்து இன்னிக்கு பூஜை செய்யப் போறாருல்ல. அதான் வேலைக்கு மட்டம் போட்டுட்டேன்."

அந்த நிலையிலும் அதைக் கேட்டு சகோதரிகள் சிரித்துவிட்டனர்.

"தெரியும்... நீங்க சிரிப்பீங்கன்னு நல்லாவே தெரியும். ஆனா, அதுக்கெல்லாம் நான் அசரமாட்டேன்!"

"அடப்போ கணேசா... வாழைக்கா சாமியார், கத்தரிக்கா சாமியார்னு! இவர் வாய்ல இருந்து என்ன வரும்? சிவலிங்கமா இல்லை பிள்ளையாரே வருவாரா?"

"அவர் வாயைத் திறந்து பேசியே பல வருஷம் ஆச்சுக்கா!"

"ஏன்... எங்கேயாவது-யாராவது நல்லா வாய்லயே போட்டுட்டாங்களா?"

"வேண்ணாங்க்கா. சாமி விஷயம். தப்பா பேசாதிங்க! அப்புறம் ரொம்ப கஷ்டப்படுவீங்க."

"ஆமா! இப்ப தினம் வடை–பாயாசத்தோடு சாப்பிட்டுக்கிட்டு, கழுத்து நிறைய நகை நட்டோட மகாராணி மாதிரில்ல இருக்கோம்!"

"போதும்டி... உங்களுக்கு நம்பிக்கை இல்லாட்டி போங்கடி. அவன் வாயை ஏண்டி பிடுங்கிறீங்க?"

கன்னியம்மாள் இடையிட்டு கணேசனுக்கு வக்காலத்து வாங்கினாள்.

"அம்மாதான் எப்பவும் 'கரெக்ட்'! எவ்வளவு கஷ்டத்துலேயும் நிதானம் இழக்கறதே இல்லை. இப்படித்தாம்மா இருக்கணும்."

கணேசன் நெகிழ்ந்து போய் பாராட்டவும், அய்யனாருக்கு 'சிவு சிவு' என்று கோபம் வந்தது.

"இப்ப எங்கடா வந்தே?"

'நறுக்'கென சீவின மாதிரி சப்தமாக கேட்டான்.

"என்னடா... குரலே ஒரு மாதிரி இருக்குது?"

"நீ விஷயத்துக்கு வா. இப்ப எங்கே வந்தே?"

"சும்மா உன்னைப் பார்க்கலாம்னுதான்!"

"சரி! பார்த்துட்டேல்ல... புறப்படு."

"அடேங்கப்பா... கோபமா?"

"மண்ணாங்கட்டி... புறப்படுன்னு சொல்றேன்ல!"

"அலட்டிக்காதடா அய்யனார். எதுக்கு இப்ப எரிஞ்சு விழுறே?"

"சரி... அம்பதாயிரம் பணம் கொடுத்து உதவ முடியுமா உன்னால! சொல்லுடா... சிரிக்கிறேன்."

"அதுக்குத்தான் வந்திருக்கேன். கிளம்பு என்கூட!"

"எங்க... அந்த வாழைக்காயைப் பார்க்கவா?"

"ம்... 'கரெக்ட்'! சாமி உன்னைப் பார்த்த உடனேயே... திருட்டுப் போன பணம் கிடைக்குமா... கிடைக்காதான்னு சொல்லிடுவார்."

"இதுக்கு நான் அந்த வாழைக்காயை வந்து பார்க்கணுமா?

தலைகீழா நின்னாலும் பணம் கிடைக்காது. நீ கிளம்பு."

"பொறு அய்யனார். ஏன் இப்படி நீயே ஒரு முடிவுக்கு வந்து பேசுறே?"

"நான் எழுந்திருச்சு வந்து நாலு அப்பு அப்புறதுக்குள்ள ஓடிப் போயிடு. இல்லாட்டி கூடப் படிச்சவன்னுகூட பார்க்கமாட்டேன்."

"அப்படியா... எங்க அப்புடா பார்ப்போம்!"

கணேசன் எழுந்து அவன் அருகே சென்றான். கன்னம், மூக்கு எல்லாம் துக்கத்தில் சிவந்திருக்க... துயரத்தின் ஆழத்தில் இருந்த அய்யனாருக்கும் அடுத்த கணம் தீப்பிடித்த மாதிரி ஆவேசம் வந்து தொற்றியது.

கையை உயர்த்தி வீச்சலுடன் ஓர் ஆறை.

கணேசன் காதிலும் விமானம் ஒன்று பறப்பது போல் சப்தம்!

"டேய் தம்பி... என்னடா இது?" – கன்னியம்மாள் ஓடி வந்து, அடுத்த அடிக்கு அய்யனார் தாவாதபடி அவனது கையைப் பிடித்தாள்.

ஆனால், கணேசனிடம் பெரிதாக எந்த சலனமும் இல்லை. அந்த நிலையிலும் சிரித்தான்.

"இன்னும்கூட அடிக்கறதா இருந்தா அடி. நான் அசர மாட்டேன். அடிச்சிட்டு என்கூட புறப்படு" என்றான்.

அது மேலும் அய்யனாரைச் சீற வைத்தது.

"எவன்டா இவன்... நீ எந்தக் காலத்து ஆளுடா? 'போலீஸ் ஸ்டேஷன்'ல புகாரை வாங்க மாட்டேன்னு சொல்லாத குறைடா."

அந்த ரவுடிப் பய இந்த அளவுக்கு சினிமா மாதிரியே போலீஸ், எம்.எல்.ஏ., மந்திரின்னு எல்லாரையும் கைக்குள்ள போட்டுகிட்டிருக்கான்டா."

நானும் ஒண்ணும் சினிமா 'ஹீரோ' இல்லடா... பாஞ்சு பாஞ்சு சண்டைப் போட! சாதாரண சராசரி இந்தியக் குடிமகன். விதி, தலையெழுத்துன்னு அழுறதுதான்டா எனக்கும் சரி... உனக்கும்

சரி... இங்கு விதிக்கப்பட்டது. இதுக்கு நடுவுல எந்த சாமியாரைப் போய் பார்த்து என்னடா பிரயோஜனம்?

மிச்சம் மீதி சில்லரையை அவங்க பிடுங்கிட்டு, திருவோடோடு நம்மை தெருவுல விடுறதுக்கா? நாயி... புரியாம பேசுறியேடா?"

அய்யனாரிடம் ஆவேச அலை அடித்தது.

ஆனால், கணேசனிடம் தொடர்ந்து சிரிப்பு மூண்டது!

"எதுக்கு இப்ப இளக்காரமா சிரிக்கறே? நான் கேட்டதுல என்ன தப்பு?" – அய்யனார் கையை ஆவேசமாக கணேசனின் முகத்துக்கு நேரே நீட்டி உச்சஸ்தாயியில் கத்தினான்.

"எல்லாமே தப்புதான்!"

கணேசனிடம்... துப்பாக்கியால் சுட்ட மாதிரி பதில். சகோதரிகள் ஒரு பட்டிமன்றம் கேட்கிற 'மூடு'க்கு வந்துவிட்டார்கள்.

"டேய் சத்தம் போடாம சாந்தமா பேசுங்கடா! அய்யா... நீ எதுக்கு இப்படி உயிர்க்குலையைப் பிடிச்சிக்கிட்டு கத்துறே?"

கன்னியம்மாள் தன் பங்குக்கு பேசினாள்.

"விடுங்கம்மா... அவன் கத்தட்டும்! நல்லா கத்திட்டு அடங்கட்டும்!!"

"இதோ பாரு... நீ என்னமோ கத்தவே கத்தாதவன் மாதிரியெல்லாம் பேசாதே! பணத்தைத் தொலைச்சிருந்தா உனக்குத் தெரியும்."

"இதோ பாரு அய்யனார். என் வாழ்க்கையில எது நடந்தாலும் அது அனுபவம் மட்டும்தான்! 'இன்சிடென்ட்', 'ஆக்சிடென்ட்'டுன்னு அதுக்கு பேர் வெச்சு அலுத்துக்கவோ... சலிச்சுக்கவோ மாட்டேன். நான் அந்தப் பக்குவத்துக்கு வந்து ரொம்ப நாளாச்சு!"

"நான் வரல... என்னை விட்டுடு! அதே நேரம் நான் கேட்ட கேள்வியெல்லாமும் தப்புன்னு சொன்னேல்ல... அது எப்படின்னு நீ சொல்லித்தான் தீரணும்!"

"சொல்றேன். ஒரு சாமியாரைப் பார்க்க வாடான்னுதானே நான் கூப்பிட்டேன்?"

"ஆமா...!"

"நீ அதுக்கு என்ன பதில் சொல்லணும்?"

"அதான் சொன்னேனே... சாமியார்களையெல்லாம் நம்பி நான் ஏமாறத் தயாரா இல்ல!"

"நீ பேசுறதைப் பார்த்தா உனக்கு பயங்கர விழிப்புணர்வும், தெளிவும் இருக்கற மாதிரி தெரியுது. சரியா...?"

"அதுல சந்தேகம் என்ன உனக்கு?"

"விழிப்பும், தெளிவும் உள்ளவன் எப்படிடா பட்டப்பகல்ல அம்பதாயிரத்தைத் தொலைக்கலாம்?"

"டேய்... நான் தொலைக்கலடா! வந்தவன் சுட்டுகிட்டுப் போயிட்டான்."

"அப்ப நாம எப்படித்தான் இருந்தாலும் நடக்கறது நடந்துதான் தீரும்னு ஒத்துக்கிறியா?"

கணேசன் இந்த விஷயத்தில் நைச்சியமாக ஒரு புள்ளியை நோக்கி வருகிற மாதிரி தோன்றியது!

அய்யனாரிடம் சின்ன தேக்கம்.

"என்னடா பதிலைக் காணோம்?"

"அதுக்காக... சாமியாரைப் பார்த்தா சரியாயிடுமாக்கும்?"

"அதை இங்க உக்காந்துகிட்டு முடிவு பண்ணக்கூடாது. என்கூட எத்தனை வருஷமா பழகறே நீ? நான் முட்டாள் தனமா ஒருத்தரை நம்புவேனா?"

"சரி... முடிவா விஷயத்துக்கு வா. அந்தச் சாமியாரை வந்து பார்த்துட்டா... என்கிட்ட இருந்து போன பணம் திரும்ப கிடைச்சிடுமா? அதுக்கு மட்டும் பதில் சொல்லு."

"எனக்கு தெரிஞ்சு அவர் நோட்டு அடிக்கற சாமியார் இல்ல! ஆனா, அவர்கிட்ட சில அபூர்வ விஷயங்கள் இருக்கு. அது நமக்கு பயன்படுங்கறது என் நம்பிக்கை."

*"டேய் அவன்தான் அவ்வளவு சொல்றான்ல... போய்தான் பாரேன்."*

*கன்னியம்மாளும் கணேசனுக்கு ஆதரவாக அவனைத் தள்ளிவிட்டாள்.*

*இறுதியாக அய்யனார் அரைமனதுடன் அவனோடு கிளம்பினான். சகோதரிகளால் அதை ஏற்கவும் முடியவில்லை... மறுக்கவும் இயலவில்லை!*

## 3

**மூ**ச்சுக் காற்றில்தான் எல்லாவித 'சூட்சமமும்' இருக்கிறது. அப்படி என்னதான் இந்தக் காற்றில் இருக்கிறது என்பது முதலில் தெரிய வேண்டும். சாதாரண காற்றுதானே என்று நினைத்தால் அவ்வளவுதான்!

பல நூற்றாண்டுகளாக தடித்தும், பருத்தும் வளர்ந்துவிட்ட மரங்களில் இருந்து... இரும்புக் கம்பங்கள் வரை எவ்வளவோ காற்றால் சாய்ந்துள்ளன.

புயல் அடித்தால் இதெல்லாம் சகஜம் என்று சாதாரணமாக நினைத்துவிடாமல் எப்படியென்று கேட்டு யோசித்துப் பார்க்க வேண்டும். ஒரு கோடாலியின் பலத்தைவிட, மதம் கொண்ட யானைகள் பலவற்றின் பலத்தைவிட, அந்த யானை முதல் கோடாரி வரை சகலத்தையும் வெட்ட வெளியில் பறக்க வைக்கும் காற்றே உலகின் மிகப் பெரிய பலசாலி.

இந்த பலமான மூச்சுக் காற்று, அளவில் குறைவாக தேவைக்கு மிகாமல் போய் வந்துகொண்டிருக்க... அதனால் துடிப்பவைதான் நாடிகள், ஆக்சிஜனும், கார்பன்டை ஆக்ஸைடும் கலந்த கலவையாய் மூக்குக்குள் நுழையும் காற்றில் கார்பன் டை ஆக்ஸைடில்தான் இருக்கிறது பிரதான 'சூட்சுமம்'. இது மிகுந்த பலமுள்ளது.

***வா**ழைக்காய் சாமியாரைப் பார்க்க அப்படியொன்றும் கூட்டமில்லை. காரணம்... அங்கே போனபோது அய்யனாருக்கு*

துல்லியமாகப் புரிந்துவிட்டது!

அவர் எந்த மாயாஜாலமும் செய்யவில்லை. குறைந்தபட்சம் விபூதிகூட வரவழைக்கவில்லை. அத்துடன்... எவ்வளவோ சாமிகள் இருக்க... ஒரு சாமியைக்கூட கும்பிடவும் சொல்லவில்லை. யாரர்வது காலில் விழுந்தால், பதிலுக்கு அவரும் காலில் விழுந்தார். பார்க்கவும் அவரிடம் பெரிதாக கவர்ச்சி இல்லை. காவி அங்கி, ருத்ராட்ச மாலை, தொப்புளைத் தொடும் தாடி – மீசை என்று சாமியார் அம்சமும் இல்லை.

வழுக்கைத் தலையுடன்... இடுப்பில் சாதாரண நாலு முழ வேட்டியோடும், மார்பில் துண்டுடனும் கூலித் தொழிலாளி மாதிரிதான் தெரிந்தார். நெற்றியில் விபூதி – குங்குமம் என்கிற அடையாளக் குறிகளோ... அருகில் பெரிதாக சாமி படங்களோ இல்லை.

மிகச் சிறிய ஒரு அனுமன் விக்கிரகம். அதன் கழுத்தில் துளசி மாலை. அதன் முன்னால் ஒரு பெரிய மண் அகலில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவ்வளவுதான்!

உண்டியல் வசூல், நன்கொடை, அந்த பூஜை... இந்த பூஜை என்கிற எந்த சமாச்சாரங்களும் இல்லை. நிச்சயம் வித்தியாசமான சாமியார்தான் என்பது பார்த்த மாத்திரத்தில் அய்யனாருக்கு புரிந்துவிட்டது. அவரும் கணேசனைப் பார்த்ததும் மிக நட்பாக, "வா கணேசா!" என்று கூப்பிட்டு பக்கத்திலேயே உட்காரும்படி கை காட்டினார்.

அவனும் புன்னகையோடு நெடுஞ்சாண் கிடையாக அவர் முன் விழுந்து வணங்கிவிட்டு எழுந்து அருகில் அமர்ந்தான்.

அய்யனார் அப்படியெல்லாம் எதுவும் செய்யாமல் நின்று பார்த்துக்கொண்டிருந்தான்.

"சாமி! இவன் என் சிநேகிதன்... பேர் அய்யனார்."

கணேசன் அறிமுகம் செய்தான். யாராக இருந்தாலும்

அறிமுகப்படுத்தப்படும்போது கும்பிடுவதுதான் மரியாதை. அய்யனாரும் அந்த விஷயத்தில் குறை வைக்காமல் கைகளைக் கூப்பி, அவரைப் பார்த்துக் கும்பிட்டான். அவரும் பதிலுக்கு கும்பிட்டு அவனையும் அமரச் சொன்னார்.

"சொல்லு கணேசா... எப்படி இருக்கே...?"

அவர்தான் பேச்சை ஆரம்பித்தார்.

"எனக்கென்ன சாமி... உங்க ஆசிர்வாதத்தால நல்லாவே இருக்கேன். அய்யனாருக்குத்தான் சிக்கல்!"

"என்ன சிக்கல்?"

"இவன் ஒரு சேமிப்பு நிறுவனத்துல 'கலெக்ஷன் ஏஜென்ட்'டா வேலை பார்க்கிறான் சாமி. சேமிக்கற ஆசை உள்ள யார் வேணும்னாலும் இவன் மூலமா சேமிக்கலாம். ரொம்ப நம்பிக்கையான நிறுவனம்.

நேத்து பணத்தை வசூல் பண்ணப் போகும்போது 'தாதா' கோஷ்டியைச் சேர்ந்த ஒருத்தன் அவ்வளவு பணத்தையும் கொண்டு போயிட்டான். அந்தக் கும்பலுக்கு கடைகள்ல தண்டல் வசூல் பண்றது, வழிப்பறி செய்யறது, கூலிக்காக கை–காலை வாங்கறது, கொலை செய்யறதுதான் தொழில்.

வழக்கம் போலவே பொதுமக்கள்கிட்ட பயம். அரசியல்வாதிங்ககிட்ட ஆதரவு. போலீசும் அந்த 'தாதா' விஷயத்துல அடக்கியே வாசிக்குது. இந்த நிலையில பொதுமக்களோட பணத்தை பறிகொடுத்துட்டு நிலைகுலைஞ்சு போயிருக்கான்."

கணேசன் ஓரளவு தெளிவாகவும், அதே வேளையில் சுருக்கமாகவும் அவருக்கு விஷயத்தைக் கூறி முடித்தான்.

அவரும் அய்யனாரை ஊடுருவிப் பார்க்கலானார்.

அவர் என்ன சொல்லப் போகிறார் என்கிற எதிர்பார்ப்பு அய்யனாருக்குள். அவரும் வாயைத் திறந்தார்.

"பேராசை பிடிச்சவங்க ரொம்ப அதிகமாயிட்டாங்க"-என்றார்.

"அதான் தெரிஞ்ச விஷயமாச்சே சாமி! இந்த மாதிரி அனுபவங்கள் ஓர் ஏழைக்கு ஏற்படுறது கொடுமை இல்லையா?"

கணேசனின் பதில் கேள்விக்கு அவர் சிரித்தார்.

"சிரிக்கிறீங்களே... தப்பா எதுவும் சொல்லிட்டேனா?"

"ஏழைன்னு சொன்னியே... அதான் சிரிப்பு வந்துடுச்சு!"

"சத்தியமா இவன் ஏழைதான் சாமி!"

"இவன் மட்டுமா ஏழை? இவன்கிட்ட பணத்தைப் பிடுங்கிட்டுப் போன திருடனும்தான் ஏழை."

"சாமி..."

"பதற்றப்படாதே! காசு–பணம் இருக்கறவங்க பணக்காரங்க. அது இல்லாதவங்க ஏழைங்கறது இந்த உலகத்தோட கணக்கு கணேசா. ஆனா, என்னை மாதிரி எல்லாத்தையும் விட்டவங்களுக்கு காசு–பணம் உள்ளவன்தான் பரம ஏழை. அது இல்லாதவங்கதான் பணக்காரங்க."

சாமியாரின் பதில் அய்யனாருக்கு எரிச்சலை மூட்டியது. கணேசனை முறைத்தான். ஆனால், கணேசன்... அவனைப் போல எரிச்சலில் விழாமல் அவரது பேச்சைப் புரிந்துகொள்ள முயன்றான்.

"என்ன சாமி... உங்க சித்தாந்தம் தலைகீழா இருக்கே?"

"நான் சரியாதான் சொல்றேன் கணேசா. உலகம்தான் இந்த விஷயத்துல தலைகீழா இருக்கு."

"எப்படி சாமி?"

"பரவாயில்ல... உளறுறேன்னு உன் நண்பனைப் போல மனசுக்குள்ள நினைக்காம நான் பேசுறதுலேயும் ஏதோ அர்த்தம் இருக்கணும்னு நினைச்சு நம்பிக்கையோடு கேட்கறே... ரொம்ப சந்தோஷம்."

"அந்த சந்தோஷத்தோடு எப்படின்னு பதிலையும்

சொல்லிடுங்களேன்."

"சொல்றேன்... ஆனா, அது வார்த்தையால சொல்லி புரிய வைக்கற விஷயமில்லை! இப்போதைக்கு உன் நண்பனுக்கு எனக்குத் தெரிஞ்ச ஒரு வழியைக் காட்டுறேன். அதுல போவீங்களா?"

"என்ன செய்யணும் சாமி? அவனுக்கு பணம் கிடைச்சா போதும்!"

"ரொம்ப தப்பு! இந்தப் பணம் ரொம்ப அற்பம். இது கிடைக்கறது பெரிய விஷயமே இல்ல! இவன்கிட்ட பணத்தை அபகரிச்சான் பாரு ஒருத்தன். அவன் மாறணும். வாழ்க்கையில எங்கேயும்... யார்கிட்டேயும் இந்த மாதிரி இனி தப்பே பண்ணக்கூடாது."

"அதெல்லாம் சாத்தியமா சாமி? ஊரை அடிச்சு உலையில போடுறதுதான் அவங்க வழக்கமே!"

"உலையில நீ வெந்து போனா... அவங்களும் அடிச்சு அடிச்சு போட்டுக்கிட்டுதான் இருப்பாங்க. உலையை உடைச்சுகிட்டு வெளியே வந்தா யோசிப்பாங்க இல்லையா?"

"என்ன சொல்றீங்க... எதிர்த்து முண்டா தட்டச் சொல்றீங்களா? அவங்க ஒரு மோசமான கூட்டம் சாமி. குத்து–கொலை எல்லாம் அவங்களுக்கு ரொம்ப சாதாரணம். பதிலுக்கு இவன் குத்தினா... உள்ளால போய் கம்பிதான் எண்ணணும்."

"உடம்புல குத்தினாதானே கம்பி எண்ணணும்? மனசுல குத்துங்கறேன்!"

"மனசே இல்லாதவங்க சாமி அவங்க! எங்கே போய் குத்த?"

"அவசரப்படுறியே... இந்த அவசரம்தான் ரொம்ப தப்புங்கறேன்!"

"என்ன சாமி... நான் அவசரப்பட்டிருந்தா உங்களை ஒரு 'கிறுக்கன்'னு சொல்லிட்டு கிளம்பி போயிருப்பேன். இப்படி உட்கார்ந்து பேசிக்கிட்டிருக்க மாட்டேன்."

"என் பேச்சை கேக்கற பொறுமை இருந்தா போதுமா? பிரச்சினைகளை ஆழ்ந்து யோசிச்சு பார்க்கற சக்தியும், நிதானமும்

வேணாமா?"

கணேசனிடம் சற்றே தேக்கம்!

"இதோ பாரு. 'உலகம் உயர்ந்தோர் மாட்டு', உயர்ந்தோருங்கறவங்க யார்?"

"யாரு சாமி?"

"தன்னையும், உலகத்தையும் புரிஞ்சிக்கிட்ட ஒரே ஒருத்தன் இருந்தாக்கூட போதும். அவனால உலகத்தையே ஆட்டுவிக்க முடியும். இல்லேன்னா உடம்புல பலமுள்ளவன்தான் எல்லாரையும் ஆட்டி வைப்பான். நாமளும் ஆடிகிட்டே இருக்கணும்!"

"தத்துவமா பேசாம 'பளிச்'சின்னு புரியற மாதிரி சொல்லுங்க. நாங்க என்ன செய்யணும்?"

"போனதை விடு! அது ஒண்ணுமே இல்லை. உன்னை பலசாலியாக்கிக்கோ!!"

"என்ன சாமி? 'தண்டால், 'பஸ்கி' எடுத்து உடம்பை தேத்திக்கிட்டு அவங்ககிட்ட போய் மோது!'ன்னு சொல்லாம சொல்றீங்களா? அதுக்குக்கூட... பணம்ன்னு ஒண்ணு வேணும் சாமி. அதைத்தான் இழந்துட்டு உட்கார்ந்திருக்கோம்!"

"திரும்பவும் அவசரப்படுறே...! நல்லா சாப்பிட்டாதான் பலம்னு உனக்கு யார் சொன்னா? ஒரு நாளைக்கு ஒரு வாழைப்பழம்தான் சாப்பிடுறேன். நான் பலசாலி இல்லையா?"

அவர் கேள்விக்கு கணேசன் பதில் சொல்ல வாயைத் திறந்தான். அய்யனார் அவனது வாயை மூடியவனாக பேச ஆரம்பித்தான்.

"சாமி... நீங்க பலசாலி இல்லை. போய் அந்த ரவுடிப் பசங்க முன்னால நின்னா... ஒரே தட்டு! நீங்க ஒரு மாசத்துக்கு ஆஸ்பத்திரியில கிடைக்க வேண்டியது வரும். முதல்ல... புரியாம தத்துவமா பேசறதை விட்டுட்டு, 'பளிச்'சின்னு புரியற மாதிரி, 'வெட்டு ஒண்ணு... துண்டு ரெண்டு'ன்னு பேசுறதா இருந்தா பேசுங்க. இல்லாட்டி நாங்க கிளம்புறோம்."

அய்யனாரின் தீர்மானம், சாமியாரை வெறிக்க வைத்தது.

"சும்மா 'லுக்' விடாதீங்க! நான் இப்ப சொல்றேன்... நல்லா கேட்டுக்குங்க. மோசக்காரன், ரவுடி, தாதா, கொலைகாரன், கொள்ளைக்காரன்... இவங்களையெல்லாம் எந்தக் காலத்துலேயும் யாராலேயும் ஒண்ணும் பண்ண முடியாது. கொஞ்சம் பச்சையாகவே சொன்னா... ஒரு மயிரும் புடுங்க முடியாது!

நிஜத்துல இப்படி முடியாம பேசுற விஷயத்தைத்தான் சினிமாவுல, கதாநாயகன் வந்து அவங்களை அடிச்சு காலி பண்ணி ஜெயிக்கற மாதிரி காட்டுறாங்க. அதையும் ஜனங்க பார்த்து ரசிச்சு கைதட்டி பாராட்டுறாங்க.

ஏன்னா... நிஜத்துல ஒண்ணும் பண்ண முடியாது. கற்பனை யிலதான் இங்க எல்லா வீரத்தையும் காட்ட முடியும். மீறி நிஜத்துல நீங்க ஏதாவது செய்தீங்கன்னா... பரலோகம் போக வேண்டியதுதான்!

சென்னை ராயப்பேட்டைகிட்ட பட்டப்பகல்ல சமூக சேவகரை வெட்டிக் கொன்னாங்க. இன்னிக்கு வரை கொலைகாரன் யாருன்னே தெரியாது. பஞ்சாயத்து தலைவர் ஒருத்தரை கொலை செய்து மரத்துல தொங்க விட்டுட்டாங்க. ஆனா, கொலைகாரங்க யார்... என்ன ஏதுன்னு எதுவும் தெரியல!

வீரப்பன்... பல வருஷமா மூணு 'கவர்மென்ட்'டை கண்ணுல விரலை விட்டு ஆட்டிக்கிட்டிருந்தான். அவனை உடனே பிடிக்க முடியல! ஆனா, ஒரு சாமான்யன் தன் 'ஸ்கூட்டர்'ல 'நம்பர் பிளேட்'டை கறுப்பு மையால எழுதலைன்னு பாய்ஞ்சு பிடிக்கிறாங்க. புலியைப் பார்த்தா மிரள்றதும், எலிங்களைப் பிடிச்சு தண்டிக்கிறதும்தான் அதிகாரத்துல இருக்கறவங்க வழக்கம்.

நம்மளையே எடுத்துக்குங்க... நகைக் கடை, புடவைக் கடை யிலேயும் சொன்ன விலைக்கு வாங்கிட்டு வருவோம். ஆனா... கத்தரிக்கா, வெண்டைக்கா வாங்கும்போது... சில்லரைக் காசுக்கு அதை விக்கிற கிழவிகிட்ட வாய்ஜாலம் காட்டுவோம்.

பெட்ரோல் 'பங்க்'குல ரெண்டு ரூபா சில்லரையைக் கேட்க வெட்கப்படுவோம். ஆனா, கவர்ச்சி நடிகையோட மார்பு தெரியற 'போஸ்டரை'ப் பார்க்க வெட்கப்படவே மாட்டோம்.

இது... வசதிக்கும், சொகுசுக்கும் ஆசைப்பட்டு வாழறவங்க பூமி. தப்புக்கு தப்புதான் இங்கே தீர்வு!

இப்பகூட என்கிட்ட ஒருத்தன் திருடிட்டான்னு பதிலுக்கு திருடக் கிளம்பினா பூமியில வாழலாம். இல்லாட்டி பிச்சை எடுக்கப் போக வேண்டியதுதான்! காசு இருந்தா என்ன வேணா பண்ணலாம்! இல்லாட்டி... மூச்சு முட்டி சாக வேண்டியதுதான்!

இதுதான் எதார்த்தம். இதைச் சொல்லாம சாப்பிட்டாதான் பலமா? சாப்பிடாட்டி பலம் இல்லையா? என்னைப் பாரு. நான் வாழைப்பழம்தான் சாப்பிடுறேன்னு உளறிகிட்டு இருக்கீங்களே!

இவன் ஒரு மடையன்! உங்ககிட்டே ஏதோ சரக்கு இருக்கிற மாதிரி உங்க உளறலுக்கு எல்லாம் ஒத்து ஊதிக்கிட்டிருக்கான். டேய்... எழுந்திருடா! கிளம்புடா முதல்ல!!"

படைக் கோழி போல பிடறி சிலிர்க்க எழுந்து நின்றான் அய்யனார்.

கணேசனுக்கே புயல் அடித்த மாதிரி இருந்தது! பதிலுக்கு அந்த சாமியாரும் எழுந்தார்.

"நல்லா பேசினே தம்பி! நாட்டு நடப்பை நல்லாவே புரிஞ்சு வெச்சுருக்கே! போகட்டும்... என்னைப் பலம் இல்லாதவன்னு சொன்னியே... நான் எவ்வளவு எடை இருப்பேன்னு உன்னால சொல்ல முடியுமா?"

"இப்ப எதுக்கு இந்தக் கேள்வி? அறுபது கிலோ இருந்தா அதிகம்!"

"சரியா சொன்னியே...! நான் அறுபது கிலோதான்! ஆமா... உன்னால என்னைத் தூக்க முடியுமா? ரொம்பல்லாம் இல்ல... தரையில இருந்து ஓர் அங்குலம், ஒரேயொரு அங்குலம் தூக்குனா

போதும்!"

"உங்களை நான் எதுக்கு தூக்கணும்?"

"நான் பலம் இல்லாதவன்னு சொல்றே! உன் பலம் எனக்கு தெரிய வேணாம்?"

"நாங்க ஒண்ணும் கிங்காங், தாராசிங் இல்லை. ஆனா, அதுக்காக உங்களைத் தூக்க முடியாத அளவுக்கு மோசமாகவும் போயிடல!"

"அப்படியா... எங்கே தூக்கு பார்க்கலாம்?"

கைகளைக் கட்டிக்கொண்டு நின்றார்.

அய்யனார் அவரது இடுப்பில் கையைக் கொடுத்து, தன் தோளுக்குச் சாய்த்து ஒரே தூக்காக தூக்கிக்கொண்டு, அப்படியே 'கிறுகிறு' என்று சுற்றினான். பிறகு, இரு கைகளால் 'வெயிட் லிஃப்'டைத் தூக்குகிற மாதிரி தலைக்கு மேலேயும் தூக்கினான்.

அவர் சிரித்தபடியே, "போதும் தம்பி... இறக்கிவிடு" என்றார். அவனும் இறக்கிவிட்டான்.

"சரி... இன்னொரு தடவை தூக்கிப் பார்க்கிறியா?"

"இன்னொரு தடவையா... எதுக்கு இப்படி வேண்டாத வேலையா பண்ணச் சொல்றீங்க?"


"எனக்காக ஒரு தடவை... ஒரே ஒரு தடவை."

–கெஞ்சிக் கொண்டே கைகளை கட்டிக்கொண்டு ஒரு தினுசாக மூச்சை உள்ளுக்கு இழுத்தார். சமமாக இருந்த மார்பு, அவர் இழுத்த மூச்சுக் காற்றால் 'பலூன்' போல் பருத்து–'கிண்'ணென மாறியது.

கால் இரண்டையும்கூட சற்று அகட்டி வைத்துக்கொண்டார்!

குமரிமுனையில் கடலுக்குள் இருக்கும் பாறையைப் பார்த்தபோது, விவேகானந்தர் நிற்கும் அதே தோற்றத்தில் உறுதியாக நின்றார்.

'போய்த் தொலைகிறது!' என்கிற மாதிரி அவரைத்



தூக்க தயாரானான் அய்யனார். முதல் தடவை முயன்ற மாதிரியே இடுப்பில் கை வைத்து தோளில் அவரை தூக்கிப் போட்டுக்கொள்ளப் பார்த்தான். ஆனால், இரும்புச் சிலையை தொட்ட மாதிரி இருந்தது. எவ்வளவு முயன்றும் அவரை வளைத்து தோளில் போட முடியவில்லை!

கணேசனுக்கு புரிந்துவிட்டது. சாமி தன்னை புரிய வைக்கத் தொடங்கிவிட்டார்! அய்யனார் இப்போது அவரைக் கட்டிக்கொண்டு, அப்படியே நேராக தூக்க முயன்றான்.

தரையோடு தரையாக... நட்டு போட்டு முறுக்கின மாதிரி நின்றிருந்தார். இறுக்கிப் பிடித்த அவன் கை இரண்டும்தான் வழுக்கிக்கொண்டு மேலேறின. ஆனால், ஒரு மில்லி மீட்டர்கூட தூக்க முடியவில்லை! மூச்சிரைத்தது. கைகள் அசந்து போய்... வலி எடுக்க ஆரம்பித்தன.

"ம்... ஆகட்டும்! கணேசா... நீயும் வந்து உன் நண்பனுக்கு உதவி செய்."

அவரிடம் கித்தாப்பு!

கணேசனும் முயன்றான்.

"அய்யனார்... நீ தோள்பட்டையைப் பிடி. நான் இந்த பக்கம் பிடிக்கிறேன். 'ஒன், டூ, த்ரி' சொல்லி 'ஏக் தம்'ல தூக்குவோம்!"

அவன் சொன்ன மாதிரியே தயாரானான் அய்யனார்.

"ம்... 'ரெடி'! ஒண்ணு... ரெண்டு... மூணு...!"

இருவரும் கத்தியதுதான் மிச்சம்.

அவர் நின்றுகொண்டேதான் இருந்தார்.

"வேணும்னா ஒண்ணு பண்ணுங்க. போய் இன்னும் ரெண்டு பேரை கூட்டிட்டு வாங்க. முயற்சி செய்யுங்க."

அவர் தங்கி இருந்த கற்பக விநாயகர் கோவில் மண்டபத்துக்கு வெளியே நிறைய பேர் இருந்தார்கள். ஆனால், அவர்களைப் போய் கூப்பிட அய்யனாருக்கு வெட்கம் தடுத்தது.

உள்ளுக்குள்... 'இது எதாவது மாய்மாலமா இருக்குமோ?'

என்றும் தோன்றியது.

"என்ன தம்பி... இது எதாவது மாய்மாலமா இருக்குமோன்னு யோசிக்கிறே போல இருக்குதே?"

கச்சிதமாக மனதைப் படம் பிடித்தார்.

"ஆமா... அப்படித்தான் நினைக்கிறேன்! நீங்க என்னவோ பண்றீங்க... இதுல ஏதோ 'ட்ரிக்' இருக்கு!"

அவநம்பிக்கையை வார்த்தையில் காட்டினான் அவன்.

"சரியா சொன்னே... 'ட்ரிக்'தான்! இந்த 'ட்ரிக்' தெரிஞ்சவன்தான் பணக்காரன். இது தெரியாம அச்சடிச்ச காகிதத்தை வெச்சிக்கிட்டு இருக்கிறவனா பணக்காரன்?"

அவர் தனது ஆரம்ப நிலை விளக்கத்துக்கு பதில் சொல்கிற மாதிரி இருந்தது. கணேசன் கூர்மையானான்.

"சாமி... என்ன 'ட்ரிக்' அது?"

"எதுக்கு கேக்கறே? அது இதுதான்னு நான் சொன்னா அப்புறம் அதுக்கும் ஒரு பதில் சொல்வே! நகைக்கடையில பேசாமலும், காய் வாங்கற இடத்துல வாய் ஜாலமும் காட்டுற சாமர்த்தியங்கள்தானே உங்க வரையில பெருசு. இதெல்லாம் 'மாய்மாலம்'தானே?"

அவர் ஊசி போல குத்தவும் செய்தார். அய்யனாரிடம் முதல் முறையாக பணிவு. சற்று வியப்புடன் அவரைப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறே... உனக்காக ஒரு காரியம் பண்ணப் போறேன். அதை பண்ணாம நான் எதைப் பண்ணாலும் நீ மனச் சமாதானத்தோடு என் பேச்சைக் கேட்கமாட்டே!

ஆமா... உன்கிட்ட பணத்தை அபகரிச்சிட்டுப் போனவன் இருக்கற இடம் தெரியுமா?"

"தெரியும்... நல்லா தெரியும். மேலத் தெருவுல 'ஒயின் ஷாப்' இருக்கு. அங்கதான் அவனும், அவனோட தலைவன் 'தாதா' முத்துலிங்கமும் இருக்காங்க."

"அப்ப... இப்பவே கிளம்பு. அவங்களை உடனே சந்திக்கணும்."

இப்பவேவா... அவங்களையா?"

"ஆமா! நீகூட வர வேணாம். போன பணம்... உன் வீட்டுக்கு தேடி வரும். அதை எடுத்துக்கிட்டுப் போய் 'கம்பெனி'யில கட்டிடு... என்ன?"

"சா... மி..."

"என்ன... பயமா இருக்குதா?"

"இல்ல சாமி. அங்க போய் எதாவது 'சித்து' வேலையைக் காட்டி..."

"ம்... 'சித்து' வேலையேதான்! இந்த மாதிரி எத்தன்களை சித்தன் தட்டிக் கேக்கறதுல தப்பு ஒண்ணும் இல்லியே?"

"இல்ல சாமி... சத்தியமா இல்ல. எனக்கும் அதுதான் வேணும். அவங்க மட்டும் உங்களால மடங்கிட்டாங்கன்னா...இந்த ஊரே உங்களைக் கையெடுத்துக் கும்பிடும் சாமி."

"அதெல்லாம் அப்புறம்! நீ முதல்ல அவங்க இருக்கிற இடத்தைக் காட்டு."

அவர் மண்டபத்தை விட்டு கிளம்ப ஆரம்பித்தார். அய்யனாருக்கும், கணேசனுக்கும் கொஞ்சம் நெருடலாக இருந்தாலும்... 'என்னதான் நடக்கிறது என்று பார்த்துவிடுவோம்' என்று தோன்றியது. கூடவே புறப்பட்டுவிட்டனர்!

## 4

மூச்சுக் காற்றில் பல ரகசியங்கள் உள்ளன. நமது உடலின் மூச்சுக்காற்று ஐந்து விதமாக இயங்குகிறது.

'அவைகளுக்கு பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன் என்று பெயர். இவை ஐந்து இடங்களில் நம் உடலில் தன் வேலையைச் செய்கின்றன. இந்த வாயுக்களுக்கு துணை போகும் வாய்ப்புகளும் உண்டு. அவைகளுக்கு நாகன், கூர்மன், கிரிகரன்,

தேவதத்தன், தனஞ்செயன் என்பது பெயராகும். பெயரிலேயே அதனதன் குணத்தை அறியலாம்.

நாகன்... தரையில் நாகமானது மிக வேகமாக ஓடும்போது, வளைவு நெளிவே இல்லாமல் செல்லும். கூர்மன்... இது மிக நிதானமாய் ஆமை போல் செல்லும். கிரிகரன்... இதன் தன்மை சக்கரம் போல சுழன்றபடியே பயணிப்பது. தேவதத்தன்... இது தேவர்களைப் போல விஷயத்தை ஜெயித்து அமிர்தம் உண்ட சிரஞ்சீவித் தன்மை கொண்டது.

தன் கிளைப் பயணத்தில் உடம்பின் விஷயங்களை அல்லது விஷம் போன்றதை அமிர்தமாக்கி, அதையும் தனதாக்கிவிடும். தனஞ்செயன்... இது வற்றாத செல்வத்தைப் போன்று ஜீவசக்தியைத் தரும் வாயு ஆதலால் இப்பெயரைப் பெற்றது.

இந்த வாயுக்களை முதலில் ஒருவர் புரிந்து உணர வேண்டும். அதன்பின் பயிற்சியால் இவைகளை இயக்கப் பழக வேண்டும். அதில்தான் இருக்கிறது... எல்லாவித சூட்சுமங்களும்!

**மே**லத் தெரு!

*நகரப் பரபரப்பில் மூச்சுத் திணறிக்கொண்டிருந்தது. ஆட்டோவும், கார்களும் ஓட வழியின்றி தேங்கித் தேங்கி செல்ல... ஒரே புழுதி.*

*தெருவின் இரு புறங்களிலும் வரிசையாக கடைகள். அதில் ஒன்றாக இருந்தது 'வீரன் பார்'.*

*முகப்பில் நிறைய கார்கள் நின்றிருந்தன.*

*உள்ளே உல்லாசமாய் 'கேபரே'கூட நடப்பதன் எதிரொலி.*

*போலீஸ் எட்டிக்கூடப் பார்த்ததில்லை!*

*எப்போதாவது எட்டிப் பார்க்க வேண்டும் என்றால் செய்தி முதலில் போய்விடும்!*

*போலீசும் வந்து எட்டிப் பார்க்கும். உள்ளே கோவில் போல அமைதி நிலவிக்கொண்டிருக்கும். இதுதான் கடந்த நாட்களின்*

நிகழ்வு.

ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் சாமியாரும், கணேசனும், அய்யனாரும் அதன் முன் வந்து சேர்ந்தார்கள்.

"உள்ளே வந்து ஆளை மட்டும் காட்டிட்டுப் போயிடு" என்றார் சாமியார். அய்யனாருக்கு பயமாகிவிட்டது. ஆனால், கணேசன் உற்சாகப்படுத்தினான்.

"சும்மா தைரியமா சொல்லுடா... சாமி பார்த்துப்பார்!"

"டேய்... சாமி ஒண்ணும் சினிமா 'ஸ்டார்' இல்லடா!"

"தெரியும்டா... அவர் பார்த்துக்குவாருங்கறேன்ல!"

கணேசன் எரிந்து விழ... அய்யனார் அவரோடு உள்ளுக்குள் நுழைந்தான். அவரைப் பார்த்து 'பாரே' வாயைப் பிளந்தது.

சிலர் இடக்குச் சிரிப்பு சிரித்தார்கள்.

அதையெல்லாம் அவர் லட்சியமே செய்யவில்லை!

ஆளுக்கு ஆள் குடிப்பதைப் பார்த்தபடி அய்யனாரைக் கூப்பிட்டு, அன்று அவனிடம் பணத்தை 'அபேஸ்' செய்துகொண்டு போனவனை அதில் காட்டச் சொன்னார்.

அய்யனாரும் பார்வையை ஒரு சுழற்று சுழற்றித் தேடினான்.

அந்த 'டி-ஷர்ட்' தடியனும் நின்றுகொண்டிருந்தான்.

அய்யனாரின் கை அவனை நோக்கி நீண்டது.

"சரி... நீ போ. வீட்டுல போய் இரு. இவன் பணத்தோடு வருவான்."

சாமியார் தீர்மானமாக துளிகூட அவநம்பிக்கை இல்லாமல் சொன்னார்.

"ஏன் சாமி... இங்க ஐம்பது பேருக்கு மேல இருக்காங்க. நீங்க எதையாவது பேசி தகராறு வந்துட்டா... அப்ப உங்களுக்கு உதவறதுக்காகவாவது..."

அய்யனார் அவர் மேல் நம்பிக்கை இல்லாமலே பேசினான்.

"நீ எனக்கு உதவ விரும்புறியா?"

"சினிமாவுலதான் சாமி கதாநாயகன் இந்த மாதிரி

'கிளப்'புங்களுக்கு வந்து எல்லாரையும் அடிச்சி நொறுக்கி ஜெயிப்பான். அதுக்குத் தகுந்த மாதிரி அடிக்கிறவங்களும் ஒருத்தர் பின்னால ஒருத்தரா வருவாங்க. கதாநாயகன் ஜெயிச்சாதான் கதை. அதனால எல்லாமே படு'செட்டப்'பா இருக்கும். அது பொய்ச் சண்டைன்னு தெரிஞ்சாலும் பார்க்கிறவங்களுக்கும் ரொம்பப் பிடிக்கும்.

ஆனா, இது நிஜம் சாமி! இவங்க கொலைகாரங்க. எனக்கு உதவ வந்து... உங்களுக்கு எதுவும் ஆகிடக்கூடாது பாருங்க..."

அய்யனாரின் விளக்கத்தை ரசித்த சாமியார், அவன் தலையை செல்லமாக வருடினார். அந்த நொடிகளில் அவனுக்கு பரவசமாக இருந்தது!

வாழ்நாளில் இப்படி ஒருவர் தொட்டு பரவசப்படுவது என்பது அபூர்வமான விஷயம். காதலிக்கும்போது காதலியின் ஸ்பரிசம் பரவசம் தரும். அதுவும்கூட ஆரம்ப நாட்களில்தான். அதன்பின் அது கசந்துவிடும்!

அய்யனாருக்கு அத்தை மகள் இருக்கிறாள். அவள் தொட்டபோது சிலிர்த்திருக்கிறான். அதன்பின் இப்போது சாமியார் தொட்டபோதுதான் சிலிர்த்துப் போனான். 'உடம்பு இப்படி சிலிர்ப்பது எதனால்?' என்றெல்லாம் அவனுக்கு தெரியவில்லை.

இருவரும் அங்கே பேசிக்கொண்டு நிற்பதை சிலர் வியப்பாக பார்த்தனர். சாமியாரிடம் வந்து, "என்ன சாமி... தண்ணி அடிக்க வந்தீங்களா? போய் அப்படி உக்காருங்க" என்று காலி மேசை–நாற்காலியைக் காட்டினான் 'அட்டெண்டர்'.

"இல்லப்பா... நான் அந்தத் தம்பிகூட பேசணும்" என்று சொல்லிவிட்டு, அய்யனார் சுட்டிக்காட்டியவனின் அருகில் சென்றார். அவனும் சாமியாரைப் பார்த்தான். பார்த்த நொடி சிரிப்பு வந்துவிட்டது!

"என்ன பெருசு... உனக்கெல்லாம் தண்ணி கேட்குதா?" என்று

எகத்தாளம் பேசினான்.

"ஆமா தம்பி! நான் குடிக்கக்கூடாதா?"

"குடிக்கலாமே... தாராளமாக குடிக்கலாம். குடிக்கத்தானே இந்த 'பார்'! ஆனா பெருசு... ஒரு 'பெக்'குக்கு மேல போயிடாதே... அப்புறம் 'மட்டை' ஆகிடுவே!"

"அப்படியா?"

"என்ன அப்படியா? ஊதுனா பறந்துடுற மாதிரி இருக்கே! என்கிட்ட கேள்வி கேக்கிறியா?"

"அப்ப நீ ஊதினா நான் பறந்துடுவேனா?"

"பின்ன... நீ ஊதுனா நான் பறந்துடுவேனா?"

அவன் பலமாக சிரித்தான்!

"முதல்ல நீ ஊது! நான் பறக்கிறேனான்னு பார்க்கிறேன். அப்புறமா நான் ஊதுறேன். நீ தாக்குப் பிடிக்கிறியான்னு பார்க்கறேன்."

சாமியார் வம்பு வளர்க்க ஆரம்பித்துவிட்டார்.

அய்யனாரும் கையைப் பிசைந்துகொண்டான்.

சாமியாரின் பேச்சு அந்த தடியனை கீறிக் கொப்பளிக்க வைத்தது.

"ஏய் பெருசு... என்ன பெரிய 'தாதா' மாதிரி பேசுறே! ஒரே தட்டு. தலை அப்படியே உள்ளால அமுங்கிடும் தெரியுமா?" – கத்தினான்.

"எங்கே... தட்டு பார்க்கலாம்?"

அடுத்து விநாடியே அவனது வலது கை, சாமியாரின் வழுக்கைத் தலை மேல் ஒரு குத்து குத்தியது. குத்திய வேகத்தில் கையை உதறிக்கொண்டு கத்தினான். ஓர் இரும்புச் சட்டியின் மேல் குத்தினால் கைக்கு என்னாகுமோ அப்படி ஆகி... விரல்கள் எல்லாம் நொறுங்கினது போல இருந்தது.

எல்லோரும திரும்பிப் பார்த்தார்கள்.

'பார்' என்றாலே இந்த மாதிரி சண்டைகள் சர்வ சாதாரணம்.

அதிலும் அவன் மேலேயே யாராவது கை வைக்கிறார்கள் என்றால் ஒரு கூட்டமே வந்து சுற்றி வளைத்துக்கொண்டு நின்றுவிடும்!

இப்பொழுதும் அதுதான் நடந்தது. அவர்களில் ஒருவன் கையை உதறியபடி நிற்கும் வில்லனிடம் கேட்டான்.

"பங்காரு... என்னடா ஆச்சு? இந்த கெழவன் ஏதாவது வேலை காட்டுறானா?"

"என்னன்னு தெரியல... தலையில ஒரு தட்டு தட்டினேன். இரும்புச் சட்டியைத் தட்டின மாதிரி கை நொறுங்கிப் போச்சு!"

"அடப் பாருடா... இந்த 'போல்ட்டு' மண்டையும், இரும்புச் சட்டியும் ஒண்ணாக்கும்? எங்க... நவுரு. நான் ஒரு குட்டு வைக்கறேன். ரத்தம் சும்மா ஊத்துக்கணக்கா பீறிக்கிட்டு வரப் போகுது பாரு."

ஒரு குண்டு உடம்புக்காரன் கையை விறைப்பாக குவித்து மூடிக்கொண்டு மோதிர விரல்கள் புடைக்க சாமியாரின் தலை மேல் ஓங்கி ஆவேசமாக ஒரு குட்டு வைத்தான். வைத்த நொடி கையை உதறிக்கொண்டு ஓர் ஓரமாய் போய் சுருண்டு உட்கார்ந்தான். உதடு இரண்டும் "ஐய்யோ... அம்மா" என்று பினாத்தியது.

மற்றவர்கள் சுதாரிக்க ஆரம்பித்தனர்.

"டேய் கிழவன்! சீனாக்காரன் படத்துல வர்ற மாதிரி கொஞ்சம் திடமான ஆளா இருக்கற மாதிரி தெரியுது. கையால அடிச்சா இப்படித்தான். நவுரு... இப்பப் பாரு."

பேச்சோடு அருகில் கிடந்த 'ஸ்டீல்' மேசையைத் தூக்கி ஓங்கி ஒரு போடு போட்டான். ஆனால், 'சேர்'தான் வளைந்து போனது.

சாமியார் அசையாமல் நின்றபடி, அவர்களை வெறித்தார். வெளியே நின்றுகொண்டிருந்த கணேசனும், 'என்னவோ ஏதோ...' என்று பார்க்க 'பாரு'க்குள் வந்து நடந்ததைப் பார்த்து விக்கித்துப் போயிருந்தான்.

இப்போது பயங்கரமான நிசப்தம் அங்கே! அந்த 'டி–ஷர்ட்' தடியன் பக்கம் திரும்பினார் சாமியார். அவன் 'திருதிரு'வென முழித்தான்.

"ஊதினா நான் பறந்துடுவேன்னு சொன்னவன் நீதானே?"

அவன் தலை ஆடி ஆமோதித்தது!

"இப்ப நான் ஊதுறேன். பறக்காம அப்படியே நில்லு பார்ப்போம்..."

சாமியார் சட்டென்று ஒரு 'யோக முத்திரை'க்கு வந்து காற்றை நிதானமாக உள் இழுக்கத் தொடங்கினார். சராசரி பருமனில் இருந்த அவர் மொத்த உடம்பும் காற்றுப் பிடிக்கும் 'பலூன்' போல பருக்க ஆரம்பித்தது.

எல்லோரும் அதிசயமான அந்தக் காட்சியைப் பார்க்க... அவர் உருவமும் விஸ்வரூபமாக ஆரம்பித்தது.

சினிமாவில் மட்டுமே அய்யனாரும், கணேசனும் இந்த மாதிரி காட்சிகளைப் பார்த்திருக்கிறார்கள். அதுவும் 'காமிரா ட்ரிக்'கில்! ஆனால், இங்கே நிஜத்தில்!!

"கணேசா... என்னடா இது?"–காதில் 'கிசுகிசு'த்தான் அய்யனார்.

"எதுவும் பேசாதே... கவனி."

தான் பருத்துப் புடைத்தது போதும் என்கிற முடிவுக்கு வந்தவராக அவனை நோக்கி ஓர் ஊது ஊதினார் சாமியார்.

அவனும் பிடிமானம் இல்லாமல் படுவேகமாகப் பறந்து பக்கத்துச் சுவர் மேல் மோதி கீழே விழுந்து, தரையில் குப்பை போல் அடித்துச் செல்லப்பட்டான். மற்றவர்களும் ராட்சத மின்விசிறிக் காற்றிடம் அகப்பட்டது மாதிரி அங்கும் இங்குமாக உதிர்ந்து சுவரோரமாய் சென்று பல்லி போல ஒட்டிக்கொண்டு நின்றார்கள்.

முப்பது விநாடி வரை விடாமல் ஊதிய சாமியார், பழைய வடிவத்திற்கு வந்து சாதாரணமாக அவர்களைப் பார்த்தார்.

எல்லோருமே அவரை வெறித்தனர். சிலர் கைகளைக் கூப்பி கும்பிட்டனர். அவரது பார்வையோ அந்த பங்காரு மேலேயே நிலைத்திருந்தது. அவனும் அவர் மேலேயே குறியாக இருந்தான்.

"வாடா இங்க..." – சுண்டுவிரலை அசைத்து அருகில் அழைத்தார். அவனும் உதறலோடு அருகில் வந்தான்.

"இங்க நீ பார்த்த எதுவும் 'மாய்மாலம்' கிடையாது. எல்லாமே அசுரப் பயிற்சி" என்றவர், அய்யனாரை நோக்கி கையைக் காட்டினார்.

"இவர்தான் என் குரு. யானையைக்கூட சாதாரணமா தோள்ல தூக்கிடுவார் தெரியுமா?"

அவர் சொல்ல... அய்யனார் அரண்டு போனான். அதற்கு மேல் அரண்டு போனான் அந்த பங்காரு.

"என் குருகிட்ட பணத்தைத் திருடிட்டுப் போயிருக்கே நீ! அது மட்டுமில்ல... கடை கடையா ஏறி தண்டல் வசூலெல்லாம் பண்றியாமே?"

"சாமி... சாமி! அது என் முதலாளி சொன்னதுக்காக செய்றதுங்க."

"இனி செய்வியா?"

"இல்லீங்க... செய்யமாட்டேங்க!"

"நீ மட்டும் இல்ல... உன் முதலாளியும் திருந்தணும். ஒழுங்கா வேலைக்குப் போகணும். இந்த 'பாரை'யும் இழுத்து மூடிடணும்."

"சாமி... இதெல்லாம் என் கையில இல்லீங்க!"

"போய் சொல்லு! உடனே, உன் முதலாளி... 'துப்பாக்கியால சுடுறதுக்கு என்னடா?'ன்னு திருப்பிக் கேட்பான். 'அப்ப என்னைச் சுட்டிருந்தா அடக்கி இருக்கலாமோ?'ன்னு உங்களுக்கும் தோணும். ஆகையால அதையும் இங்கே பார்த்துடுங்க. யார்கிட்ட துப்பாக்கி இருக்கு?"

சாமியார் கேட்க... ஒருவன் முன் வந்தான். சிறிய 'பிஸ்டல்'

ஒன்றை இடுப்பு மடிப்பில் ஒளித்து வைத்திருந்து எடுத்தான்.

"அதால என்னைச் சுடு."

"சுடுறதா... ஐயோ வேணாம் சாமி."

"சுடுடான்னா?"

"நிஜமா உங்களுக்கு எதுவும் ஆகிடாதே!"

"சுட்டு தெரிஞ்சுக்க... ம்..."

"இல்ல... எனக்குப் பயமா இருக்கு."

"தம்பி கணேசா. நீ வாங்கிச் சுடு பார்ப்போம்!"

"சாமி."

"சொன்னதைச் செய்."

கணேசனும் அந்த துப்பாக்கியை வாங்கி சாமியாரைப் பார்த்து சுட்டான். தோட்டா ஒரு கோந்து உருண்டை போல சாமியாரின் வயிற்றின் மேல் ஒட்டிக்கொண்டது.

"ம்... எவ்வளவு குண்டு இருக்கோ அவ்வளவையும் சுடு."

கணேசனும் "டுமீல்... டுமீல்" என்று தொடர்ந்து சுட... தோட்டாக்கள் "பச்சக்... பச்சக்" என்று சாமியாரின் வயிறு, தோள்பட்டை, மார்பில் பட்டு ஒட்டிக்கொண்டது. குடிக்க வந்தவர்களுக்கு எல்லாம் போதை இறங்கி உடம்பு நடுங்க ஆரம்பித்துவிட்டது.

தன் மேல் ஒட்டிக்கொண்டிருந்த தோட்டாக்களை ஏதோ வெந்து போன சின்னக் கிழங்கு கணக்கா எடுத்து, அது துளைக்கப் பார்த்த இடத்தில் லேசாக சிவந்து போயிருக்க கையால் துடைத்து விட்டுக்கொண்டார் சாமியார்.

வாயாலும் ஏதோ தீப்புண்ணைப் பார்த்து ஊதி விட்டுக்கொள்கிற மாதிரி ஊதினார்.

பங்காரு இப்போது கைகளைக் கட்டிக்கொண்டு அவரைப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறே... இவன்கிட்ட அடிச்ச பணம் எங்கே?"

"அது முத்துலிங்க முதலாளிகிட்ட இருக்குங்க!"
"பொய் சொல்லாதே!"
"நிஜமாங்க!"
"சரி... போய் அந்த ஆளைப் பார்த்து, இங்க நடந்ததைச் சொல்லி பணத்தைத் திருப்பி வாங்கி... என் குருவோட வீட்டுக்குப் போய் திருப்பிக் கொடுத்துடணும். என்ன...?"
"அவர் கொடுக்கலைன்னா...?"
"நான் வருவேன்னு மட்டும் சொல்லு! அதே நேரம் என்னை வரவழைச்சா உங்களையெல்லாம் விட்டு வெச்ச மாதிரி அந்த ஆளை விட்டு வைக்க மாட்டேன். ஒரே அடி. அப்புறம் சாகற வரை 'கோமா'வுல படுத்தே இருக்கும்படி ஆகிடும்னும் சொல்லிடு."
"சொல்றேன்... சொல்றேன்."
"இனிமே மனுஷங்களா நடந்துப்பீங்களா?"
"நிச்சயமா!"
அவர்களின் பதிலைக் கேட்டு மகிழ்ச்சியுடன் திரும்பினார் அந்த சாமியார்.
அய்யனார் கிட்டத்தட்ட ஸ்தம்பித்திருந்தான்.
"குரு! இந்த சிஷ்யன் வரம்பு மீறி ஏதாவது செய்திருந்தா மன்னிச்சிக்கணும். உங்களுக்கு தெரிஞ்சதுல பத்துல ஒரு பங்கைக்கூட நான் இங்க காட்டல! அதுக்கே இவங்க அரண்டு போயிட்டாங்க. அதே சமயம் உங்களை மாதிரி எல்லாம் தெரிஞ்சிருந்தும், அடக்கமா... சாதுவா இருக்க என்னால முடியாது. காட்ட வேண்டியதைக் காட்டினாத்தான் அடங்க வேண்டியவங்க அடங்குவாங்க. பார்த்தீங்களா... இங்க எல்லாரும் அடங்கிட்டதை!"
அய்யனாரைக் குருவாக்கி அவனுக்கு எல்லாம் தெரியும் என்கிற மாதிரி சாமியார் பேசியது அவனைக் குழப்பியது. அவனும் தாளமாட்டாமல்... 'சாமி' என்று பேச வாய் எடுத்தான். கணேசன்

சட்டென்று, "பேசாம இருடா. சாமி இப்படிப் பேசுறதுல ஒரு அர்த்தம் இருக்கு. மத்த விஷயத்தை வெளியே போய் பேசிக்கலாம்" என்றான்... பற்களைக் கடித்துக்கொண்டு!

அந்த குடிகாரக் கூட்டம் மொத்தமும் அய்யனாரைத்தான் பார்த்துக்கொண்டிருந்தது.

"போடு போடு என்று போட்ட இந்த கிழட்டுச் சாமியாருக்கு அய்யனார் குருவா? அதுவும் இத்தனை இளம் வயதில்?"

ஆச்சரியம் அவர்கள் முதுகில் ஏறி உட்கார்ந்திருந்தது.

"போகலாம் குரு" – சாமியார் கிளம்பினார்.

அய்யனாரும், கணேசனும் பின்தொடர்ந்தனர். அவரை மொத்தப் பேரும், 'கையது கொண்டு வாயது மூடி' வேடிக்கைப் பார்த்தனர்.

வெளியில் 'சைக்கிள் ரிக்ஷா' காத்துக்கொண்டிருந்தது. சாமியார் முதலில் அய்யனாரை ஏறி அமரச் சொன்னார். பிறகு, அவர் ஏறி உட்கார்ந்தார். கணேசனும் தொற்றிக்கொண்டான். 'ரிக்ஷா' புறப்பட்டது!

## 5

'அஷ்டமா சித்தி'கள் பற்றி தெரியவே ஒருவருக்கு பல காலம் ஆகலாம். தன் உடம்பைப் பற்றி அறியாத ஒருவரால் இந்த உலகின் எந்த ஒரு 'சூட்சமக் கல்வி'யைப் பற்றியும் அறியவே முடியாது!

தனது உடல் குறித்து ஒருவருக்கு ஐயம் திரிபர தெரிய வேண்டுமானால் அதற்கு 'யோக மார்க்கம்'தான் தலை சிறந்த ஒரே வழி. இந்த மார்க்கத்தில் பிரதானமாக அறிய வேண்டியதும்... புரிய வேண்டியதும் 'பிராணாயாமம்' என்னும் சுவாசக் கலையே!

இந்த சுவாசக் கலைதான் பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன் என்று ஐந்து கூறாக செயல்பட்டு நம்மை இயக்குவது! இவைகளின் துணைக் கூறுகள்தான் நாகன், கூர்மன்,

கிரிதரன், தேவதத்தன், தனஞ்செயன் என்னும் பெயர் கொண்ட வாயுக்கள்.

இதில் நாகன் என்னும் வாயுவிடம்தான் 'அஷ்டமா சித்தி'களில் ஒன்றான 'கரிமா' என்னும் பாறை போல உடம்பை இறுக்கிக்கொண்டு அசாதாரண பாரமாக்கிக்கொள்ளும் சக்தி ஒளிந்துள்ளது.

ஓர் ஆச்சரியம். எந்தப் பயிற்சியுமின்றி குழந்தையாய் இருக்கும் தருணங்களில் நாம் அசாதாரண 'கரிமா சித்தி'யைப் புரிந்திருக்கிறோம்! ஏதோ ஒரு காரணத்துக்காக அழுது அனத்தும்போது, குழந்தையின் உடலானது பாறை போல விறைத்துக்கொண்டு... அதைத் தூக்கும்போது அதீத கனத்துடனும் இருக்கும்.

அப்படி அழும்போது... குழந்தையானது தன்னையும் அறியாமல் தான் உள் இழுத்த மூச்சுக் காற்றில் 'நாகன்' என்னும் வாயுவை உடல் முழுக்க நிரப்பிக்கொள்கிறது. சில நிமிடங்கள் வரை நடைபெறும் இந்த அழும் செயல்தான் 'கரிமா'வின் பாலபாடம்!

*கற்பூர விநாயகர் கோவில் நோக்கி 'சைக்கிள் ரிக்ஷா' முன்னேறியது. வழி எல்லாம் சாமியார் மவுனமாகவே வந்தார். அய்யனார் பேச வாயைத் திறந்த போதெல்லாம் தடுத்துவிட்டார். சின்னக் குழந்தை போல தெருவில் போவோர் வருவோரை வேடிக்கைப் பார்த்துக்கொண்டும், பெட்டிக்கடை ஒன்றில் சூடம் மிட்டாய் வாங்கிச் சாப்பிட்டபடியும் வந்தார்.*

*அய்யனாருக்கு எல்லாமே பேரதிசயமாகத்தான் இருந்தது!*

*சற்றுமுன் விஸ்வரூபம் எடுத்தவர், இப்போது இப்படி சின்னக் குழந்தை போல் நடந்துகொள்வதை எதில் சேர்ப்பது என்றே அவனுக்குத் தெரியவில்லை!*

*"சாமி... நீங்க இப்படி மவுனமாகவே வந்தா என்ன அர்த்தம்? என்னையும் 'பேச வேண்டாம்"னு சொல்றீங்க! நிஜமா சொல்றேன்... நானும் சரி, கணேசனும் சரி... இந்த மாதிரி ஒரு*

சாகசத்தைச் சினிமாவுலகூட பார்த்ததில்லை. உங்களை 'ஃபிராடு' சாமியாராத்தான் முதல்ல நினைச்சேன். இப்பதான் புரியுது... நீங்க எவ்வளவு பெரிய மகான்னு.

ஆனா, என்னைப் போய் குருன்னு சொல்லி வம்புல மாட்டி விட்டுட்டீங்களே! நாளைக்கு அவங்க பாட்டுக்கு திரும்ப வந்து வம்பு பண்ணினா என்னத்த பண்ண? எனக்கு ஒழுங்கா தண்டால், பஸ்கி எடுக்கக்கூடத் தெரியாது சாமி"

புலம்பிக்கொண்டே வந்தான் அய்யனார். கணேசன் அப்படியெல்லாம் புலம்பவில்லை. அமைதியாக அய்யனாரின் புலம்பலை ஒரு பக்கமும், சாமியாரின் விளையாட்டுச் செய்கைகளை மறுபக்கமும் ரசித்தபடியே வந்தான்.

நடுநடுவே ரிக்ஷாக்காரன் திரும்பிப் பார்த்தான். இடையில் ஒரு மேடு குறுக்கிட்டது. வண்டியில் இருந்தபடியே மிதிக்க முடியவில்லை!

வண்டியைவிட்டு இறங்கி தரையில் கால்களை அழுத்தி ஊன்றி... உடம்பையும் முன்னால் சாய்த்து... சிரமப்பட்டு 'ஹேண்டில் பாரை' பிடித்து இழுத்துச் செல்லப் பார்த்தான்.

அவனது செயலை கவனித்த சாமியார், அவன் மூச்சுக் கட்டி இழுப்பதையே கவனித்தார். அதில் ஏதோ பிழை இருப்பது போல உணர்ந்தவர், அவனது காலைப் பார்த்தார். காலுக்கு 'ரப்பர்' செருப்பு போட்டிருந்தான். அரதப் பழசான அதிலும் ஏகப்பட்ட தையல்.

"இந்தாப்பா... அந்த செருப்பை அவுத்து வெச்சிட்டு இழு. உனக்கு இவ்வளவு சக்தி தேவைப்படாது... இதுல கால் பங்குகூட அதிகம்" என்றார்.

அவன் ஒரு மாதிரி பார்த்தான். அவனுக்கு 'பாரு'க்குள் நடந்த எந்த வித்தையும் தெரியாது. ஏதோ நடந்திருக்கிறது என்று மட்டும் தெரியும். ஆகையால், சாமியார் சொல்வது பெரிதாகவே

படவில்லை!

"சாமி... பேசாம வாங்க! நான் முப்பது வருஷமா வண்டி ஓட்டுறேன். எங்கே எவ்வளவு 'லோடு' போடணும்னு எனக்குத் தெரியும். செருப்பு இல்லாம இழுத்தா கால் பொத்துப் போயிடும். என்னமா வெயில் அடிக்குது... கவனிக்கிறீங்கல்ல?" என்றான்.

அதைக் கேட்டு சாமியாரும் வண்டியில் இருந்து திடீரென்று கீழே குதித்து இறங்கினார். அவனைப் பார்த்து, "நீ போய் உட்காரு. நான் இழுக்கிறேன் பாரு" என்றார்.

"என்ன சாமி இது விளையாட்டு? உக்காருங்க சாமி."

"நீ ஏறி உட்காருப்பா! நான் எப்படி இழுக்கிறேன்னு பாரு."

"சாமி... வண்டி மிதிக்கறது ஒண்ணும் சாதாரண விஷயமில்ல! இதென்ன சின்ன பிள்ளைங்க தள்ளி விளையாடுற கட்டை வண்டின்னு நினைச்சிட்டீங்களா... போங்க சாமி."

"இருக்கட்டும்ப்பா! சும்மா கொஞ்ச தூரம் நான் சும்மா முயற்சி பண்ணிப் பார்க்கிறேனே... முடியலைன்னா நீயே மிதி."

சாமியார் குரலில் கெஞ்சல். அவனும் அரை மனதாக நகர்ந்துகொண்டு அவரிடம் வண்டியைக் கொடுத்தான். ஆனால், ஏறி உட்காராமல் கீழேயே நின்றான்.

"ம்... ஏறி உட்காரு."

"இல்ல சாமி. நான் கூடவே நடந்து வர்றேன். நீங்க மிதிங்க."

"ஏறி மிதிக்கிறது அப்புறம். இப்ப நான் சும்மா இழுக்கத்தான் போறேன். நீ ஏறி உக்காருன்னா உக்காரு."

செல்லமாக அதட்டினார். அவனும் ஏறி உட்கார்ந்தான்.

ஒருவருக்கு மூவர் நசுக்கியபடி அமர்ந்திருக்க... சாமியார் 'ஹேண்டில் பாரை'த் தொட்டார். பிறகு கையை விலக்கி 'பரபர'வென்று தேய்த்துவிட்டுக்கொண்டார். திரும்பவும் பிடித்தவர்... மூச்சை இழுப்பது தெரியாமல் இழுத்து கால்களை அழுத்தமாக தரையில் பதித்தபடி வண்டியை நகர்த்த ஆரம்பித்தார்.

முதல் சில அடி... சற்று சிரமப்படுகிற மாதிரி இருந்தது. அதன்பிறகு 'சிவ்'வென்று ஓடத் தொடங்கியது அந்த 'சைக்கிள் ரிக்ஷா'.

அவரும் சீராக அத்துடன் ஓடினார்.

ரிக்ஷாக்காரனுக்கு ஆச்சரியமாகிவிட்டது!

எங்கே அழுத்தம் கொடுக்கிறார்... எங்கே இழுக்க முயற்சி செய்கிறார் என்றே தெரியவில்லை. கையை 'பாரில்' சாதாரணமாக பிடித்திருக்கிற மாதிரிதான் தெரிந்தது.

சைக்கிள் ரிக்ஷா அபாரமாக ஓடியது.

அவரின் அடுத்த சாகசத்தைப் பார்த்து கணேசனைக் கட்டிக்கொண்டான் அய்யனார்.

"கணேசா... உண்மையைச் சொல்லுடா! யாருடா இவர்? எப்படிடா இப்படி முடியாத விஷயங்களையெல்லாம் ஊதித் தள்ளுறார்" என்று அவனைக் கிண்டினான்.

"பேசாம வா! சாமிக்கு இதெல்லாம் 'மகா அல்பம்"!!' என்று மட்டும் கணேசன் சொன்னான். கொஞ்ச தூரத்தில் சாமியார் 'பெடலில்' காலை வைத்து ஏறி, 'சீட்'டில் அமர்ந்து மிதிக்க ஆரம்பித்தார்.

ரிக்ஷாவும் பெட்ரோல் வாகனம் போல வேகத்தைக் கூட்டிக்கொண்டது. சாமியார் திரும்பி ரிக்ஷாக்காரரைப் பார்த்து ஒரு கள்ளச் சிரிப்பு வேறு சிரித்தார். தெருவில் போகிற வருகிறவர்களும் அந்த ரிக்ஷாவின் ஓட்டத்தை ஓர் அதிசயமாகவே பார்த்தனர்.

"சாமி... மெள்ளப் போங்க. சரியா 'பிரேக்' பிடிக்காது. நிறுத்தறது கஷ்டம் சாமி" என்று ரிக்ஷாக்காரரும் பதிலுக்குப் பதறினார்.

"நீ பேசாம வா. உனக்கு இதெல்லாம் கஷ்டம். எனக்கு எல்லாமே விளையாட்டு!"

"இல்ல சாமி. இந்த வேகம் வேண்டாம். வண்டியை நிறுத்தறது கஷ்டம் சாமி. ஐய்யோ... எதிர்ல பாருங்க..."

அவர் பதற... எதிரே லாரி! பக்கவாட்டிலும் இடமில்லை. சாமியாரும் 'பிரேக்'கைப்பிடித்துப் பார்த்து வேகம் குறையாமல் போக... சரேலென்று முன்னால் எழுந்து குனிந்து, முன் பக்க 'டயர்' மேல் கைகளை வைத்து அழுத்தினார்.

சில அடியிலேயே சக்கரம், அவர் பிடித்த லாவகத்தில் வேகத்தை இழந்து 'கிரீச்'சிட்டு நின்றது. லாரிக்காரனும் 'பிரேக்' அடித்து நிறுத்திவிட்டு, "சாவுக் கிராக்கிங்களா... இப்படியா வருவீங்க" என்று கத்தினான்.

அவனது 'கமெண்ட்', சாமியாரைக் குத்திக் குடைந்துவிட்டது. நிமிர்ந்து ஒரு குத்துப் பார்வை பார்த்தார்.

"என்னய்யா பார்க்கறே! எடுய்யா வண்டியை பின்னாலே..."

"நான்தான் எப்படியோ வண்டியை நிறுத்திட்டேன்ல! எதுக்கு 'சாவுக் கிராக்கி'ன்னுல்லாம் பேசுறே?"

"என்னத்த வண்டிய நிறுத்திட்டே? இப்படித்தான் காட்டுத்தனமா வண்டியை ஓட்டுவியா?"

"தம்பி... திரும்பவும் நீ தப்பா பேசறே! நான் ரோட்ல வண்டியை வேகமாக ஓட்டினது வாஸ்தவம். ஆனா, தப்பா ஓட்டல. இது 'ஒன்வே'. இதுல நான் போகலாம். ஆனா, நீ வரக்கூடாது. தெரியும்தானே?"

"என்ன ரிக்ஷா... பார்க்க பிச்சைக்காரனாட்டம் இருந்துகிட்டு சட்டம் பேசறியா நீ? இப்ப வண்டியை எடுத்தேன். உன் ரிக்ஷா அப்படியே 'சட்னி' ஆகிடும் தெரிஞ்சுக்க."

அவனும் வார்த்தையை வளர்த்தான். அய்யனாரும், கணேசனும் நெளிந்தனர். ரிக்ஷாக்காரர் பதிலுக்கு கத்தினார்.

"ஏய், 'டுபாக்கூரு'! நீ 'ஒன்வே'யில வந்துட்டு, எங்ககிட்ட முண்டா தட்டுறியா?"

"தா... இவன்கிட்ட என்ன பேச்சு? லாரியை எடு. ஒரு முட்டு முட்டு. அப்படியே சரிச்சி விட்டுட்டுப் போய்கிட்டே இருப்போம். ஒண்றையணா 'ரிக்ஷா'வை வெச்சிக்கிட்டு... சொகுசு கார்காரன் மாதிரி பேசுறதைப் பாரு."

லாரியில் பக்கத்தில் இருந்தவன் டிரைவரை உசுப்பிவிட, அவனும் லாரியை 'ஸ்டார்ட்' செய்தான்.

இனி பேசுவதில் பயனில்லை என்று நினைத்த சாமியாருக்கு சட்டென்று ஒரு எண்ணம் தோன்றியது. ஓடிப் போய் 'என்ஜின்' புகை வெளியேறும் குழாயின் வாயை கையால் மூடிக்கொண்டு நின்றார்.

லாரி டிரைவரும் சாவியைத் திருகி 'ஸ்டார்ட்' செய்ய எவ்வளவோ முயன்றான். லாரி உறுமியது. ஆனால், 'ஸ்டார்ட்' ஆகவில்லை. எட்டிப் பார்த்தவன்... புகை போக முடியாமல் சாமியார் மூடிக்கொண்டு நிற்பதைப் பார்த்து அரண்டு போய்விட்டான்.

"ஏய் பன்னாடை. கை வெந்து போயிடும்ய்யா. எடுய்யா கையை" – கத்தினான்.

"பின்னால வந்து வழி விடுறேன்னு சொல்லு. கையை எடுக்கிறேன்."

"பாருடா... கையை இப்ப பொத்தல் ஆக்குறேன்" – சொன்ன 'ஜோரில்' சாவியை திரும்பத் திரும்ப திருகி... 'கிளச்'சிலும் அழுத்தம் கொடுத்தான்.

"கணேசா... என்னடா இது? இவர் என்னடா இப்படியெல்லாம் ரகளை பண்றாரு? பாருடா... கூட்டம் வேடிக்கைப் பார்க்கிறதை" – இது அய்யனார்.

"பேசாம உக்காந்திரு. சாமி பேர்ல ஒரு தப்பும் இல்ல. லாரிக்காரன் தப்புக்கு... இப்படி பண்ணாத்தான் வழிக்கு வருவாங்க. பார்த்துக்கிட்டே இரு."

கணேசன் சமாளிக்க... 'டிரைவிங் சீட்'டைவிட்டு இறங்கி,

அவரை நோக்கி ஓடினான் டிரைவர். உலக அதிசயம் மிக்க காட்சி ஒன்றைப் பார்க்கிற மாதிரி பார்த்தான்.

'ஏற்கெனவே பல நூறு மைல் தூரம் புகையைக் கக்கி வந்த அந்த குழாய்... அச்சு அசல் நெருப்புக் குழாயாகத்தான் இருக்க வேண்டும். கிட்டே போனாலே அனல் காந்தும். அதை எப்படி இந்த ஒல்லிக்குச்சிக் கிழவர் சர்வ சாதாரணமாக அடைத்துக்கொண்டிருக்கிறார். ஒருவேளை சூடே ஏறவில்லையோ? அதற்கும் வாய்ப்பில்லையே!'

வெறிக்கும் அவனுக்குள் 'கன்னாபின்னா'வென குழப்பம். சாமியார் ஒரு மாதிரி சிரித்தார். சிரித்தபடியே கையை விலக்கினார்.

விலக்கிக்கொண்ட கையை ஒரு பார்வை பார்த்துவிட்டு தானும் தொட்டுப் பார்க்கும் ஆசையோடு கையை அழுத்தமாக குழாய் துவாரத்தின் மேல் வைத்துப் பார்த்தான் டிரைவர். அடுத்த நொடி கையை உஷ்ணம் தாக்கியதோடு அவனை பின்னோக்கித் தள்ளியது.

சாமியார் சிரித்தார். அவன்... கையைப் பார்த்தான். அதில் வட்ட வடிவத்தில் தோல் கறுத்து, உப்பு நீரோடு சேர்ந்து ஒரு கொப்புளமாகவே உருவாகிவிட்டிருந்தது. ஆனால், சாமியார் படு சகஜமாக இருந்தார். அவர் கையில் லேசாய் புகைக் கறுப்பு மட்டும் ஒட்டி இருந்தது. அவன் அந்த நொடியே மிரண்டு போகத் தொடங்கினான்.

"என்னப்பா... நாக்கு நீளமானவனே! என்ன அப்படிப் பார்க்கறே? உன்னைச் சுட்ட நெருப்பு என்னைச் சுடலியேன்னுதானே?"

"ஆமா! எப்படி... எப்படி?"

அவன் கேள்வியில் விழ... ரிக்ஷாக்காரரும், அய்யனாரும், கணேசனும் ரிக்ஷாவை விட்டு இறங்கி ஓடி வந்து சாமியாரை நோக்கி கும்பிட்டவர்களாய், "சாமி... போதும்! கிளம்புங்க சாமி. கூட்டம் வேடிக்கைப் பார்க்குது பாருங்க" என்று கெஞ்சினார்கள்.

லாரிக்காரனும் பிரமிப்புடன் போய் லாரியில் ஏறி அமர்ந்து, அதை பின்னால் எடுத்து திரும்பவும்... 'ரிக்ஷா' முன்னேறியது. ஒருவழியாக கோவிலுக்கு வந்து சேர்ந்தது.

ரிக்ஷாக்காரருக்கு கூலி தருவதற்கு இடுப்பு முடிச்சில் பணத்தைத் தேட ஆரம்பித்தார் சாமியார். அவரோ காலடியில் கிடந்தார். அப்படியே பேசினார்.

"சாமி... காசெல்லாம் வேணாம். நீங்க யாருன்னு தெரியாம சாதாரணமா நினைச்சு பேசினதுக்கு மன்னிச்சிடுங்க."

"எழுந்திருய்யா! எதுக்கு கால்ல எல்லாம் விழுறே? இப்ப உன் கால்ல நான் விழுந்தாதான் கணக்கு சரியாகும். ஏன்னா... பரமாத்மா எனக்குள்ளேயும் இருக்காரு. உனக்குள்ளேயும் இருக்காரு பாரு."

பதிலோடு சரேலென்று காலில் விழுந்தார். ரிக்ஷாகாரரால் எதுவும் செய்ய முடியவில்லை. கண்கள் கலங்கிக் போனார்.

நிமிர்ந்து எழுந்த சாமி அவரது தலையை வருடிக் கொடுத்தார். பிறகு, "நீ நாளைக்கு காலையில என்னை வந்து பாரு. உனக்கு மூச்சுப் பயிற்சி சொல்லித் தர்றேன். அதை நீ தினமும் செய்தியானா வண்டி இழுக்கும்போது கஷ்டமாகவே இருக்காது. என்ன...?" என்று அவருடைய தலையை ஆட்டச் செய்தார். பிறகு திரும்பி... காத்திருந்த சில பக்தர்களையும் பார்த்து சிரித்தபடியே மண்டபத்தில் போய் அமர்ந்தார்.

கணேசனும், அய்யனாரும் அவர் அருகே சமமாக அமரவே அச்சப்பட்டனர்.

"உட்காருங்க!"

"இருக்கட்டும் சாமி... ஒரு மணி நேரத்துல என் வாழ்க்கையையே மாத்திட்டீங்க! நான் என்னென்னு சொல்வேன்?"

அய்யனார் உடைந்து போய் கண் கலங்கினான்.

"கலங்காதே... போ! இப்ப இருந்தே உனக்கு நல்ல காலம்

ஆரம்பம். 'யோகம்' தொடங்குதுன்னும் சொல்லலாம். நான் சொன்னாலும் சொல்லலேன்னாலும் நீ எனக்கு குருதான்!

இனிமே எனக்கு மட்டும் குரு இல்ல. இந்த ஊர்ல இருக்கற சண்டியருக்கெல்லாமும் குரு. அவங்களை தப்பு பண்ணவிடாம உழைக்க வை... போ."

"நான் குருவா... எப்படி சாமி? நீங்க என்னென்னமோ செஞ்சீங்க! எதை வெச்சு செஞ்சீங்கன்னு புரிஞ்சிக்கற அறிவுகூட எனக்கு கிடையாது. சும்மா குருன்னா எப்படி சாமி?"

"குருதான்! எல்லாம் புரியும்... போகப் போக ஒவ்வொண்ணா புரியும். கவலைப்படாதே... கிளம்பு. இந்த நிமிஷம்... பங்காருங்கறவன் பணத்தோடு உன்னைச் சந்திக்க கிளம்பி இருப்பான். அதை வாங்கி உன் முதலாளிகிட்ட திருப்பிக் கொடு. அப்படியே அந்த தலைவனை... அதாவது, அந்த முத்துலிங்கத்தையும் பார்த்துப் பேசு. நீ இனி எது பேசினாலும் அவன் கேட்பான். அவன்னு இல்லாம எல்லாருமே உன் பேச்சைக் கேட்பாங்க."

"எப்படி சாமி... எப்படி? நான் சாதாரண மனுஷன் சாமி. உங்களுக்கு தெரிஞ்ச வித்தை எதுவும் எனக்குத் தெரியாதே!"

"அதான் சொன்னேனே... தெரிய வரும். ஒவ்வொண்ணா தெரிய வரும். கிளம்பு. என்னைப் பார்க்க நிறைய பேர் காத்திருக்காங்க பாரு."

"நீங்க சொல்லிக் கொடுக்காம இதை எப்படி சாமி தெரிஞ்சிக்க முடியும்?"

"நம்பு. தெரிய வரும்னா தெரிய வரும். கிளம்பு. நேரமாவுது பாரு."

அவனை அனுப்புவதிலேயே அவர் குறியாக இருக்க... கணேசனும் புரிந்தது போல்... "கிளம்பு அய்யனார். சாமி சொன்னா அதுல அர்த்தம் இருக்கும்" என்று பிடித்து இழுத்தான்.

அய்யனாரும் கிளம்பினான்... அரை மனதாக!

திரும்பும்போது 'பாரில்' சாமியார் செய்த சாகசங்களும், வழியில் ரிக்ஷாக்காரரிடம் பண்ணின சாகசங்களும் மனசுக்குள் சுழன்று சுழன்று வந்தன.

"கணேசா... எனக்கு ஒரே பிரமிப்பா இருக்குடா! எப்படிடா... எப்படிடா ஒரு மனுஷனால இப்படியெல்லாம் நடந்துக்க முடியும்? இதெல்லாம் மனுஷச் செயலா... இல்லை 'மாயா ஜாலம்'ன்னு சொல்றாங்களே அந்த மாதிரியாடா?" என்ற அய்யனாரை அடக்கி இழுத்துக்கொண்டு நடந்தான் கணேசன்!

## 6

**உ**லகில் எதெல்லாம் சாகசம் எனப்படுகிறதோ அதெல்லாம் ஒரு விதத்தில் மிகச் சாதாரணமான ஒன்றும்கூட!

ஒரு சைக்கிளை ஓட்டுவதற்கு முன்... 'இதன் மேல் ஏறி எப்படி ஓட்டப் போகிறோம்?' என்கிற பயம் இருந்தபடியே இருக்கும்.

இருந்தாலும் உலகில் லட்சக் கணக்கானோர் சைக்கிள் ஓட்டுவதைப் பார்த்திருப்பதால், 'கற்றுக்கொண்டால் வசப்பட்டுவிடும். அது ஒரு வித்தை' என்று மனம் நினைத்து கற்றுக் கொள்ளவும் துணியும்.

கற்றுக் கொள்ளும்போது நிறைய முறை கீழே விழுவோம். எழுவோம். அடிபடும். அதன்பின் மெல்ல நிதானம் வசப்பட்டு, கீழே விழாமல் ஓட்டுவோம். ஓரளவு ஓட்டத் தொடங்கி, கீழே விழாமல் போன பிறகு துணிவு வந்துவிடும். அதன்பின் வேகமாக ஓட்டுவது என்பது நிகழும். நாள் செல்லச் செல்ல இரு கைகளையும் விட்டுவிட்டு ஓட்டுவது, சைக்கிள் மேல் நின்றுகொண்டு ஓட்டுவது என்று அதில் வித்தைகள் புரியத் தொடங்கிவிடுவோம்.

உண்மையில் சைக்கிள் ஓட்டத் தெரிந்த ஒருவருக்கும், தெரியாத ஒருவருக்கும் பார்க்கும்போது எந்த வேற்றுமையும் தெரியாது.

ஓட்டத் தெரிந்தவர் பயமில்லாதவர்... ஓட்டத் தெரியாதவர் பயமுள்ளவர் என்கிற ஒரு வேறுபாட்டைத் தவிர வேறொன்றும்

இல்லை. ஓட்டப் பழகும்போது அந்த பயம் மெல்ல நீங்கி... ஒரு நிதானம், ஒரு லாவகம், ஒரு வித 'பேலன்ஸ்' செய்யும் 'சூட்சும' உணர்வு பிடிபடுகிறது.

அப்படி பிடிபட்ட பிறகு சைக்கிள் ஓட்டுவது என்பது பெரிய விஷயமில்லை. சாதாரண செயல் என்றாகிவிடும்.

இது எல்லா சாதனைகளுக்கும் பொருந்தும். பிடிபடும் வரை அது பெரிதாக... புரியாத ஒன்றாக, புரிந்துகொள்ளவே முடியாத ஒன்றாக எல்லாம்கூட தோற்றம் தரும். பிடிபட்டுவிட்டாலோ 'இவ்வளவுதான்!' என்றும் தோன்றும்.

'கரிமா சித்தி'யும் அப்படித்தான்! மூச்சுப் பயிற்சியால் இது வசப்பட்டுவிட்டால் பெரிதாகத் தெரியாது. 'கரிமா' முதலான 'அஷ்டமா சித்தி'களுக்கான மூச்சுப் பயிற்சி என்பது பிராணாயமப் பயிற்சியால் மட்டும் வந்துவிடுவதில்லை.

நமது சரீரத்தில் தொப்புளுக்கு அருகில் 'கண்ட மூலதாரணை' என்று ஒரு பாகம் உள்ளது. உடம்பின் சர்வ நாடிகளின் மூலாதாரப் பகுதி இது. இதை உணர்ந்து நமது மனதை அங்கே நிலைப்படுத்த பழக வேண்டும். அந்தப் பழக்கத்துக்குப் பிறகே கிளை வாயுவான நாகனை நாம் பிரத்தியேகமாக கட்டுப்படுத்த இயலும்.

நாகனை கட்டுப்படுத்தி இயக்கக் கற்றுக்கொண்டுவிட்டால் உடல், பாறை போல் கனப்பதில் இருந்து... பிறரால் துளியும் அசைத்துப் பார்க்க முடியாத ஸ்திரமான நிலைக்கு உள்ளாவது வரை எல்லாம் சாதாரணமாகிவிடும்.

இந்த நிலைக்கு நாம் சென்றுவிட்டால், மரத்தையே பிடுங்கி எறியும் வல்லமை உள்ள புயல் காற்றாலும்கூட 'கரிமா' புரிபவரை அசைக்க முடியாது!

'**சர்**சர்' என்று அம்பு போட்டது போல அய்யனார் வீட்டு முன் 'ஜீப்பு'களும், 'கார்'களும் வந்து நிற்க... அவற்றில் இருந்து 'திபுதிபு'வென பலர் இறங்கினார்கள்.

குறிப்பாக 'பான்பராக்'கை சதா மென்றபடி கழுத்தில்

தாம்புக்கயிற்றின் கனத்துக்கு தங்கச்சங்கிலி அணிந்திருக்கும் முத்துலிங்க 'தாதா'வும் அதில் இருந்தான்.

அவனைச் சுற்றி அவனது அடி வருடிகள்!

அதில் பிரதானமாய் பங்காரு.

முன்னால் நடந்தபடி முத்துலிங்கத்தை பார்த்துக்கொண்டே சென்றான்.

அவர்களைப் பார்த்து தெருவே புற்றுப் பாம்புகளைப் போல உள்ளடங்கிவிட்டது.

தெருவில் ஈ, காக்கை இல்லை!

அய்யனார் வீட்டில் அம்மா கன்னியம்மாள் கிழிந்த துணிகளை தைத்துக்கொண்டிருக்க... மூன்று சகோதரிகளும் ஆளுக்கொரு வேலையாக இருந்தனர். 'திபுதிபு'வென முத்துலிங்கம் வருவதைப் பார்த்து மயங்கி விழாத குறையாக அவனைப் பார்த்தனர்.

"அம்மா... குருசாமி இல்லீங்களா?" – முத்துலிங்கத்துக்கு முன்னால் வந்த பங்காரு, கையை கட்டிக்கொண்டு மிகப் பணிவாகக் கேட்டான்.

சில நேரங்களில் வில்லன்கள் இப்படி பணிவின் சிகரமாய் நடிப்பதுகூட ஒரு 'மேனரிஸம்'தானே?

மூத்தவள் சகுந்தலா... அவன் நடிப்பதாக நினைத்துக்கொண்டு மருண்ட கண்களோடு, "நீங்க யாரைக் கேட்கிறீங்க?" என்றாள்.

"நம்ம தம்பியைத்தானுங்க! அவர் பணத்தைக் கொடுக்க வந்திருக்கோம். அப்படியே தம்பியைப் பார்க்க ஆசைப்படுறாரு அண்ணன்."

அவன் பேச்சோடு... அய்யனார் திருட்டுக் கொடுத்த தோல் பையை மிகப் பணிவாக அவர்கள் முன் நீட்டினான். அந்த நிமிஷம், 'ஒரு புலி எதற்காக இப்படி பூனை வேஷம் போடுகிறது?' என்கிற கேள்விதான் அவர்களுக்குள். அந்தப் பையை கை நீட்டி வாங்கக்கூட பயமாக இருந்தது.

"வாங்கிக்குங்க. அதுல ஐம்பதாயிரம் இருந்துச்சு. அப்படியே திரும்பிக் கொடுத்துட்டோம். வாங்கிக்கங்கம்மா" – பங்காரு கெஞ்சினான். முத்துலிங்கமோ அந்த ஓட்டை வீட்டை பார்வையால் அளந்துகொண்டிருந்தான். வாய் மட்டும் 'பான்பராக்'கை 'கிரைண்டர்' கணக்காய் அரைத்துக்கொண்டே இருந்தது.

"வாங்கிக்கங்கம்மா" – அவனிடம் மீண்டும் குழைவு.

"நீ... நீங்களா திரும்பித் தர்றீங்க?" – கன்னியம்மாள் எப்படியோ அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டாள்.

"ஆமாம்மா... நாங்களேதான்! எங்களுக்கு இனிமே தம்பி தான்ம்மா எல்லாம். இந்தப் பணம் மட்டுமில்ல... நாங்க இனி வாங்கப் போற எல்லா 'தண்டல்' பணமும்கூட தம்பிக்குத்தான். அது பார்த்து எங்களுக்கு எவ்வளவு கொடுக்குதோ அதை வாங்கிக்கறோம்."

கன்னியம்மாளுக்கு 'பகீர்' என்றது!

'ஏன் இவர்கள் இப்படி பேசுகிறார்கள்? 'கத்தி' போய் 'வால்' வந்த கதையாக என்ன இதெல்லாம்?' – என்று குழம்பிப் போனாள். தன் மூன்று பெண்களையும் திரும்பிப் பார்த்து "உள்ளால போங்கடி" என்றாள் வேகமாக! ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்றது அவளது உள்ளுணர்வு.

அவனோ பரிதாபமாக முகத்தை வைத்துக்கொண்டு அவளைப் பார்த்தான். அவனுக்குப் பின்னால் புதர் போன்ற தாடி–மீசையுடன், கைலிக் கட்டும்... கோடு போட்ட 'பட்டன்' போடாத சட்டையுமாக பல ரவுடிகள். சிலர் கையில் அரிவாள் இருந்தது. ஒருவன்... நூலை சுற்றிச் சுற்றி அவிழ்க்கிற மாதிரி 'சைக்கிள் செயினை' சுற்றிச் சுற்றி அவிழ்த்தான்.

அதே சமயம் வீட்டுக்கு சொற்ப தூரத்தில் அய்யனாரும், கணேசனும் வந்துகொண்டிருந்தனர். அய்யனார் நடந்து வரும்போதே 'ரிக்ஷா'வை இழுக்கும்போது சாமியார் இழுத்து

மூச்சைப் பிடித்தது மாதிரி செய்து பார்த்து கையையும் ஆவேசமாக வீசிப் பார்த்துக்கொண்டே வந்தான்.

"என்னடா பண்றே?"

"சாமி மூச்சுப் பிடிச்சு வண்டியை இழுத்தாருல்ல! அதான் செஞ்சு பார்த்தேன்."

"அடேங்கப்பா... பார்த்தே நீ கத்துக்கிட்டியாக்கும்? அவர் அதை கத்துக்க எங்கெல்லாம் போனார் தெரியுமா?"

"எங்கெல்லாம்...?"

"எனக்குத் தெரிஞ்சு அவர் போகாத மலை இல்ல. குறிப்பா இமயமலையில மட்டும் பல வருஷம் இருந்திருக்காரு. குளிர், ஆளைச் சாப்பிடுற இடம் அது! அங்கயே சாமி கோவணத்தோடுதான் இருந்திருக்காரு தெரியுமா?"

"அப்படியா... எனக்கென்னமோ அவர் எனக்குள்ள பூந்துகிட்டு, 'ம்... மூச்சை இழு, விடு'ன்னு சொல்ற மாதிரியே இருக்கு."

"இருக்கும்... இருக்கும். அதான் உன்னையே குருன்னு சொல்லிட்டாரே!"

"அதான்டா புரியல கணேசா! வெளியில யார்கிட்டேயாவது சொன்னா சிரிக்க மாட்டாங்களா?"

அவன் கேட்க... "நிச்சயமா!" என்று கணேசனும் சிரிக்க, லாரி ஒன்று 'ஸ்டார்ட்' ஆகாமல் சிலரால் தள்ளப்பட்டுக்கொண்டிருந்தது. அது நிறைய இரும்பு சாமான்கள்.

தள்ள முயற்சிப்பவர்களோ எண்ணி நான்கு பேர். அவர்களும் வியர்த்து ஒழுகிப் போயிருந்தனர். கணேசனையும், அய்யனாரையும் பார்த்த அவர்களில் ஒருவன், "சார் கொஞ்சம் 'ஹெல்ப்' பண்ணுங்க" என்றான்.

கணேசனும் மறுக்காமல் லாரியின் பின்புறம் 'டயரை'யொட்டி நின்றுகொண்டு தள்ளத் தயாரானான். அய்யனாரும் பக்கத்திலேயே நின்று தள்ளத் தொடங்கினான்.

"ம்... ம்... ஆகட்டும்! 'ரெடி'... 'ரைட்'!"

காக்கிச் சட்டைக்காரன் குரல் கொடுக்க... லாரியும் லேசாக அசைந்து நகர... அய்யனாருக்குள் திடீரென்று ஓர் ஆவேசம்!

காதுக்குள் யாரோ ஒருவர், 'ம்... உபானத்துல போ. மூச்சை இழு. கண்டதாரணையில நிறுத்து. எதையும் சிந்திக்காதே! நீ இப்ப ஒரு மலையை அசைக்கப் போறே!அதை அப்படியே தூக்கி வீசப் போறே! ம்... ம்' என குரல் கொடுத்த மாதிரி இருக்க... அவனும் மூச்சுக் காற்றை ஆவேசமாக உள்ளே இழுத்து, கண்களை மூடிக்கொண்டு... அதை மார்புக் கூட்டுக்கு கீழேயும் கொண்டு சென்று மொத்த உடம்பையும் விறைப்பாக்கி இரு உள்ளங்கையிலும் உச்சபட்ச அழுத்தம் கொடுத்து தள்ள... லாரி படுவேகமாக ஓட ஆரம்பித்தது.

'ம்... ம்... ம்...!'

காதுக்குள் தொடர்ந்து உற்சாகப்படுத்தும் குரல் ஒலித்துக்கொண்டே இருந்தது. ஒரு கட்டத்தில்... நடுவில் மற்றவர்கள் ஓட முடியாமல் அப்படி அப்படியே உதிர்ந்து விழ... அவன் ஒருவன் மட்டுமே லாரியைத் தள்ளியபடி ஓடிக்கொண்டிருந்தான். லாரியும் 'ஸ்டார்ட்' ஆகி, புகையை சீற்றத்துடன் கக்கியபடியே 'பிரேக்' அடித்து நின்றது.

காக்கிச் சட்டைக்காரன் ஓடி வந்தான். பயங்கர வியப்புடன் பார்த்தான். அய்யனாரோ குளத்தில் குளித்துவிட்டு ஈரம் சொட்ட எழுந்து வந்தவன் மாதிரி இருந்தான்.

"என்ன சார் நீங்க... ஒத்தை ஆளா இந்த தள்ளு தள்ளிட்டீங்களே! என்னால நினைச்சே பார்க்க முடியல" என்றான். கணேசனும் அப்பொழுதுதான் வந்து சேர்ந்தான்.

"அய்யனார்... என்னடா இது? நீ பாட்டுக்கு பிசாசாட்டம் லாரியைத் தள்ளிகிட்டே போயிட்டே..." என்று அவனும் பெருமூச்சு விட்டான்.

"நான் எங்கேடா தள்ளினேன்? என் காதுக்குள்ள ஒருத்தர்

உக்காந்துட்டு, 'ம்... மூச்சை இழு. உபானத்துல போ. கண்ட மூலதாரணையில மனசை வை'ன்னுல்லாம் சொல்ற மாதிரி இருந்தது. நானும் பிடிச்சு ஒரே தள்ளு. ஆனா, அது இவ்வளவு வேகமா ஓடும்னு எனக்கே தெரியல!"

அய்யனார் சொல்லி முடிக்க... லாரிக்காரன் ஒரு நன்றியோடு புறப்பட்டுப் போனான். ஆனால், கணேசன் முகத்தில் புது விதமான சிந்தனை.

"கணேசா... என்ன யோசனை?"

"ஒண்ணும் இல்லடா! 'சாமி சொன்னது எப்படி நடக்கப் போகுது?'ன்னு யோசிச்சிக்கிட்டே இருந்தேன். இப்ப நீ பேசினதைக் கேட்ட பிறகு புரிஞ்சிப் போச்சு."

"என்ன புரிஞ்சிருச்சு?"

"டேய்.... நீ கொடுத்து வெச்சவன்டா. எனக்கு பல வருஷமா சாமியைத் தெரியும். ஆனா, அவரோட கருணை கிடைக்கல. ஆனா, நீ அப்படி இல்லடா! அவர் உனக்குள்ள பரிபூரணமா நிரம்பிட்டாருடா."

"இது என்னடா உளறல்?"

"உளறலா... சத்தியம்டா! அஞ்சாறு பேரால ஓர் அங்குலத்துக்கு அந்த லாரியைத் தள்ள முடியல. ஒரே ஒருத்தன் நூறு மீட்டர் ஓட்டப் பந்தயக்காரன் மாதிரி ஓடித் தள்ளினியே... இன்னும் புரியலையா உனக்கு?"

"அப்ப காதுல கேட்ட குரல் அவரோடதா?"

"அந்த ஆராய்ச்சி இப்ப எதுக்கு? அதான் சொல்லிட்டாரே... 'போகப் போக எல்லாம் புரியும்'ன்னு! இன்னும் எவ்வளவு இருக்கோ?"

கணேசன் வியக்க... அய்யனாரிடமும் ஆழ்ந்த சிந்தனை. வியர்வையை வழித்துக்கொண்டே தொடர்ந்து நடந்து தெருமுனைக்கு வந்த போது 'சிலீர்' என்றது!

வீட்டு வாசலில் கார்களும், 'ஜீப்பு'களும் பயமுறுத்தின.

“அய்யனார்... சாமி சொன்ன மாதிரி அந்த பங்காரு வந்துட்டான்னு நினைக்கிறேன். வாடா சீக்கிரம்...” – இருவரும் வேகமாக நடந்தனர்.

தெருவில் ஈ, காக்கை இல்லை!

எல்லாம்... வந்திருக்கும் கோஷ்டியின் எதிரொலி!

“கணேசா... பயமா இருக்குடா. அந்த பங்காரு... வீட்ல யாரையும் எதுவும் பண்ணாம இருக்கணும்டா!”

“பயப்படாம வா. உன்னை நம்பு... சாமியை நினைச்சுக்கோ. வா சீக்கிரம்.”

கணேசனிடம் நடை... ஓட்டமாகியது. அவர்கள் வருவதை ரவுடிப் பட்டாளமும் பார்த்தது!

“அண்ணே... ‘குருஜி’ வந்துட்டாரு” என்று ஒருவன் அலறினான். உள்ளே வீட்டு வாசல்படி அருகிலேயே அந்த முத்துலிங்க ‘தாதா’, நாற்காலியைப் போட்டு உட்கார்ந்திருந்தான். அருகில் நின்றுகொண்டிருந்தான் பங்காரு. வாசல்படியில் கன்னியம்மாள் நின்றபடி...

அய்யனார் வரவும் அவள் பதற்றமடையத் தொடங்கினாள்.

“அய்யா... வாய்யா. எங்கேய்யா போயிட்டே? என்னய்யா நடக்குது இங்கே? இவங்கல்லாம் அரை மணி நேரமா உனக்காக வந்து காத்திருக்காங்கய்யா.”

மகனைப் பார்த்து பதறினாள். அய்யனாரும்... பங்காருவையும், முத்துலிங்கத்தையும் பார்த்தான். முத்துலிங்கம்... பச்சைப் பாம்பு இரையை விழுங்கு முன் கூர்மையாக பார்க்கிற மாதிரி அவனைப் பார்த்தான்.

கணேசன் துணிச்சலாக பேச ஆரம்பித்தான்.

“என்ன பங்காரு... எங்கே வந்தே?”

“என்னங்கண்ணே... தெரியாத மாதிரி கேக்கிறீங்க? நம்ம குருகிட்ட அடிச்ச பணத்தைக் கொடுத்துட்டுப் போகத்தாண்ணே வந்திருக்கோம்.”

"வந்து அரை மணி நேரம் ஆச்சுன்னு அம்மா சொல்றாங்க. பணத்தைக் கொடுக்க வந்தா... கொடுத்துட்டுப் போறதுக்கு என்னய்யா? இங்கேயே என்னய்யா வேலை உங்களுக்கு?"

"தலைவர்... 'குருஜி'யைப் பாத்து பேசணும்னாரு. அதான்!"

பங்காரு பணிவாகத்தான் பதில் சொன்னான். அடிபட்டவன் 'பிளாஸ்திரி' ஒட்டெல்லாம் போட்டிருந்தான்.

ஆனால், முத்துலிங்கமோ எந்த பதற்றமும் இல்லாமல் 'பான்பராக்' பொட்டலத்தைப் பிரித்து உள்ளங்கையில் கொட்டி, அதை ஊதியபடி இருந்தான்.

"என்ன விஷயம்?" – அய்யனார் துணிவை வரவழைத்துக் கொண்டு அவன் முன் நிமிர்ந்தான். முத்துலிங்கம் முன்னால் யாரும் இப்படியெல்லாம் கேள்வி கேட்டு விரைப்பாக நின்றதில்லை. அவனது வரலாறு அப்படி!

கிட்டதட்ட இருபது கொலைகள். நாற்பது வழக்குகள். பல வருஷ சிறை வாசம். உடம்பிலும் ஏகப்பட்ட தழும்புகள். அதில் முகத்தில் இடது கன்னத்தில் ஒன்று.

'பான்பராக்'கை வாயில் போட்ட முத்துலிங்கம், அந்தத் தழும்பை விரலால் நிரடியபடியே அய்யனாரைப் பார்த்தான்.

"கேக்கறேன்ல... என்ன விஷயம்?" – அய்யனாரும் போலி தைரியத்தில் 'பிடரி'யை உசுப்பினான்.

முத்துலிங்கம் நிதானமாக... வாயில் நிரம்பிய 'பான்பராக்' எச்சிலை 'ப்ளீச்' என்று பக்கத்திலேயே துப்பிவிட்டு, கையையும் தட்டி விட்டுக்கொண்டு எழுந்தான்.

அய்யனாருக்கு அடிவயிற்றைப் பிரட்டத் தொடங்கியது.

"கேள்விப்பட்டேன்... உன்னைப் பத்தி நிறையவே கேள்விப்பட்டேன்" என்று முத்துலிங்கமும் பேச்சை ஆரம்பித்தான்.

"அதுக்கு...?"

"பாராட்டிட்டுப் போக வந்தேன்ப்பா. ஒரு ஆள்... ஒரே ஒரு

ஆள். அதுவும் வத்தலும் தொத்தலுமான கிழட்டு ஆள், என் ஆளுங்களை அடிச்சு பஞ்சராக்கி இருக்கான்னா அதுக்கு நிறைய 'தில்லு' வேணும்ல? அதைப் பாராட்ட வேணாம்?"

"முத்துலிங்கம்... உன் பாராட்டைத் தூக்கி உடப்புல போடு. இப்ப இடத்தைக் காலி பண்ணு."

"அவசரப்படுறியே நைனா. இது ரொம்ப ஆபத்து!"

"எனக்கா... உனக்கா?"

அய்யனார் 'நறுக்'கென்றுதான் கேட்டான். முத்துலிங்கத்திடம் யாரும் இப்படி வசனம் பேசியது இல்லை. அவன் மீசை துடித்தது. மீண்டும் கன்னத்து தழும்பைத் தேய்த்து விட்டுக்கொண்டவன், கோபத்தை அடக்கிக்கொண்டான். செயற்கையாகவும் சிரித்தான்.

சிரித்தபடியே... "நீ ரொம்ப அவசரப்படுறே! இந்த ஊர்ல உன்ன மாதிரி ஒருத்தன் இருக்கறது எனக்குத் தெரியாம போயிடுச்சு. மதிச்சு உன் வீடு தேடி வந்திருக்கற என்கிட்ட நீ இப்படி திமிறா பேசுறது கொஞ்சமும் நல்லா இல்லை அய்யனார்" என்ற முத்துலிங்கம் தன் கூட்டத்தைப் பார்க்க... அவர்கள் அவசரமாக ஒதுங்கி, இவர்கள் இருவரும் தனியாக பேச வழி செய்து கொடுத்தனர்.

"உன் வீரமும், வித்தையும் வீண் போகக்கூடாதுன்னுதான் உன்கிட்ட ஒப்பந்தம் பண்ணிக்க வந்திருக்கேன். என்னைப் பார்த்து பயந்த என் ஆளுங்களை... உன்னைப் பார்த்தும் பயப்பட வெச்சுட்டே! அப்படிப்பட்ட நீயும், நானும் சேர்ந்து நின்னா இந்த ஊர் மட்டுமல்ல... நாடே நம்மளப் பார்த்து பயப்படும். 'எலெக்ஷன்ல' போட்டி போடாம எம்.எல்.ஏ.-மந்திரியாகி, சென்ட்ரல் 'கவர்மென்ட்'டுக்கு கட்டுப்பட்டவங்களா நாட்டை ஆளாம, தன்னிச்சையா நாம ஆட்டி வைக்கலாம்.

தினம் தினம் காலடியில பணம் கொட்டும். இப்படியொரு ஒப்பந்தத்தை நான் போட்டுக்க மாட்டேனான்னு பல மந்திரிங்களே ஏங்கிக்கிட்டு இருக்காங்க. ஆனா, அவங்களை நான் பெருசா

நினைக்கல! உன்கிட்ட இருக்கற வித்தையைத்தான் பெரிசா நினைக்கிறேன். என்ன சொல்றே...?"

கேள்வி அவனிடம் முடிந்தாலும்... பார்வையோ கன்னியம்மாள் மேல்தான் விழுந்தது. அவள் கதறினாள்.

"அய்யனார் வேணாம்டா... இவங்க சவகாசமே வேணாம். உன்கிட்ட அப்படி எதைக் கண்டுடா இப்படி பயப்படுறாங்க?"

"அம்மா... நீங்க சும்மா இருங்க. அய்யனாரைப் பத்தி உங்களுக்கே தெரியாது. அவன் பதினாறு வருஷம் படாத பாடுபட்டு பல 'யோக சித்தி'களை அடைஞ்சவன். சுண்டு விரலால யானையையே சாச்சுடுவான். ஆனா, இதை ரொம்ப ரகசியமா வெச்சிருந்தான். எனக்கு உண்மை தெரிஞ்சிருந்தாலும், வெளியே சொல்லக்கூடாதுன்னு சொல்லிட்டான்.

இன்னிக்கு இவன் மேலேயே இவங்க கை வைக்கவும்... இவனால சும்மா இருக்க முடியல! அதான் இவங்கல்லாம் இப்படி வீட்டுக்கே வந்து கால்ல விழுறாங்க."

கன்னியம்மாவைக் கட்டிப் போட சாமர்த்தியமாக ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு முத்துலிங்கத்திடம் வந்தான் கணேசன்.

"இதோ பாரு... நீயும், உன் கூட்டமும் திருந்தணும். நீங்க உழைச்சு வேலை செஞ்சு பிழைக்கணும். அதுக்காகத்தான் உயிரோடு விட்டு வெச்சிருக்கோம். இப்படி வந்து பேரம் பேசுறதுக்காக இல்ல!

'நான் மாறமாட்டேன். இப்படியேதான் இருப்பேன்'னா... உனக்கும், உன் கூட்டத்துக்கும் என் நண்பன் அய்யனார் சார்பா ஒரு எச்சரிக்கை செய்யறேன். அவ்வளவு பேரும் வருஷக் கணக்குல 'கோமா'வுல படுக்கையா இருக்கும்படி ஆகிடும். இதுதான் முதலும்... கடைசியுமான எங்க பதில். இப்ப நீ இடத்தைக் காலி பண்ணுறியா?"

கணேசன் பேச்சோடு அவனது காரை நோக்கி கையைக் காட்டினான். முத்துலிங்கம் முகம் சூம்பிப் போய்விட்டது. கண்ணில் செவ்வரியும் ஓடியது. இடுப்பில் ஒளிந்திருந்த பிச்சுவாக்

கத்தி, 'என்னை எடுத்து ஒரே சொருகி சொருகிவிடு' என்று சொல்கிற மாதிரி உணர்ந்தவன், கையைக்கூட அங்கே கொண்டு சென்றான். அது தெரிந்த பங்காரு, மின்னல் வேகத்தில் இறங்கினான்.

"தலைவா... வேண்டாம். துப்பாக்கி தோட்டாவாலேயே இவங்களை எதுவும் செய்ய முடியாதுங்கறதுதான் உண்மை. நீங்க பிச்சுவாவை எடுத்து குத்தப் போய்... பதிலுக்கு குருஜி 'அட்டாக்' பண்ணினா அவர் சொன்ன மாதிரி 'கோமா'தான்! பேசாம வந்துடுங்க."

பேச்சோடு கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு நடந்தான்.

ஜீப்களும், கார்களும் சீற்றமுடன் திரும்பி பறக்கத் தொடங்கின.

தெரு எங்கும் புழுதி மூடியது.

கன்னியம்மாள் குழம்பிப் போயிருந்தாள். ஓடி வந்து அய்யனாரைக் கட்டிக்கொண்டு, "அய்யா... என்னடா நடந்துச்சு? சாமியாரைப் பார்க்கறேன்னுதானேடா போனீங்க? உன்னைப் பத்தி கணேசன் என்னவெல்லாமோ சொல்றானேடா? என்னடா விஷயம்?" – என்று சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

தெருவும் மெல்ல வெளியே வந்து, ஆச்சரியமாக வேடிக்கைப் பார்த்தது.

"அம்மா... உள்ளே போய் பேசுவோம். எல்லாரும் பார்க்கிறாங்க பாருங்க" என்று அய்யனாரையும், அவளையும் அழைத்துக்கொண்டு உள்ளுக்குள் சென்றான். அய்யனாரின் அக்காக்களும் வந்து நிற்க... நடந்ததை எல்லாமும் விலாவாரியாக சொல்லி முடித்தான்.

"அப்ப இதெல்லாம் அந்தச் சாமியாரால வந்த மாற்றங்களா?" – சகுந்தலா பெருமூச்சோடு மோவாய்க்கு கையைக் கொண்டுப் போனாள்.

"ஆமாங்க்கா! அவர் பெரிய யோகி. வர்மம், சிலம்பம், சித்துன்னு பல விஷயம் அவருக்கு அத்துபடி. ஆனா, அதையெல்லாம் இதுநாள் வரை வெளிக்காட்டிக்காம இருந்தார். அய்யனாரைப்

பார்க்கவும் பரிதாபப்பட்டு அதுல கொஞ்ச வித்தையைக் காட்டினார்.

அதான் இங்க அரண்டு போய் வந்துட்டாங்க. இனி எந்த நாளும் இந்தப் பக்கம் தலை வெச்சிக்கூட படுக்க மாட்டாங்க."

"அவன் முறைச்சு பார்த்துட்டு போனதைப் பார்த்தா அப்படி தெரியலியேப்பா?"

"கவலைப்படாதீங்க! அப்படியே ஏதாவது வாலாட்டினாலும் அய்யனாருக்கு சமாளிக்கத் தெரியும்."

"இவன் எப்படிடா சமாளிப்பான்? அவருன்னா சாமியார். காடு-மலைன்னு அலைஞ்சு, நாலு விஷயத்தை கத்து வெச்சிருக்கறவர். இவனுக்கு என்னடா தெரியும்? அவனுங்க ஏடாகூடமா ஏதாவது பண்ணிட்டா?"

"இல்லம்மா... அப்படி எதுவும் நடக்காது. அய்யனாருக்கு இனிதான் நல்ல காலம் ஆரம்பம்னு சாமியார் சொன்னார். அதை நான் வர்ற வழியிலேயே ஒரு லாரி ரூபத்துல பார்த்துட்டேன்."

அய்யனார் பெரிய அதிர்ஷ்டசாலிம்மா! சிலர் தவமாய் தவம் இருப்பாங்கம்மா. ஆனா, அவங்க முன்னால எல்லாம் சாமி வரவே வராது. சிலர் எதுவுமே செய்யாம... 'எனக்கென்ன?'ன்னு இருப்பாங்க. சொல்லப் போனா... 'சாமியாவது பூதமாவது?'ன்னு திட்டக்கூட செய்வாங்க. ஆனா, அவங்க முன்னாடி சாமி ஓடி வந்து நிற்கும். இதுல முதல் ரகத்துக்கு உதாரணம் நான். இரண்டாவது ரகத்துக்கு எடுத்துக்காட்டு அய்யனார்."

பேசப் பேச கணேசனுக்கு கண்ணீர் பெருகிவிட்டது!

"கணேசா என்னடா... எதுக்கு அழுறே?"

"என்னால அழாம இருக்க முடியலைடா! உன்னைப் பார்த்தா எனக்குப் பொறாமையாகூட இருக்குடா. எப்படியோ உன்னால இனி எல்லாருக்கும் நல்லது நடந்தா சரி! அந்த முத்துலிங்கம் திரும்ப வந்து பேரம் பேசினா... அவனைத் தண்டிக்கத் தயங்கிடாதே! அதே நேரம் ஊர்ல தப்புத் தண்டாவுல அவன் ஈடுபடாமலும்

நீ பார்த்துக்கணும். சாமி அதுக்காகத்தான் உன்னை தேர்ந்தெடுத்து உனக்குள்ள நுழைஞ்சிருக்காரு. ஞாபகம் வெச்சுக்கோ. நான் வரட்டா?"

உரிய எச்சரிக்கைகளோடு கண்ணீரைத் துடைத்துக்கொண்டு கிளம்பினான்.

சகுந்தலா, சுசிலா... பாடம் போல் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

"சுசீ... நடக்கறது எல்லாம் என்னடி கனவா... இல்லை நிஜமா?"

## 7

கண்ட மூலதாரணையோ... இல்லை, பிராணாயாம யோகப் பயிற்சிகளோ... எதையும் செய்வதற்கு அபார 'திட சித்தம்' மிக அவசியம்.

இது இல்லாத நிலையில் இந்த யோகமும், சித்திகளும் வெறும் கற்பனையாய்... நம்ப முடியாத ஒன்றாகவே தோற்றம் தரும்.

'திட சித்தம்' என்பது மனம் சார்ந்தது!

எவர் ஒருவருக்கு மனதில் சலன சஞ்சலங்கள் இல்லையோ... அவருக்கு 'திட சித்தம்' சாத்தியம். ஓர் இடத்தில் திட சித்தத்தில், தியானத்தில் அமர்ந்துவிட்டால் மலைப் பாம்பே வந்து சுற்றி வளைத்தாலும் மனதை கண்ட மூலத்தில் இருந்து விலக்கக்கூடாது.

இப்படிப்பட்டவர்கள் உடலில் மயிர்க் காலளவு அசைவுகூட இருக்காது. இப்படிப்பட்டவர்கள் மட்டுமே மூச்சுப் பயிற்சியில் முன்னேறி, உள் உடற்கூறு பற்றிய ஞானத்திலும் விரிவடைந்து, உறுப்புகளையும் தன்னிச்சையாக ஆட்டுவிக்க முடியும். இவர்கள் எந்த ஆதாரமுமின்றி அந்தரத்தில் பத்மாசனத்தில் அமரலாம். நீரின் மேலும் மூழ்காமல் மிதக்கலாம். பாம்பு புற்றே கட்டினாலும் அதனால் செயல் இழக்காமல் தியானத்தில் நீடிக்கலாம்.

விஷத்தைக் குடித்து அதை உடலில் செயல்படுத்தவிடாமல் தடுக்கலாம். ஈரத் துணியைக்கூட பார்வை நெருப்பால் எரிக்கலாம். ஒரு படி மேலே போய் 'நேத்திரக் களரி' போல எதிரில் உள்ள மிக

மிக திடமான பொருளைக்கூட அசைத்து வீழ்த்தலாம்.

உலகின் பவுதீக விதிகள் இவர்களிடம் அடிபட்டுப் போகும். இது சத்தியம்... நிச்சயம்!

**த**னது ஓட்டைச் சைக்கிளில் பணப்பையோடு புறப்பட்ட அய்யனாரை தெருவே புதிய மரியாதையோடு பார்த்தது. ஒரு பெரியவர் நிறுத்தி, "ராஜா... அந்த 'தாதா' கோஷ்டியை உண்டு இல்லைன்னு பண்ணிட்டேயாமே... கேள்விப்பட்டேன். என்னால நம்ப முடியல! நீ நிஜமா பெரிய வீரன்தான்" என்று பாராட்டி கைகுலுக்கினார்.

அய்யனாருக்கு பெருமிதமாகவும், கூச்சமாகவும் இருந்தது. 'சாமியாரின் செயலுக்கு தனக்குப் பாராட்டா?' என்று மனதுக்குள் கேட்டுக்கொண்டவன், அந்தப் பெரியவர் தொடர்ந்து புகழ இடம் கொடுக்காதபடி கிளம்பினான்.

தெருவில் சில குட்டி ரவுடிகளும் இருக்கிறார்கள். டீக்கடைகளுக்கு வெளியில் 'சிகரெட்'டை இழுத்துக்கொண்டு சத்தமாய் சிரித்துப் பேசி அலம்பல்' செய்வார்கள்.

அய்யனார் சைக்கிளில் வருவதைப் பார்க்கவும் 'சிகரெட்'டைத் தூக்கி எறிந்துவிட்டு, வாயைக்கூட 'ச்சூ... ச்சூ' என்று சுத்தப்படுத்திக்கொண்டனர்.

'பஸ் ஸ்டாப்'பில் டீச்சரம்மா ஒருவர் "அய்யனார்... 'யூ ஆர் ரியலி கிரேட்'!" என்று சற்று கத்தியே பாராட்டினார்.

அய்யனாருக்கு சிறகு இல்லாமல் பறக்கிற மாதிரிகூட இருந்தது. எதிரில் இரண்டு 'போலீஸ் கான்ஸ்டபிள்'கள் வந்துகொண்டிருந்தனர். அவர்களுக்கும் செய்தி போயிருந்தது.

அய்யனாரைப் பார்த்து மரியாதையாக 'சல்யூட்' அடித்தார்கள். 'இப்போது போனால்... அந்த சப்–இன்ஸ்பெக்டர் சரவணசிவம் என்ன செய்வார்?'

அய்யனார், சைக்கிளை மிதிக்கையில் தனக்குள் கேட்டுக்கொண்டான். அவரது அலட்சியமும், புகாரைப் பதிவு

பண்ணாமல் இழுத்தடித்துப் பேசியதும் ஞாபகத்தில் உரசின.

சைக்கிளை 'ஸ்டேஷன்' நோக்கிச் செலுத்தினான். தோளில் குறுக்குவாக்கில் தொங்கியபடி இருந்தது அவனது 'கலெக்ஷன் பேக்'!

'ஸ்டேஷனை' நெருங்கியவன் சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தான்.

ஏட்டும், 'ஹெட் கான்ஸ்டபிளும்' அவனை ஏதோ அபூர்வ ஐந்துவைப் பார்க்கிற மாதிரி பார்த்தனர்.

சப்–இன்ஸ்பெக்டர் சரவணசிவமும் பார்த்துவிட்டு சற்று தடுமாற்றத்தைக் காட்டினார் முகத்தில்!

அவன் தன் 'கலெக்ஷன் பேக்'கைக் காட்டினான்.

"அவங்களா கொண்டுக்கிட்டு வந்து கொடுத்துட்டாங்க. கேள்விப்பட்டிருப்பீங்களே?"

நேராக சுற்றி வளைக்காமல் விஷயத்தைத் தொட்டான்.

"எப்படியோ கிடைச்சுருச்சுல்ல... சந்தோஷம்!"

சப்–இன்ஸ்பெக்டர் சுரத்து இல்லாமல் பதில் சொன்னார்.

"இல்ல சார்... உங்களுக்கு கொஞ்சம்கூட சந்தோஷம் கிடையாது. நீங்க சம்பளத்தை நம்பி பிழைக்கறவர் கிடையாது. அந்த பொறுக்கியோட 'மாமூல்'ல ஏகபோகமாக வாழ்ந்துகிட்டிருக்கிறவர். தப்பு நடந்தாதான் உங்களுக்கெல்லாம். ஊர்ல அமைதி திரும்பிட்டா வேலையே இல்லாம போயிடும்ல? வழக்கமான 'மாமூல்' வராது இல்லியா?"

அய்யனார் எகிறினான்.

"தம்பி... நீ இடம் தெரியாம வந்து சினிமா 'டயலாக்'கெல்லாம் பேசுறே!"

சரவணசிவம் சீற்றத்தை மெல்லக் காட்டினார்.

"நம்ம வாழ்க்கையில நடக்கறதுதானே சார் சினிமாவுல வருது. நான் புகார் கொடுக்க வந்துருந்தப்போ... 'உன் பணம் கிடைக்க நானாச்சு!'ன்னு நீங்க சொல்லி இருந்தா நான் எவ்வளவு



சா–3

சந்தோஷப்பட்டிருப்பேன். அதை யோசிச்சீங்களா?"

"உண்மைதான்! ஆனா, இந்த உலகத்துலேயே அஞ்சு வருஷத்துக்கு ஓர் எஜமானனைப் பார்க்கிற துர்பாக்கிய கூட்டத்தைச் சேர்ந்தவங்க நாங்க. அதை நீயும் யோசிக்கணும்."

"அரசியல்வாதிங்களைச் சொல்றீங்களா? அப்ப உங்களுக்குன்னு சட்டதிட்டம்-வரைமுறை எதுவுமே கிடையாதா?"

"இப்படியெல்லாம் கேள்வி கேட்கறது ரொம்ப சுலபம். ஆனா, பதில் சொல்றது ரொம்ப கஷ்டம்."

"இது 'சால்ஜாப்'! இங்க நேர்மையா இருக்க முடியாதுன்னு சொல்லாம சொல்றீங்க."

"தப்பான அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வரும் வரை எங்க வரையலேயும் நேர்மையா இருக்க முடியாதுதான்!"

"அப்ப ஏழைங்க கிடந்து தவிக்க வேண்டியதுதானா?"

"தப்பா ஓட்டுப் போட்டதுக்கு அதுதான் தண்டனை!"

"இப்ப நீங்கதான் சார் சினிமா வசனம் பேசுறீங்க. 'எலெக்ஷன்'ல யாரும் ஒரு ரவுடி, எம்.எல்.ஏ.வா வரணும், ஒரு கொலைகாரன் எம்.எல்.ஏ.வா வரணும்னு தேடிப் பிடிச்சு ஓட்டுப் போடுறதில்லை. 'இவருக்குப் போடுவோம். இருக்கறதுல 'பெட்டர்'! இவர் ஏதாவது நல்லது செய்யறாரான்னு பார்ப்போம்'ன்னு நம்பித்தான் ஓட்டுப் போடுறாங்க. ஞாபகம் வெச்சுக்குங்க."

"எப்படியோ... மக்கள் ஓட்டு போட்டு பொறுப்புக்கு வர்றவங்க சொல்றதைக் கேட்டு ஆட வேண்டியதுதான் எங்க கடமை. அது புரிஞ்சா சரி!"

"ஆமா... இந்த முத்துலிங்கம் என்ன பொறுப்புல இருக்கான்னு அவனைக் கண்டுக்காம இருக்கீங்க?"

"பொறுப்புல இருக்கிறவங்களுக்கு வலது கையா... இடதுகையா இருக்கறவங்களும் பொறுப்புல இருக்கறவங்கதானே தம்பி? இப்பக்கூட எனக்கு ஒரு தகவல் வந்தது. இந்த தொகுதி எம்.எல்.ஏ.தான் மந்திரியா இருக்காரு. கூடிய சீக்கிரம் அவர்,



உன் வீட்டுக்கு வந்து நேரில் பார்க்கப் போறதாவும்... அவர் வருவாரான்னு நீயும் காத்துக்கிட்டிருக்கிறதாகவும் எங்களுக்கு தகவல் வந்திருக்கு. அப்படி வந்துட்டா உனக்கும் நான் கட்டுப்பட்டவன்தான்!

இல்லேன்னா 'ஸ்டேஷன்'ல வந்து இப்படி ஆவேசமா பேச விடுவேனா? ஒரு பொய் 'கேஸ்' போட்டு உள்ள தள்ளிட மாட்டேன்?"

சப்-இன்ஸ்பெக்டர் சொன்னது அய்யனாரை ஒரு விநாடி திக்குமுக்காட விட்டது.

மந்திரி வந்து பார்க்கப் போகிறார் என்பது அவனே எதிர்பார்த்திராதது.

பலமான திடுக்கிடலோடு அவரைப் பார்த்தான்.

"அப்படின்னு உங்களுக்கு யார் சொன்னது?"

"யார் சொன்னா என்ன? அது நடக்கத்தான் போகுது. அப்ப அந்த மந்திரிகிட்ட சொல்லி நியாயம், நேர்மை, தர்மம், சத்தியம்... இவைகளை எல்லாம் காப்பாத்தச் சொல்லணும் நீ!

குறிப்பா நாங்க பரிபூரண சுதந்திரத்தோடு... யாருடைய குறுக்கீடும் இல்லாம செயல்பட இடம் கிடைச்சா போதும். அடுத்த பத்தாவது நிமிஷம் இந்த 'ஸ்டேஷன் செல்'லுக்குள் அந்த முத்துலிங்கம் கோஷ்டி மட்டுமல்ல... ஊருக்குள்ள இருக்கற ஒரு 'கேப்மாரி'கூட வெளிய இருக்க மாட்டாங்க. இங்கதான் இருப்பாங்க. யாருக்கும் இடுப்புக்கு கீழே சக்தியே இருக்காது. சப்பையை கழட்டிடுவேன்."

சரவணசிவத்திடம் ஆழமான கோபம் 'பளிச்'சென்று வெளிப்பட்டது.

அய்யனாருக்கும் அதற்கு மேல் அவரிடம் பேச மனம் இல்லை. திரும்பத் தொடங்கினான்.

"ஒரு நிமிஷம்" – அவர்தான் அழைத்தார். திரும்பினான்.

"ஏதோ பயங்கரமான 'வித்தை'யெல்லாம் உனக்குத் தெரியுமாம். நீ உத்துப் பார்த்தாவே காகிதம்கூட பத்திக்கும்கற மாதிரி அந்த ரவுடிப் பசங்க சொன்னாங்க. என்னால நம்ப முடியல! ஒருவேளை இதெல்லாம் நமக்குத் தெரியாம இருக்கலாம்னு நினைச்சிக்கிட்டேன்.

அவ்வளவு 'வித்தை' தெரிஞ்சவன் நேரா அவங்ககிட்ட போய் ரெண்டுல ஒண்ணு பாக்காம இங்க எதுக்கு புகார் கொடுக்க வந்தே?"

அவர் நியாயமான கேள்வியைத்தான் கேட்டார்.

அவனுக்கும் திணறியது!

'கற்பனையில்கூட இப்படியெல்லாம் நடப்பதற்கு இடமில்லை!' என்று பல நேரங்களில் பேசுவோம். அய்யனாரும் பேசி இருக்கிறான். அதுதான் முதலில் அவன் நினைவுக்கு வந்தது. 'அதை எப்படி இவரிடம் வார்த்தைகளால் விவரிக்க முடியும். மீறி விவரித்தாலும் நம்புவாரா?'

யோசித்தவன் சிரித்தான்!

உலகில் சிரிப்பைப் போல பலபொருள் கொண்ட உணர்ச்சி வெளிப்பாடு வேறு எதுவும் இருக்க வாய்ப்பு இல்லை. சரவணசிவமும் அந்தச் சிரிப்புக்குள் ஏதோ ஆழ்ந்த அர்த்தம் இருப்பதாக நினைத்துக்கொண்டார். அவனும்... 'அந்தச் சிரிப்புக்கு பொருள் என்ன?' என்று அவர் கேட்டுவிடுவதற்கு முன் இந்த இடத்தைவிட்டு நகர்ந்துவிட வேண்டும்' என்று நினைத்தவனாகக் கிளம்பினான்.

சைக்கிளில் அவன் ஏறிச் செல்வது வரை பார்த்துக்கொண்டிருந்த ஏட்டிடம் முணுமுணுப்பு.

"சித்து வேலை தெரிஞ்ச ஆளுங்கன்னாலே கொஞ்சம் 'பித்துக் குளி'ங்களாத்தான் இருப்பாங்க போல..." என்றபடியே கன்னத்திலும் போட்டுக்கொண்டார். அவரது கருத்து,

சரவணசிவத்தை உரசியது.

"என்னய்யா சொல்றே?"

"அது வந்துங்க சார்... தம்பி சிரிச்சதுக்கு பின்னால பல அர்த்தம் இருக்குதுங்க. அதெல்லாம் நமக்குப் புரியாதுங்க! இப்படித்தாங்க சிங்கம்பட்டியில ஒரு சாமியார் பிச்சை எடுத்து சாப்பிடுவார். அதுவும் 'எச்சிச் சோறு' போட்டாதாங்க சாப்பிடுவார். உக்காத்தி வெச்சு விருந்தே போட்டாலும் புறங்கையால தள்ளிடுவார். 'ஏங்க அப்படி?'ன்னா சிரிப்பாரு!

அவருக்கு 'எச்சிச் சோறு' போட்டவங்க எல்லாம் இப்ப லட்சாதிபதியா... குபேரனா இருக்காங்க. தம்பி சிரிச்சப்போ எனக்கு அந்த ஞாபகம்தாங்க வந்துச்சு!"

"நீ என்ன சொல்றே? அவன் என்னை ஆழம் பார்த்திருக்கான்னு நான் நினைக்கிறேன். நீ புதுசா ஒரு சாமியாரைப் பத்தி சொல்லி 'எச்சிச் சோறு,' விருந்துன்னு குழப்புறியேய்யா?"

"அப்படி இல்ல சார்! அதே நேரம் ஒரு விஷயம். இனி தம்பியை 'அவன் இவன்'னுல்லாம் மரியாதை இல்லாம கூப்பிடாதீங்க. நான் இப்ப சொல்றேன்... நல்லா கேட்டுக்குங்க. இனி இந்த ஊர் எப்படி மாறப் போகுதுன்னு பாருங்க. நம்ம 'ஸ்டேஷன்'ல தம்பியோட காலடி பட்டுருச்சில்ல! பாருங்க... உங்களுக்கு இன்ஸ்பெக்டர் 'பிரமோஷன் ஆர்டர்' இன்னிக்கே வந்தாலும் வந்துடும்!"

ஏட்டு சொல்லும்போதே தொலைபேசி அலறியது. சரவணசிவமும் எடுத்து காதைக் கொடுத்தார்.

காதில் என்ன விழுந்ததோ... முகத்தில் பலத்த மாறுதல் 'ரிசீவரை' வைத்துவிட்டு, "யோவ்... உன் வாய்க்கு சக்கரைதான்ய்யா போடணும்" என்றார்.

"என்னங்க விஷயம்?"

"எனக்கு 'பிரமோஷன் ஆர்டர்' இப்ப 'ரெடி'யா இருக்காம். 'எஸ்.பி. ஆபீஸ்'ல இருந்து 'போன்'!"

ஏட்டு அதைக் கேட்டு கும்பிடு போட்டபடி, "அய்யனாரப்பா..." என்றார் சிலிர்த்துப் போய்!

வசூலுக்காக பழையபடி நகைக் கடைகளுக்குப் போனபோது அய்யனாரைப் பார்த்து முதலாளிகள் பெரிதாக கும்பிட்டார்கள்.

'அப்படி கொஞ்சம் நேரம் உக்காரு' என்று அலட்சியமாய் சொன்னவர்கள் எல்லாம் முதல் காரியமாய் பணத்தை எடுத்து நீட்டினார்கள்.

"சாமி... இன்னும் நீங்க இந்த வேலையைப் பார்க்கத்தான் வேணுமா?" என்றும் கேட்டார்கள். பதில் சொல்லாமல் பணத்தை வாங்கிக்கொண்டு கிளம்பினான் அய்யனார்.

சிலர், "தம்பி எங்க ஞாபகமாக இதை வெச்சுங்குங்க..." என்றபடி மோதிரம், வெள்ளித் தம்ளர் போன்றவற்றை நீட்டினார்கள்.

மறுத்தபோது கையில் திணித்தார்கள்.

அவனுக்கு கர்வமாகக்கூட இருந்தது. மறுபக்கம், 'இது எதில் போய் முடியுமோ தெரியவில்லையே?' என்று சற்று கவலையாகவும் இருந்தது.

திரும்பும் வழியில் ஓரிடத்தில் ஒரே கூட்டம்!

'என்னாச்சு?' என பார்த்தபோது 'பகீர்' என்றது.

'போர்வெல்' போடுவதற்காக தோண்டிய ஐம்பது அடி ஆழக் குழியில் சின்னக்குழந்தை ஒன்று விழுந்து அலறிக் கொண்டிருந்தது.

மேலே இருந்து பார்த்த போது தலை மட்டும் தெரிந்தது. எல்லோரும் அய்யனாரைப் பார்க்க... அதில் சிலருக்கு அவன் பிரதாபம் தெரிந்தது!

"தம்பி... நீங்கதான் காப்பாத்தணும். போலீஸ்ல இருந்து எல்லாருக்கும் தகவல் கொடுத்திருக்கோம். யாரையும் காணோம்! உள்ளே 'ஆக்சிஜன்' கம்மிங்கறதால குழந்தைக்கு மூச்சுத் திணறல் வேற..."

குழந்தையின் தந்தை கையைக் கட்டிக்கொண்டு அழுதார்.

அய்யனாரும் எட்டிப் பார்த்தான்.

'நீ நல்லா மாட்டிகிட்டேடா!' என்று ஒரு குரல் அவனுக்குள் அவனை வார... சட்டென்று சாமியாரைத்தான் நினைத்தான்.

'சாமி... என்னை நல்லா மாட்டி விட்டுட்டீங்களே! சாமி, நான் இப்ப என்ன பண்ண?' என்று தனக்குத் தானே பேசிக்கொண்டான்.

திடீரென்று காதுக்குள் மெல்லிய குரல். 'கவலைப்படாம பக்கவாட்டுல ஒரு குழியைத் தோண்டு! அப்பப்ப காற்றை உள்ளே இழுத்து குழிக்குள் ஊத்திக்கிட்டே இரு.

கண்ட மூலதாரணையில மனசை நிறுத்து. சுத்தி இருக்கற எல்லா விஷயங்கள்ல இருந்தும் உன் கவனம் கலையட்டும்.

கண்ட மூலதாரணையில மனசுக்கு வஞ்ச நிலையில, பஞ்ச வாயுக்களையும் உள்ளிழுத்து உன்னால இப்ப உமிழ முடியும். அதுல 'ஆக்சிஜன்'ங்கற உயிர் ஆதாரமான வாயுவை இப்ப உன்னால அதிகம் உமிழ முடியும். அதே நேரம் பிராணபலம் கொண்ட 'கார்பன்டை ஆக்ஸைடை'... அதாவது, அபான வாயுவை உனக்குள்ள 'சூட்சும' நாடியில நிரப்பு. அதனால உன் கைகளுக்கு பலம் அதிகரிக்கும். அது வேகமா குழியைத் தோண்ட உதவி செய்யும்!'

அய்யனார் தனக்குள் ஒலித்த குரலைத் தொடர்ந்து உடனே செயலில் இறங்கத் தொடங்கினான். அருகில் பெரிய இரும்புக் குழாய் இருந்தது. அதன் உட்பாகத்தில் தலையை நுழைக்கலாம். அவ்வளவு பெரிய துவாரம் காணப்பட்டது. அந்தக் குழாயை கையில் எடுத்தவன், 'போர்வெல்' குழிக்கு பத்தடி தூரத்தில் அதைக் கொண்டு பூமியைக் குடைய ஆரம்பித்தான்.

இரு கைகளால் குழாயைப் பிடித்துக்கொண்டு தரையில் அதை அமுக்கினான். கூரான கடப்பாரை முனைகளையே நெம்பியும், ஆட்டியும்தான் பள்ளம் தோண்ட முடியும். ஆனால், குழாயோ அவனது பலத்தின் முன்னால் அதற்கு அவசியமே இல்லாதபடி

அப்படி பூமியில் இறங்கியது.

கூட்டமே கண்களை காது வரை விரித்த வைத்துக்கொண்டு அந்தக் காட்சியைப் பார்த்தது. அய்யனார் உடல், குளித்த மாதிரி வியர்த்துவிட்டது. ஒரு கட்டத்தில் சட்டையைக் கழற்றி எறிந்தவன்... அப்படியே படுத்து குழிக்குள் தண்ணீரை உமிழ்வது போல காற்றை ஊதினான்.

ஒரு சுழல் காற்று சுழலும் இடத்தில் குப்பைகள் பறப்பது போல அங்கே புழுதி கிளம்பினாலும்... அவனது வாயில் இருந்து வெளியேறிய காற்று, கீழே குழியில் இருக்கும் குழந்தை வரை போய் அதற்கு ஏற்பட்ட மூச்சுத் திணறலை முதலில் போக்கிற்று. துவண்டு போய் அழக்கூட இயலாத நிலையில் இருந்த குழந்தை அண்ணாந்து பார்த்தது.

திரும்பி வந்தவன் திரும்பவும் குழாயை அமுக்கி–அசைத்துவிட்டு, சுற்றி இருப்பவர்களில் சிலரைப் பார்த்தான். அவர்கள் புரிந்தது போல அந்தக் குழியில் நெகிழ்ந்து போன மண்ணை 'மளமள'வென வாரத் தொடங்கினர்.

பல வீடுகளில் இருந்து 'அண்டா குண்டா'க்கள் எல்லாம் படை எடுத்து வந்து அவை எல்லாமும் மண்ணை வாரிக்கொண்டு விலகிச் சென்றன.

'ராணி சிண்டிகேட் பிரைவேட் லிமிடெட்' சார்பில் வெளியிட்டவர்
ஆசிரியர்: ச.ரகுசுதாகர், 86. பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.
தொலைபேசி: 25324771 Fax: 044–26426884
CIN:U22210TN2013PTC092

அச்சிட்டவர்: லூ.சிரில் சகாயராஜ், வி.எஸ்.பிரிண்டோகிராப் பிரைவேட் லிட்.,
15, நடேசன் காலனி, ஸ்ரீராம் அவென்யூ முதல் தெரு,
கொட்டிவாக்கம், சென்னை–600 041.

E-MAIL
editor@raniweekly.in
admin@raniweekly.in

'ஒரு நிமிடத்தில் ஓர் அடி' என்று குழி ஆழமாகிக்கொண்டே போயிற்று. புத்திசாலித்தனமாக அதை அப்படியே வளைத்து வளைகுழியாக்கிக்கொண்டே போனான் அய்யனார்.

'ராட்சஸன்' ஒருவன் குழி தோண்டினால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது.

பார்ப்பவர்களிடம் மிரட்சி! ஒரு கட்டத்தில் வேடிக்கைப் பார்ப்பவர்கள் என்றே ஒருவர்கூட இல்லாமல் எல்லோரும் ஆளுக்கொரு கைகொடுக்க... குழியும், குழந்தை இருக்கும் இடத்தை சமீபித்தது. இரண்டு பேர் இறங்கலாம் என்னும் அளவுக்கு ஒரு மீட்டர் விட்டத்தில் தேர்ந்த 'என்ஜினீயர்' பல நாட்கள் முயன்று தோண்டியது போல உருவாகிவிட்ட குழிக்குள், பொறுமையை இழந்த குழந்தையின் அப்பாவே இறங்கினார். அதன் அடிப் பாகத்தில் படுத்தபடியே குழந்தையை நோக்கி கையை நீட்டினார்.

அந்தப் பெண் குழந்தையின் கொத்தான தலைப் பாகம் கையில் உரச... முடிக்கற்றைகளை ஆவேசத்துடன் ஒன்றாகத் திரட்டி அப்படியே குழந்தையை மேலே தூக்கினார்.

குழந்தை மயங்கிவிட்டிருந்தது! காற்றும் தாராளமாகிவிட்டதால் 'மூச்சு'திணறல் சுத்தமாக இல்லை.

எல்லோரும் கைதட்டினார்கள். சுமார் பத்துப் பேர்... குளித்தது போல வியர்வையில் இருந்த அய்யனாரை அப்படியே தோளுக்கு தூக்கி ஆரவாரம் செய்தார்கள். குழந்தை மேலே வந்த நொடி அய்யனார்அதை வாங்கி மடியில் போட்டுக்கொண்டு காதுக்குள் ஒலிக்கும் குரலுக்கு ஏற்ப இடது மூக்கு துவாரத்தால் மூச்சை உள்ளிழுத்து மெல்ல வாய் வழியாக அதன் முகத்தில் ஊதி அதற்கு 'பிராண' சக்தியை ஏற்றிக்கொண்டே போனான்.

கூட்டம் அபூர்வக் காட்சியை பார்க்கிற மாதிரி பார்த்தது. குழந்தையும் மூன்றாவது நிமிடமே கண்களைத் திறந்து விழித்தது.

அப்பாக்காரர் "தம்பி" என்று... அமர்ந்திருந்த அய்யனாரைக்

கழுத்தோடு சேர்த்துக் கட்டிக்கொண்டார். நடுவில் "உய்ங்... உய்ங்" என்னும் 'சைரன்' சப்தம்!

தீயணைப்புப் படை வீரர்களின் லாரியும், போலீஸ் ஜீப்பும் அங்கே பிரவேசித்திருந்தன. 'திபுதிபு'வென அவர்களும் குதித்து ஓடி வந்து சுற்றி நின்றுகொண்டனர்.

வந்தவர்களில் 'கமாண்டிங் ஆபீசர்' பொறுப்பில் இருந்தவர், குழியைப் பார்த்து பிரமித்துப் போயிருந்தார்.

"ஒற்றை ஆளா குழியைத் தோண்டி குழந்தையைக் காப்பாத்திட்டாரு இந்தத் தம்பி. நாங்கல்லாம் ஒத்தாசை பண்ணினோம். 'ரியலி'... இது ஒரு 'மிராகிள்'!" என்று ஒருவர் விளக்கினார்.

"இப்படியொரு குழியை இவர் ஒருத்தரே தோண்டினரா?"

"ஆமா! அதுவும் அதோ கிடக்குது பாருங்க அந்த குழாயால!!"

குழாயைப் பார்த்த அதிகாரி அதை நெருங்கிச் சென்று பார்த்து வியப்பை நெற்றியில் தேக்கினார்.

"'நோ... இட்ஸ் இம்பாசிபிள்!' நம்பற மாதிரி சொல்லுங்க" என்றார்.

"அதான் சொல்றோமே... 'இட் இஸ் எ மிராகிள்'! நாங்க கையைப் பிசைஞ்சிக்கிட்டு நின்னப்போ... தம்பி காட்டின வேகம் அசாத்தியம். அவர் சாமான்ய மனுஷன் இல்ல. அவருக்குள்ள யானை பலம் இருக்கு. புத்தியிலேயும் அவர் ஒரு சூரியன். அப்பப்போ காத்தை ஊதி, 'ஆக்சிஜனும்'கூட 'சப்ளை' செஞ்சாரு."

"எப்படி... எப்படி? பத்து பேர் இடைவிடாம ஒரு 'பொக்லைன்' வச்சு போராடினாலே கிட்டத்தட்ட ஐம்பதடி ஆழமுள்ள இந்தக் குழியைத் தோண்ட பல மணி நேரம் ஆகும். ஆனா, ஒரு மணி நேரத்துல தோண்டி இருக்கீங்க. இதை நம்ப முடியல..."

"ஆனா நம்பித்தான் சார் ஆகணும். நிற்கிற எல்லார்கிட்டேயும் கேட்டுப் பாருங்க."

அவர்கள் சொல்ல... 'ஆபீசர்' மறுபடி நெற்றியைத் தேய்த்துக்கொண்டார். அய்யனார் எழுந்து கையை உதறிக்கொண்டு, கழற்றிப் போட்டிருந்த சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டிருந்தான்.

'ஆபீசர்' அவனை நெருங்கி குலுக்குவதற்காக கையை நீட்டினார். அவனோ களைப்போடு சிரித்தான்.

'பளிச்... பளிச்'சென்று 'ஃப்ளாஷ்'கள் வேறு!

பத்திரிகைகாரர்களும், லோக்கல் 'டிவி சேனல் கேமரா'க்காரர்களும் முண்டியடித்தனர். ஒரு 'டிவி' செய்தியாளர் அய்யனார் முன் 'மைக்'கை நீட்டினார்.

"சார் இது மனுஷசக்தியா... இல்லை, வேற எதாவதா?"

–கேள்வி கேட்டார்.

"மனுஷங்ககிட்ட இருந்து வெளிப்படுற சக்தி... மனுஷ சக்தி இல்லாம வேற என்ன?"

"இல்ல! உங்ககிட்ட 'அபூர்வ சக்தி' இருக்கறதா கேள்விப்பட்டோம். இது அதோட வேலையா?"

"என்கிட்ட 'அபூர்வ சக்தி'யும் இல்ல. உங்ககிட்ட இருக்கற, இவர் கிட்ட இருக்கற, அதோ அவர்கிட்ட இருக்கற சக்திதான் என்கிட்டேயும் இருக்கு."

"எப்படி... எப்படின்னு விளக்கமா சொல்ல முடியுமா?"

அந்தக் கேள்விக்கு பதில்... அவன் காதில் ஒலித்தது.

'போக வாழ்க்கையைவிட்டு யோக வாழ்க்கைக்கு எல்லாரும் திரும்புனா இது ரொம்ப 'அல்பம்'னு சொல்லு!'

அய்யனாரும் அப்படியே சொன்னான்.

"யோக வாழ்க்கைன்னா என்ன... விளக்கமா சொல்ல முடியுமா?"

அதற்கும் பதில் காதில் ஒலித்தது.

'ஒரு மனுஷன் தன் சக்தி எவ்வளவுன்னு தெரிஞ்சிக்கிறதே

இல்லை. தெரிஞ்சிக்கணும்ன்னா மனசு கட்டுப்படணும். உடம்பு புரியணும்னு சொல்லு!'

அவனும் அதையே திருப்பிச் சொன்னான்.

"நீங்க என்ன சொல்றீங்க? எல்லாரும் 'யோகாசனம்' கத்துக்கணுங்கிறீங்களா? 'யோகாசனம்' பண்ணினா மனுஷனுக்கு அபார பலம் வந்துடுமா?"

"'யோகாசனம்' பண்ணினா முதல்ல உடம்பு கட்டுப்படும். அப்புறம் வலுப்படும். அதற்குப் பிறகு 'சூட்சுமங்கள்' புரியும். பெரிய பாறையை ரெண்டு கடப்பாறையால 'நெம்பு கோல்' தத்துவப்படி அசைக்கற மாதிரி பல 'சூட்சமங்கள்' அதனால தெரியவரும்!"

"இல்லையே! எவ்வளவோ 'யோகாசனம்' பண்றவங்க சராசரி மனித சக்தியோடதானே இருக்காங்க? அவங்க அதிகம் நோய்களால தாக்கப்படுறதில்லேங்கறது மட்டும்தான் நிரூபணமாகி இருக்கு. ஆனா, யானை பலமெல்லாம் அவங்களுக்கு இருக்கறதா தெரியலையே?"

"இங்கே யானை பலம்னு நீங்க சொல்றது ஒண்ணும் நிஜமான யானை பலம் இல்ல. ஒரு குழியைத் தோண்டினதை இப்படி உலக மகா அதிசயமா பார்க்கவும் தேவையில்லை. களைப்பே இல்லாம இடைவிடாம வேலை செய்து முடிச்சதால அப்படி தெரியுது. அதுக்காக ஒரு மலையைத் தூக்க முடியுமான்னு குதர்க்கமா கேட்கக்கூடாது!

அதே நேரம் யோகத்தால மலையைத் தூக்கவும் முடியும். அதுக்குத் தகுந்த மாதிரி உடம்பு பெருசாகணும். அதாவது, 'விஸ்வரூபம்' எடுக்கணும். 'விஸ்வரூபம்' எடுக்க பஞ்ச பூதங்களோட உதவி அவசியம். பஞ்ச பூதங்களை நாம கட்டுப்படுத்தி ஆளக் கத்துக்கிட்டா அது சாத்தியம். இதைத்தான் ராமாயணத்துல அனுமன் செய்தான். 'சஞ்சீவி மலையை'யும் சாதாரணமா தூக்கிட்டுப் பறந்தான்.

மகாபாரதத்துல கண்ணன்... கோவர்த்தன கிரியைச் சுண்டு விரலால் தூக்கி, ஆடு–மாடுகளை மழையில் நனையாம காப்பாத்தினதும் இந்த அடிப்படையிலதான்!

அதை 'மாயாஜாலம்'னும், 'தெய்வ சக்தி'ன்னும் நம்ம புத்தி சொல்றதெல்லாம் ஒருவித அவசரம்! அப்படிப் பார்த்தா உள்ளங்கையில அடங்கற அணுகுண்டு, ஒரு நாட்டையே அழிக்கறதும் 'மாயாஜாலம்'தான்!

ஒரு புள்ளி அளவுள்ள சின்ன விதையில 'ராட்சத' மரம் ஒளிஞ்சிருக்கறதும் அதே 'மாயாஜாலம்தானே?"

அய்யனார் ஒரு மேடைப் பேச்சாளன் போல சொல்லிக்கொண்டே போனான். கூட்டம் ஆர்ப்பரித்தது!

'ஆபீசர்' விக்கித்துப் போயிருந்தார்!

சிலர் அவன் காலில் விழுந்து கும்பிட்டனர். பெண்கள் ஓடி வந்து ஆரத்தி எடுத்தனர்.

சப்–இன்ஸ்பெக்டர் சரவணசிவமும் வந்திருந்தார். தூர நின்ற நிலையில் அவனது விளக்கங்களையும் கேட்டிருந்தார்.

இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தார். 'இவன் சொல்வதில் உண்மை இருக்கிறது. ஆனால், அதைப் புரிந்துகொள்ளும் சக்திதான் பலருக்கு இல்லை. உலகில் விளங்காத புதிர்கள் எவ்வளவோ! இவனோ அவைகளை விளங்கிக்கொண்டவன்.

விளங்காத வரை ஒன்றை பொய், 'மாய்மாலம்', 'அசாத்தியம்', கற்பனை என்று சொல்வதுதான் மனித இயல்பு!

விளங்கிவிட்டாலோ அதை சர்வசாதாரணமாக கையாள்வதும் அதே மனித இயல்புதான்! முதன்முதலில் நீராவி 'ரெயில் என்ஜின்', பெட்டிகளுடன் ஊருக்குள் பிரவேசித்தபோது அதைப் பார்த்து இரும்பு 'ராட்சஸன்' என்று சொன்னவர்கள்தானே இவர்கள்? அதே ரெயிலில் இன்று கண்டதைக் கிறுக்கியும், வெடிகுண்டு வைத்தும் சர்வசாதாரணமாக நினைப்பவர்களும் இவர்கள்தானே!

ஒரு சக்தியானது மெய்ஞானத்தில் இருக்கும் வரைதான் மதிப்போடு பார்க்கப்படுகிறது. விஞ்ஞானத்துக்குள் வந்து விளங்கிவிட்டாலோ அல்பமாகிவிடுகிறது. குளியலறையில் வைத்து 'செல்போனில்' பேசுவதெல்லாம் பிறகு எதோடு சேர்த்தியாம்?

அய்யனார்... நீ விளங்காத அந்த உயரத்திலேயே இரு. எதையும் விளக்கிவிடாதே! விளக்கினாலும் இந்த முட்டாள் கூட்டத்துக்குப் புரியாது. எனக்கும் புரியவில்லைதான்! புரியவும் வேண்டாம். புரிந்தால் அல்பமாகிவிடும்!'

தனக்குள் தீர்மானங்களுக்குள் வந்தவர், கூட்டத்தை பிளந்துகொண்டு அய்யனாரை நெருங்கினார்.

கேள்விகளால் அடுக்கி அவனைக் குடைந்துகொண்டிருந்த பத்திரிகையாளர்களையும், 'டிவி'க்காரர்களையும் விலகச் சொன்னார்.

"தம்பி களைப்பா இருக்காரு. மிச்ச கேள்விகளை அப்புறமா வெச்சிக்கலாம். போங்க... போங்க..." என்று தள்ளினார்.

"நீங்க வாங்க தம்பி" அவனை இழுத்துக்கொண்டு 'ஜீப்'பை நோக்கி நடந்தார்.

அந்தக் கூட்டத்தில் ஒரு மூலையில் கணேசனும் இருந்தான். அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர். சாமியார் சொன்னது அவனது காதுகளில் 'ரீங்காரமிட்டுக்' கொண்டிருந்தது.

'நீதான் இனிமே குரு. போ... எல்லாம் தன்னால புரியும். சகல வழியும் தானாகத் தெரியும். போ... போ...'

அவர் துரத்தியது இதற்குத்தானா? இந்த அங்கீகாரத்துக்குத்தானா?

அவனுக்கு ஏக்கமாகக்கூட இருந்தது!

'சாமி... அவனை உங்களுக்கு காட்டியவன் நான். ஆனா, என்னை விட்டுட்டீங்களே! என் மேல மட்டும் என்ன கோபம்?'

மனதுக்குள் உருகி அழுதான். 'சாமியாரிடமே போய் இதைக்

கேள்வியாகக் கேட்டால் என்ன?' என்றுகூட தோன்றியது.

கிளம்பிவிட்டான்!

## 8

ஒவ்வொரு உயிருமே பஞ்சபூதக் கலவைதான்! செடி-கொடிகளில் இருந்து புழு-பூச்சி முதல் ஆண்-பெண்ணாய் அருகிப் பெருகி இருக்கும் மனிதர்கள் வரை சகலமுமே பஞ்சபூதக் கலவைகளாலும், அந்தப் பூதங்களின் ஒத்துழைப்பாலும் ஜீவிக்கிறவையே!

இந்தப் பூதங்களில் ஒளியும், காற்றுமே முதல் பிரதானம். இவை இரண்டின் ஊடகமான வெளி... அடுத்ததாகவும், பூமியும், நீரும் இந்த ஊடகத்தில் கண்ணுக்குப் புலப்படும் அம்சங்களாகவும் உள்ளன.

பஞ்சபூதக் கலவையால் உண்டான உயிரிகளில் மனிதனே மனம் என்னும் அதிசயமான ஒன்றால் சிந்திக்கும் ஆற்றல் மிக்கவன். இந்த ஆற்றலால் இவன், தான் யார் என்பதை அறிவதோடு... தன்னை இயக்கும் இயற்கையையும் புரிந்து, அதையே ஒரு கட்டத்தில் ஆட்சி செய்யவும் முயற்சிக்கிறான்.

ஒரு வகைப்படி பார்த்தால், பஞ்சபூதங்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்துகொள்ளுதல் என்றும் அதைக் குறிப்பிடலாம். அப்படி ஆட்சி செய்ய முதல் தேவை 'அறிதல்'. இந்த அறிதல் அவ்வளவு சுலபத்தில் வராது. எவர் ஒருவர் பஞ்ச பூதங்களை நேராகவோ அல்லது மறைமுகமாகவோ புரிந்து ஆராதிக்கிறார்களோ அவர்களுக்கே இது நேரும்.

இந்த ஆராதிப்பால் விளைவதுதான் புண்ணிய கர்மம். அந்த புண்ணிய கர்மமே அறிதலாகி, பின்னர் ஞானமாகி அனைத்தையும் புரிய வைக்கும். எனவே, ஞானம் சார்ந்த கல்வியை அடைய விரும்புகிறவர்கள் அதற்கு எதிரான சிந்தனைகளில் இருந்து

முதலில் விடுபட வேண்டும்.

அல்லாதவரை அற்ப அறிவாற்றலோடு மனித சக்தியைக்கூட ஓர் எல்லைக்குள் அடக்கிப் பார்த்து கர்வம், இறுமாப்பு... இவற்றால் மிகச் சுருங்கிப் போய்விடும் மனித வாழ்க்கை.

இன்றைய உலகில் இப்படிச் சுருங்கிய மனித வாழ்க்கை நடத்துபவர்களே அனேகர். விரிந்த இயற்கையையே ஆட்டுவிக்கிற ஆற்றல் உடையோர் மிகச் சிலரே! அவர்களையும்கூட சுருங்கிய மனித வாழ்வின் ஆசாபாசங்கள் பல தருணங்களில் அழித்துவிடுகின்றன!

**சா**மியார் மூட்டை கட்டிக்கொண்டிருந்தார்.

கணேசன் வந்து நிற்கவும் புன்னகைத்தார்.

"என்ன சாமி... கிளம்பிட்டீங்களா?"

"ஆமாம்ப்பா! உனக்கு இதுதான் ஊர். ஆனா, ஆண்டிக்கு உலகமெல்லாம் ஊராச்சே?"

"எங்க சாமி போறீங்க?"

"எனக்கென்னப்பா... கால் போன இடம். மனுஷங்க மதிச்சு கூப்பிடுற இடமெல்லாம் போய்கிட்டே இருக்க வேண்டியதுதானே?"

"நீங்க எங்க வேணா போங்க சாமி! ஆனா, எனக்கு ஒரு பதிலைச் சொல்லிட்டுப் போங்க."

"என்னப்பா?"

"நீங்க சொன்ன மாதிரி இப்ப இந்த ஊருக்கே குருவாகிட்டு வர்றான் என் நண்பன் அய்யனார். தொலைச்ச பணமும் திரும்பக் கிடைச்சிடுச்சு! அப்படி அவன் வரையில எல்லாமே மாறிடிச்சு. மதிப்பு–மரியாதை தேடி வருது. மந்திரிகூட வந்து பார்க்கப் போறாருன்னு எல்லாம் காதுல விழுது. சந்தோஷமா இருக்கு."

நான் என்ன பாவம் பண்ணேன் சாமி? என்னை இப்படியொரு குருவா... ஊர் மதிக்கிறவனா நீங்க ஏன் ஆக்கல?"

அவனுடைய குரலில் கோபமும், துக்கமும் கலந்து கிடந்தது.

"அதுவா... அவனைப் பார்த்து உனக்கும் பொறாமை வந்துடுச்சா?"

"தப்பு சாமி! இது பொறாமை இல்ல. அய்யனார் இப்படி ஆனதுல எனக்கு ரொம்ப மகிழ்ச்சிதான்! நான் ஏன் அப்படி ஆகலைன்னுதான் கேட்கிறேன்."

"எப்படி?"

"என்ன சாமி கேள்வி இது? அவன் இப்ப நீங்க செய்யற சாகசங்களையெல்லாம் செய்யறான். ஊரே கையெடுத்து கும்பிடுது."

"நீயும் சாகசமெல்லாம் பண்ணணுமா?"

"அதுக்கு ஆசைப்படுறது தப்பா சாமி."

"வீட்டுக்கு ஒரு விளக்குமாறு போதும்னு நினைச்சேன். நீயும் விளக்குமாறாக ஆசைப்படணுமா?"

"என்ன சாமி சொல்றீங்க?"

"என்னையே அவனோட 'சிஷ்யன்'னு நான் சொன்னதைக் கவனிச்சேதானே?"

"ஆமா!"

"அதுல ஒண்ணு உனக்குப் புரியலையா?"

"அது உங்க தன்னடக்கம் சாமி!"

"புடலங்கா! எல்லாத்துக்கும் 'கர்மம்' இடம் கொடுக்கணும்ப்பா."

"சாமி என்ன சொல்றீங்க?"

"இப்ப சொன்னா உனக்குப் புரியாது. இருந்தாலும் சொல்றேன். இந்த உலகத்துல எல்லா பெண்களும், ஆண்களும் நிர்வாணமாகவே இருந்தா காதல், காமம்... இதுக்கெல்லாம் இடம் இருக்குமா?"

"நான் ஒண்ணு கேட்டா நீங்க ஒண்ணு சொல்றீங்களே?"

"கேட்டதுக்கு பதில் சொல்லு! மூடி இருக்கற வரைதானே ஒரு விஷயத்தை பார்க்கத் துடிப்போம்?"

"ஆமா! எல்லாரும் நிர்வாணமா இருந்தா 'கவர்ச்சி' ஏது... 'ஆசாபாசம்' ஏது?"

"அப்ப அங்க 'ஆசாபாசங்'கள் செத்து... மனுஷனும் மிருகங்கள் போல பசிக்கு உணவு சாப்பிடுற விலங்காதானே இருப்பான்?"

"நிச்சயமா!"

"சில 'யோக' ரகசியங்களும் அப்படித்தான்! அதையெல்லாம் பயன்படுத்தற மனுஷன், பயன்படுத்தத் தெரியாத கூட்டத்துக்கு நடுவுல தெய்வமாகி உயரத்துக்குப் போயிடுவான். அதன் பிறகு அவன் இறங்க நினைச்சாலும் அந்த உயரத்துல இருந்து இறங்க முடியாது.

பெரிய பெரிய வெற்றிகளை அடைஞ்சவங்ககிட்ட போய் கேளு. அவங்க சொல்வாங்க, 'எந்த வெற்றியால நான் அறியப் பெற்றேனோ... அது என்னை தினம் விழுங்கிக்கிட்டிருக்கு. அதுக்கு மேல் ஒரு வெற்றியை அடைஞ்சாதான் எனக்குப் பேர்–புகழ்! அதுக்கு கீழ் ஓர் அங்குலம் குறைஞ்சாலும் என்னைப் பெரிய தோல்வியாளனா இந்த உலகம் நினைக்குது. அதை என்னால தாங்கிக்க முடியலைன்னு சொல்வாங்க!"

"சாமி... நீங்க சொல்றது புரியுற மாதிரியும் இருக்கு. புரியாத மாதிரியும் இருக்கு."

"அதான் ஆரம்பத்துலேயே சொன்னேனே... உனக்கு புரியாதுன்னு! நீ புரிஞ்ச மாதிரியும் இருக்குன்னு சொல்றதெல்லாமும் பொய்தான். உனக்கு இது இப்ப புரியாது! ஏன்னா... பல புரிதல்கள் வார்த்தையால் சொல்றதால இல்லப்பா."

"முடிவா என்ன சொல்றீங்க?"

"அவன் பாவம்... அப்படி ஆனான். நீ நல்லவன். உன்னைக் கெடுக்க நான் விரும்பல!"

"அதுவும் ஊரே போற்றுகிற அளவுக்கு சாகசம் செய்யறவனா... குருவா மாறினது பாவமா?

"அதான் 'விளக்குமாறு'ன்னு சொல்லிட்டேனே! குப்பையை கூட்டுற 'விளக்குமாறா' இருக்கறது உயர்ந்ததா? இல்லை... அதைக் கூட்டுறவனா இருக்கிறது உயர்ந்ததா?"

"இப்படிக் கேட்டா கூட்டுறவனா... விளக்குமாறைப் பயன்படுத்தறவனா இருக்கறதுதான் உயர்வு!"

"இதைத்தான் மனுஷ புத்திங்கறது! உண்மையில பெருசு–சிறிசு, உயர்வு–தாழ்வுன்னு எதுவுமே கிடையாது."

"போதும் சாமி. எனக்கு 'வெட்டு ஒண்ணு... துண்டு ரெண்டு'ன்னு பதில் சொல்லுங்க."

"சொல்றேன்... ஒரு வகையில நான்கூட 'சுயநலம்' உள்ளவன்தான்! அதனாலதான் உன் நண்பனையே குருவாக்கி, இந்த ஊரைக் கட்டுப்படுத்தினேன். ஏன்... அதை நேராவே செய்திருக்கலாம். இங்கேயே இருந்து இந்த ஊரை, பக்கத்து ஊரை, ஏன் இந்த உலகத்தையே ஆட்டிப் படைக்கலாமே?"

"ஆமாசாமி... நீங்க ஏன் அப்படி செய்யல?"

"நீதான் சொன்னியே... 'தன்னடக்கம்'ன்னு!"

"இல்ல... தப்பா சொல்லிட்டேன். ஏதோ காரணம் இருக்கு."

"அது உனக்குத் தெரியணும்னா உன் நண்பனை உற்றுக் கவனி."

"எதுக்கு?"

"கவனி... உனக்குப் புரியும்."

"அப்பவும் புரியலேன்னா?"

"அப்போ வா... வந்து கேளு. பதில் சொல்றேன். இப்ப நான் கிளம்பட்டுமா?"

"சாமி..."

"நிச்சயமா திரும்ப சந்திப்போம். அப்ப நீ இப்படி கேள்வி கேட்கமாட்டே! என்னைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர்தான் வடிப்பே!!"

அவர் பதிலோடு தனது சிறிய பெட்டியை மூடினார். அதையும்

எளிய 'விசுவாசி' வந்து தூக்கிக்கொண்டார்.

"நான் கிளம்பறேன். உன் நண்பனை 'ஜாக்கிரதை'யா பார்த்துக்கோ."

சாமியார் சாதாரணமாக சொல்கிற மாதிரியும் இருந்தது. கொஞ்சம் எச்சரிக்கிறது போலவும் தெரிந்தது!

மூன்று மாதம் கழிந்துவிட்டது.

அய்யனார் இப்போது சைக்கிளில் போவதில்லை...கார்தான்!

அவனும் நிறைய மாறிவிட்டான்.

காவி 'ஜிப்பா' – வேட்டி. கழுத்தில் தங்கச் சங்கிலி. விரல்களில் நவரத்தின மோதிரங்கள்.

'ராஜ குரு' என்கிற பட்டம் வேறு! எம்.எல்.ஏ., மந்திரிகள்கூட காத்திருந்து அவனைச் சந்திக்கிறார்கள்.

கணேசன் போனால் உடனே பார்க்க முடிவதில்லை!

அதனால் பல தடவை அவனைப் பார்க்காமலே திரும்பி இருக்கிறான்.

கொட்டம் அடித்த ரவுடிகள் எல்லாம் முன் போல 'தண்டல்' வசூல், திருட்டு முதலியனவைகளில் ஈடுபடுவதில்லை. அய்யனாரின் ஆசிரமத்துக்கு அவர்கள் காவலர்களாகிவிட்டனர். 'தாதா' முத்துலிங்கம்தான் அய்யனாரின் பிரதான சிஷ்யனே! அவன் இப்படி அடியோடு மாறுவான் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

அதை நல்ல 'மாற்றம்' என்று சிலரும், எல்லாம் 'வேஷம்' என பலரும் சொன்னார்கள்.

'எது உண்மை?' என்பது கடவுளுக்கே வெளிச்சம்!

கணேசன் இன்று அய்யனாரைப் பார்த்தே தீருவது என்கிற வெறியில் இருந்தான்.

முத்துலிங்கம் அவனை சுலபத்தில் உள்ளே விடுவதாக இல்லை.

"முத்துலிங்கம்... நான் வந்திருக்கேன்னு போய் அய்யனார்கிட்டே

சொல்லு. சொன்னா... என்னைக் காக்க வைக்க மாட்டான்."

"இது சன்னிதானம். இங்கு யாராக இருந்தாலும் வரிசைதான்! இனி அய்யனாருன்னு சாமியைப் பேரெல்லாம் சொல்லிக் கூப்பிடுற வேலை வேணாம். சாமி இப்ப ராஜ குரு."

"இதோ பாரு. அவன் 'ராஜ குரு' ஆனதே என்னாலதான்! போய் சொல்லு."

"இப்படிப் பேசினா இந்த ஆசிரமம் பக்கமே நீ வர முடியாமப் போயிடும்."

முத்துலிங்கம், 'நான் இன்னும் மாறாத அதே பழைய ரவுடி!' என்கிற மாதிரி பேசினான். கணேசனுக்குப் புரிந்துவிட்டது!

அதே நேரம்... பணக்கார பெண்மணி ஒருத்தி பட்டுச் சேலை சரசரக்க உள்ளே போனாள். போகும்போது பெட்டியோடு போனவள், திரும்பும்போது வெறும் கையோடு வந்தாள். கணேசன் உட்கார்ந்துகொண்டே இருந்தான்.

அய்யனாரின் சகோதரிகள் சுசீலா, சகுந்தலா, விமலா... மூவரும் ஒரு படகுக் காரில் வந்து இறங்கினார்கள். பட்டுப் புடவையில் தேவதைகளைப் போல இருந்தார்கள். கணேசனைக்கூட யாரோ மூன்றாம் மனிதனைப் பார்க்கிற மாதிரி பார்த்தார்கள்.

"அக்கா... என்னைத் தெரியல?" – அவர்களிடம் வாய்விட்டுக் கேட்டுக்கூடப் பார்த்தான்.

"கணேசன்தானே? ஏன் தெரியாம என்ன... 'குருஜி'யைப் பார்க்க வந்திருக்கியாக்கும்?" என்றபடியே அவனைக் கடந்து போனார்கள்.

கணேசனுக்கு இருதயத்தில் குத்தியது!

"கடவுளே... இதென்ன இப்படியொரு மாற்றம்? கிழிசல் உடைகளில் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள போராடியவர்களா இப்படி?"

விக்கித்து விதிர்த்து குமுறிப் போனான்.

கடைசி வரை முத்துலிங்கம் அவனை உள்ளே அழைக்கவே இல்லை.

நல்லவேளை... கன்னியம்மாள் கண்ணில்பட்டாள்.

அவள் சாதாரணமாகத்தான் இருந்தாள்.

கணேசனைப் பார்த்தவள் ஓடி வந்தாள்.

"கணேசா... நல்லா இருக்கியா?" என்று விசாரிக்கவும் செய்தாள்.

"அம்மா... என்னை விசாரிக்கணும்னு உங்களுக்காவது தோணிச்சே?"

"ஏம்ப்பா ஒரு மாதிரி பேசுறே? அய்யாவைப் பார்க்க முடியலையா?"

"விடவே மாட்டேங்கறாம்மா... அந்தத் தடியன்."

"நீயெல்லாம் எதுக்குப்பா இங்கே வர்றே? வா... போலாம்."

அவள் வேறு எங்கோ அழைத்தாள். அவனும் கிளம்பினான்.

"அம்மா... என்னம்மா இதெல்லாம்?"

நடந்தபடியே கேட்டான்.

"எல்லாம் உன்னால வந்த வினை! நல்லா இருந்தவனை 'ராஜ குரு' ஆக்கின புண்ணியவான் நீதானே?"

"இல்லம்மா... இப்படியெல்லாம் ஆகும்னு எனக்குத் தெரியாது... சத்தியமா தெரியாது!"

"எது எப்படியோ... அடிச்சு பிடிச்சு பிழைச்சுகிட்டு இருந்தவங்களுக்கு அடிக்காம பிடிக்காம ஏமாத்திப் பிழைக்க வழி கிடைச்சிருக்கு. அய்யனாருக்கும் அது பிடிச்சுப் போச்சு!

'நாம கஷ்டப்பட்டப்போ யாரும்மா உதவி செய்தாங்க? இது மோசமான சமூகம்மா. இவங்களையெல்லாம் தினம் கால் விழ வெச்சு ஏமாத்தியே கொல்லணும். அதுல தப்பே இல்லை'ன்னு தத்துவம் பேசுறான்.

அவன் அக்காங்களும் அதுல தப்பு இல்லைங்கறாங்க. எங்கெங்கிருந்தோ பொட்டி பொட்டியா பணம் வருது. இவனும்

இந்த பூஜை... அந்த பூஜைன்னு உலகத்துல இல்லாத பூஜை எல்லாம் பண்றான்.

நல்ல பையனா இருந்த வரை நாய்கூட மதிக்கல! இப்ப ஒண்ணா 'நம்பர்' பித்தலாட்டக்காரன் ஆகிட்டான். ஆனா, ஊரே 'ராஜ குரு'ங்குது.

அய்யனார் சொல்றது 'வாஸ்தவம்'தான்னும் தோணுது. பேராசைப் பிடிச்ச ஜனங்களுக்கு நல்லது–கெட்டது தெரிய மாட்டேங்குது. என்னை என்ன செய்யச் சொல்றே?" என்று பெருமூச்செறிந்தாள் கன்னியம்மாள்.

"அம்மா... அவனுக்கு சில சக்தியைப் பார்வையாலேயே சாமி கொடுத்தது இப்படி நடந்துக்கறதுக்காக இல்லை. சமூக குற்றத்தைத் தடுக்க!"

"இவனும் திருத்தறதாம்ப்பா சொல்றான். ஏமாத்தித் திருத்தறதுன்னு ஒரு வழி இருக்காமல்ல?"

"ஏமாத்தினா சக்தியெல்லாம் போயிடும்மா! அது பயன்படாது."

"அதை அவனே ஒத்துக்கிறானே! 'முந்தியெல்லாம் காதுக்குள்ள ஒரு குரல் கேட்கும்மா. அது சொல்ற மாதிரி நடப்பேன். இப்ப கேட்க மாட்டேங்குது. ஆனா, நான் இதை வெளியே சொல்ல முடியாது. ஊர் நம்பாது. ஒருவேளை ஊர் நம்பினாலும், ரவுடிப் பசங்க விடமாட்டாங்க. சக்தி இல்லேங்கறது தெரிஞ்ச நிமிஷம் கொலை பண்ணிப் போட்டுருவாங்க'ன்னு சொல்றான்."

"அப்ப இப்படியேதான் இருக்கப் போறானா?"

"வேற வழி? உன்கிட்ட சக்தி இருக்கிறது தெரிஞ்சா... உன்னையும் அவன் மாதிரி ஆக்கிடுவாங்க இவங்க."

"இல்லாம்மா... நான் மாறமாட்டேன். நான் மாத்துறவன்ம்மா. மாறுகிறவன் கிடையாது!"

"இதைவிட சத்தம் போட்டுப் பேசினவன் அய்யனார். ஆனா, பணம்–காசு, பதவி–சுகம் எல்லாம் கொஞ்சம்

கொஞ்சமா மாத்திடிச்சு.

நான் சொல்றேன் தம்பி. அபூர்வ சக்திங்கறது மண்ணுக்குள்ள ஓடுற வேர் மாதிரி மறைஞ்சிருக்கணும். வெளியே தெரியவே கூடாது. தெரிஞ்சா மரமும் தழைக்காது. வேருக்கும் வேலை இல்லாம போயிடும்!"

"அம்மா..."

"போப்பா... நீயாவது ஏமாறாம உன் வழியில போ. இனி எந்த சாமியாரையும் பார்க்காதே! யார் கருணையும் நமக்கு வேணாம். நாம நாமளா இருப்போம்."

அவனுக்கு பொட்டில் உறைக்கிற மாதிரி பதில் சொன்னாள் கன்னியம்மாள். கடைசியாக சாமியார் சொன்னது ஞாபகத்தில் வந்தது. 'என்னை இப்படியாக்க விருப்பம் இல்லாமத்தான் அய்யனாரை ஆட்கொண்டிருக்கிறார். அந்தக் கருணையை சந்தேகித்துவிட்டோமே!

இறுதியாக அவர் சொன்னதும் ஞாபகத்தில் மின்னியது. 'அடுத்த முறை என்னைச் சந்திச்சா கேள்வி கேட்கமாட்டே... ஆனந்தக் கண்ணீர்தான் வடிப்பே!' என்றாரே?

எவ்வளவு பெரிய உண்மை?

அவன் கண்களில் இருந்து அப்போதே ஆனந்தக் கண்ணீர் பெருக ஆரம்பித்தது.

'சாமி'... மனதுக்குள் அவரை நினைத்துக்கொண்டு கைகளைக் கூப்பினான்.

ஆனால், கன்னியம்மாளுக்கு மட்டும் அவனது கைகூப்பலுக்கு காரணம் தெரியவில்லை!

முற்றும்